60

காவேரி

விரோதி - ஆனி June - 1949



இதோ!

உங்களுக்காக
புதியவிதமான உயர்ந்த ரக,
காம்பு மண்வெட்டி

A I C
TRADE MARK

டாடா
அக்ரிகோ

எல்லா பெரிய
இரும்பு கடைகளிலும்
கிடைக்கும்.

தி டாடா அயரன் அண்டு ஸ்டீல் கம்பனி லிமிடெட்
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்: 23 B, நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா.
பிராஞ்ச் ஸேல்ஸ் ஆபீஸ்:
ஓரியன்டல் பில்டிங்ஸ், 108, அரண்மனைக்காரத்தெரு, ஜீ. டி. மதருஸ்.

ஜூன் 3உ முதல் சென்னை கிரௌன், ஸ்டார்

இரு தியேட்டர்களிலும் மற்றும் தமிழ்நாடு,
ஆந்திரதேசத்தில் அநேக நகரங்களிலும்
இப்பொழுது நடைபெறுகிறது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1949
MADRAS



ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்

நவஜீவனம்

நித்திய வாழ்க்கையில் நிகழும் விந்தைகளை நினைவுறுத்தும் சித்திரம்

நாகய்யா · கண்ணாம்பா · வரலக்ஷ்மி · ஸ்ரீராமன் ·
டி. ஏ. ஜயலக்ஷ்மி · டி. ஆர். ராமச்சந்திரன் · எல். நாராயண ராவ் நடித்தது

டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

ஸ்டூடியோ ஜெமினி

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

•

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

ரூ. 500 இனும்!

ஓர் அதிசயமான புதுமை!!

மாயசக்திவாய்ந்த மோதிரம்

மாந்த்ரீகம், வசியம் முதலிய சக்திகளின் உதவியால் இந்த மோதிரம் தயாரிக்கப் படுகிறது. இது ஓர் அதிசயக்கருவி! இதை அணிபவர் எவ்வளவு கஷ்டம் அல்லது தாங்கமுடியாத துயரத்தை அனுபவிப்பவராயினும் சுகம் அடைவர். இம்மோதிரம் உங்களை எல்லாவித அபாயங்களினின்றும், பிணியினின்றும் காப்பாற்றவல்லது. கிரக தோஷங்களும் நீங்கும். இம்மோதிரம் அணிபவர் தாம் விரும்புபவரை வசியப்படுத்தவும், தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரவும் சக்தி பெறுகிறார். காதல், வழக்கு, மற்றும் தொழில் அல்லது வியாபாரத்துறைகளில் அமோக வெற்றி பெறுவதுடன் ஏராளமான பொருட்செல்வமும் அடையக்கூடும். சுருங்கக் கூறுமிடத்து, உங்களுக்கு எப்பொழுதும் உற்ற துணைவனாக விளங்கக்கூடியது இம்மோதிரம்! ஒருமுறை உபயோகித்தால் இதன் அபூர்வ இயல்புகள் விளங்கும்! முதல் நாளிலேயே வெற்றியின் அறிகுறிகள் தோன்றும்!!

ஒரு மோதிரத்தின் விலை ரூ. 2—0—0   மூன்று மோதிரங்களின் விலை ரூ. 5—0—0

(பாக்கிங் தபாற்செலவு வேறு)

MAHAKALI ASHRAM
No. 247, :: KANPUR.

எப்போதும்

தலைமயிர் குளுமையாக இருக்க

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1949
MADRAS

எல்லா ஹேர் ஆயிலும் ஒன்றாகுமா? கட்டாயம் இல்லை. இதோ இருக்கிறது ஹேர் ஆயிலின் மூன்று வெவ்வேறு குணங்களும் ஒருங்கே பொருந்தியது குளுமையோடு குட மலர்ச்சி தருவதல்லாமல் மனதிற்கு உகந்த மணம் வேறு தருவது.

ப்ரு-அம்லா
ஹேர் ஆயில்

வாஸலீன
கேஸ்டர் ஆயில்

வாஸலீன
கொகொநட் ஆயில்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.

Shilpi SOM 40 TAMIL.

எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!



மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான் களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண் டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

ரூ. 300 இனாம்

இந்த மகா காளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்ததை கைகூடும். உங்கள் விரோதி கள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்க ளுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவை யில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—14—0. தபாற்செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (C. V. K.)

HOSHIARPUR.

சென்னை-600 008.
198051
மசி.N41KV
N48:8'11

நாணயமான விலைகள்

Godrej ரிஜிஸ்டர்டு கோத்ரெஜின்

ஒவ்வொரு பொருள்களின்

சோப்புகள் - கிளிசரின்

இவைகளின் நாணயமான விலைகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1949
MADRAS



நெ. 1—11 அணா



நெ. 2—$8\frac{1}{2}$ அணா



'வத்னி'—6 அணா
'வத்னி' (சிறிய சைஸ்)—2 அணா

ஸாண்டல்—7 அணா

லிம்டா (வேப்)—7 அணா



கஸ்—7 அணா

டர்கிஷ் பாத்
$4\frac{3}{4}$ அணா



ஷேவிங் ஸ்டிக்
(கார்டன்)—$7\frac{1}{2}$ அணா
(தகரடப்பா)-10 அணா



ஷேவிங் ரவுண்டு
$4\frac{1}{2}$ அணா

கிளிசரின்
ரூ. 66—8-0, 56 பவுண்டு (சி பி)
ரூ. 33-12-0, 28 பவுண்டு (சி பி)
மேலும் 5, 10 அந்தர் வெயிட் பாக்கிங்குகள்.

சுங்க வரி, ஆக்ட்ராய், வேறு வரிகளிருந்தால் விலை சிறிது கூடும்.

அடக்க விலை அதிகமாயிருப்பினும்

விலையில் மாறுதலில்லை.

கோத்ரெஜ் சோப்ஸ் லிமிடெட்.
தாவர எண்ணெகளால் சோப்புகளை முதல் முதல் இந்தியாவில் செய்தவர்.

பார்லி வாட்டரும், கஞ்சியும்
இவ்விதம் சுலபமாகத் தயாரிக்கலாம்

பார்லி வாட்டர்: பியூரிடி பார்லி இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு எடுத்துக்கொண்டு சிறிது ஜலம் சேர்த்துக் கலந்து ஒரு பைன்ட் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவிடவும். பிறகு ருசிக்குத் தக்கபடி உப்பு சர்க்கரை அல்லது எலுமிச்சம்பழ ரஸம் சேர்க்கவும்.

கஞ்சி: இதை வழக்கம்போலத் தயாரிக்கவும். ஆனால் தயாரிக்க இருபது நிமிஷ நேரம் தான் ஆகும். ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி எட்டு ஸ்பூன் சாதாரண பார்லி அரிசிக்குச் சமம் என்பது ஞாபகமிருக்கட்டும்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX-4 TAM

லைசென்ஸ் தேவையில்லாத

அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

NO LICENCE NEEDED

உங்கள் உயிர், வாழ்வின் கௌரவம், ஆஸ்தி, இவைகளைத் துஷ்டர்கள், விலங்குகள், முதலியவைகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்

வீட்டிலும், பிரயாணம் செய்யும் பொழுதும் இந்த அழகிய உறுதியான ரிவால்வர் உங்களுக்குச் சிறந்த நம்பகமான தோழனாக விளங்கும். ஒன்றன்பின் ஒன்றாக, தானே ஆறு தடவை சுடுவதற்கான ரவைகள் பொருந்திய அமெரிக்கன் பிஸ்டல்களுக்குச் சமமானது. 15 அவுன்ஸ் கனமும் 9 அங்குல நீளமும் உள்ள இது பயங்கர சப்தத்துடன் நெருப்பைக் கக்கிக்கொண்டு வெடிக்கிறது. இன்றே இதில் ஒன்றை ஆர்டர் கொடுங்கள். குறைந்த விலையுள்ள இந்த மெய்காப்பாளன் இன்றி ஒரு போதும் இருக்காதீர்கள்.

ரவையுடன் ஒவ்வொன்றின் விலை

ரகம் 111 Rs. 5-0-0, 222 Rs. 6-8-0, 333 Rs. 7-8-0, 444 Rs. 8-8-0

குறிப்பு: *555 ஸ்பெஷல் வெள்ளி முலாம் பூசப்பட்டது ரூ. 10-0-0 மேற்கொண்டு 4 டஜன் ரவைகள் ரூ. 4-8-0 பிஸ்டல் உறை கொண்ட தோல் பெல்டின் விலை ரூ. 5-0-0, லூப்ரிகேடிவ் ஆயில் பாட்டில் ஒன்று விலை ரூ. 1-0-0.*

HINDUSTAN TRADERS

P. Box No. 286, :: (KANPUR U. P.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1949
MADRAS

தி யுனைடெட்
கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 45,00,000

●

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா (வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா (வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா

பைஜ்நாத் ஜலான்

கோவிந்த்லால் பங்கூர்

மதன்மோகன் R. ரூயியா

மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா

மோதிலால் தபூரியா

நவீன் சந்த்ர மபட்லால்

P. D. ஹிமத்சிங்கா

R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்

B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

அழகுக்கு அவசியம் ஆரோக்யம். ஆரோக்யமும் சௌந்தர்யமும் பெண்ணினத்தின் பிறப்புரிமை அருண கர்ப்பாசய ரோகங்களை நிவர்த்திசெய்து தேகாரோக்யத்தையும் சௌந்தர்யத்தையும் அளிக்கவல்லது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17

1949-50-ல் என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1949-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri

Swami Satnarayan Jotish Ashram

(C. V. K.) HOSHIARPUR.

இந்தியாவில் மட்டுமன்றி, வெளி நாடுகளிலும் "பாரதி"க்கு ஏக கிராக்கி



குறைந்த செலவில் நேர்த்தியான அச்சடிப்பு, துரித வேலை, நீண்ட உழைப்பு. எளிய ஆனால் புதிய அம்சங்கள் பொருந்திய மெகானிஸம் இவைதான் இந்தியா. ஏன், மற்ற இதர நாடுகளிலுமுள்ள, அச்சாபீஸ்களில் *பாரதி* முக்கிய ஸ்தானம் வகிக்கக் காரணம்?

இத் தேசத்தில் இன்னும் அநேக அச்சாபீஸ்கள் அமைக்க இடமிருக்கிறது. சிறிய முதலில் பாரதி பிரிண்டிங் மெஷினின் உதவியைக் கொண்டு, நீங்கள் ஓர் லாபகரமான தொழிலை அமைத்துக்கொள்ளலாம்.

BHARATI

டெமி ஸயிஸ் பிளாட் மெஷின்கள், ஹாப்-டெமி, ஹாப்-கிரௌன், ஹாப் பூல்ஸ்காப் ஸைஸ்களில் உள்ள டிரெடில் மெஷின்கள் கிடைக்கும்.

கால்களினாலோ அல்லது எலெக்டிரிக் பவரினாலோ ஓட்ட வசதியுள்ளது விவரங்களுக்கு எழுதவும்.

பாரதி

பிரிண்டிங் மெஷின்

இந்தியா மெஷினரி கம்பெனி லிமிடெட்.

92, ஸ்டிராண்ட் ரோடு :: கல்கத்த

போன் : வெஸ்ட் 1574

உங்கள் விருப்பத்திற்கு

காவேரி கலர் பிரஸ்

(குவாலிட்டி பிரிண்டர்ஸ்)

●

எல்லாவகையிலும்

சுத்தமும், நேர்த்தியுமான அச்சுவேலைகளுக்கும்

கலர் பிரிண்ட்களுக்கும் கலந்து ஆலோசிக்கவும்.

போன் No. 88

தந்தி : 'காவேரி'

பெஸண்ட் ரோடு :: கும்பகோணம்

சிறிய நகர பாடசாலை

குழந்தைகள் தங்கள் வருங்கால முன்னேற்றத்திற்கு வேண்டிய முக்கிய நோக்கங்களையும் அபிலாஷைகளையும் சிறு வயதில் அடைவது பள்ளிக்கூடங்களில்தான். ஆகையினுல் பாடசாலை கட்டிடங்களும் அதன் சுற்று வட்டாரங்களும், அவர்களின் தேக சுகத்தை விருத்தி செய்வதற்கு அனு குணமாக இருப்பதுடன், குழந்தைகளின் சுசி ருசியையும் வளர்க்கக்கூடிய முறையில் அழகாக அமைந்திருக்க வேண்டும்.

அந்த: ஆரோக்கியத்தையும் ஆனந்தத்தையும், ரேயின் போர்ஸ் கான்கிரீட்டை விட வேறு எந்தக் கட்டிட நிர்மாணப் பொருவாலும் கொடுக்கமுடியாது. கான்கிரீட் கட்டிடங்கள் நீண்டகால வாழ்வுடையவை. சிக்கனமானவை. நெருப்பினுல் அழியாதவை. மேலும் முக்கியமாக, பக்கத்திலும், கீழும், மேலும், வகுப்புகள் நடக்கும் பள்ளிக்கூடங்களில் சத்தத்தைத் தடுக்க மிகவும் உதவுகின்றது.

மற்ற விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள் :— தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 9 மவுண்ட ரோடு, மதருஸ்.

இலவச ஸி.ஏ.ஐ.
சே வை

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்
ஏ.ஸி.ஸி. லிமிடெட்டின் விற்பனை மானேஜர்கள்



குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.

12A, Lingha Chetty Street, = G. T. MADRAS.

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா, ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKARAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25

Telephone : South 308

Stockists:

Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.

பொருளடக்கம்

விரோதி மலர் 8 } { ஆனி இதழ் 11

சென்னை வரி விசித்திரம் 15

மகாசபை 17

எனது லண்டன் பிரயாணம் 20
மிஸஸ். லீலா கோபாலன்

இந்தியாவின் நந்தவனம் 23
ஆர். எஸ்.

வெளியூர்க் கடிதம் 31
சாரி

தியாகம் 42
டி. எஸ். குழந்தைக்காதன்

புரியாத பொருள் 51
சௌரி

பட்டண் பெருமை (தொடர் கதை) 59
கே. எம் முன்ஷி

முல்லைக் கொடி 75
ஜெகசிற்பியன்

லக்ஷியக் கனவு (தொடர் கதை) 81
கே. சுந்தரம்மாள்

டிகிரிப் பால் 93
சி. வி. ராமகிருஷ்ணன்

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்ல.

மேன்மையின்

பெருமை அநேக வருஷ உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



★

சைக்கிள்கள்

சைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு

நம்பி வாங்க

இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்-1.

தந்தி:—''சைக்கிள்ஸ்'' போன்: 3168

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1949
MADRAS

காவேரி

விரோதி மலர் 8	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	ஆனி இதழ் 11

சென்னை வரி விசித்திரம்

சென்னை அரசாங்கம் விதிக்க உத்தேசித்துள்ள புதிய வரித் திட்டங்கள் பெரும்பாலும் பொதுஜன ஆதரவற்றவை; ஆட்சி முறை அறிந்தவர் விதிக்கும் வரிகளல்ல.

விற்பனை வரி என்பதை ஒரு பைசாவிலிருந்து இன்று 4½ பைசாவாக உயர்த்தியிருக்கிறார்கள். சினிமா, காப்பி விளம்பரங்கள் இப்படியாக அனேகம் வரிகள். பேச்சளவில் இவையெல்லாம் அமித லாபம் அடிக்கும் வியாபாரிகளைத்தான் பாதிக்கின்றன என்று பல பாமரப் பொது மக்கள் தேற்றிக்கொள்ளுகிறார்கள். மந்திரிகளும் வேண்டுமென்றே இந்த நம்பிக்கையை வேரூன்றச் செய்கிறார்கள். ஆனால், விஷயம் அறிந்தவர்கள் இதில் ஏமாறமாட்டார்கள் என்பது திண்ணம். இவை அனைத்தும் மறைமுகமான வரிகள் எனப் பெயரிடப்பட்டவை. உபயோகிப்பவர்களைத்தான் இறுதியில் இவை பாதிக்கும். பணக்காரர்களுக்கு விதிக்கப்பட்ட வரி என்று பசப்புவது பெருத்த பித்தலாட்டமாகும்.

பெரிய பணம் படைத்தவர்களை மட்டும் பாதிக்கும் முறையில் இவை விதிக்கப்பட்டுள்ளது என்றால் அதை ஒருவாறு ஒத்துக்கொள்ளலாம். ஆனால் அதுதான் இல்லை. காப்பி ஹோட்டல்கள், சினிமாக்கள், பஸ் பிரயாணம் இவற்றை உபயோகிப்பவர்களுள் பெரும்பாலோர் சாமானிய ஏழை மக்கள். இவைகளின் மீது வரி விதித்தால் அதை மக்கள்தான் கொடுக்கச் செய்வார்கள் வியாபாரிகள். ஹோட்டல்களில் பதார்த்தங்களின் விலை உயரும். பஸ் கட்டணம் அதிகமாகும்.

இதன் விளைவென்ன? சாமானிய ஜனங்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையைத் தாங்கள் ஈட்டும் சொற்ப ஊதியத்திலிருந்து விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும் இக் காலத்தில் நடத்த மல் யுத்தம் செய்துகொண்டிருக்கையில் இப்புதிய வரிக் கட்டணங்களும் அவர்கள்மீது சுமத்தப்படும். ஜனநாயக ஆட்சி முறையினால் கண்ட பலன் இதுதானா? கள் அரக்கனை ஒழித்து, மிஞ்சிய சொற்ப பைசாக்களை அரசாங்கப் பிசாசு அரிசி, புளி, பலகாரங்கள் வாங்கும்போது மறைமுகமாக விழுங்குவது நேர்மையா என்பதைச் சற்று ஆலோசித்தல் அவசியம். அதிலும் எல்லா விலைவாசிகளும் ஓங்கி நிற்கும் இக்காலத்திலா இவ் வரிகள்? மத்திய அரசாங்கத்தார் விலைவாசிகளைக் குறைக்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கையில் இப்படி ஏழைகளின்மீது வரிப் பளுவை ஏற்றிக்கொண்டு போனால் பின்பு கதிமோக்ஷம்தான் என்ன?

கவர்மெண்டார் மது விலக்கினால் அடைந்த நஷ்டத்தை வேறு நேர்முகமான வரிகள் மூலம் ஈடு செய்ய முயன்றுவிட்டதா? கவர்மெண்டார் போடும் வரிகள் பெரும்பாலும் சாமான்களின் மீது போடப்படுவதால் ஏழைகளைத்தான் பாதிக்கிறது. ஏன் பெரிய நிலச்சுவான்தார்கள், பெரும் பணம் சேமித்து வைத்திருப்பவர்கள் மீது நேரடியான வரிகள் விதிக்கலாகாது? துண்டு விழும் நாலு ஐந்து கோடி ரூபாயை இவர்களிடமிருந்து வசூலிக்க முடியாதா? சுகபோக வாழ்க்கைக்குரிய சாதனங்கள் மீது மட்டும் ஏன் வரிகள் விதிக்கக் கூடாது? இதை எல்லாம் மந்திரிகள் ஆலோசிக்கா

மல் விற்பனை வரி ஒன்றையே ஏற்றிக் கொண்டு போனால், அவர்களுடைய புத்திக் கூர்மையை யாரால் மெச்ச முடியும்!

இவ்வரிகள் போதாவென்று பத்திரிகை விளம்பர வரியாம். இந்நாட்டில் பெரும்பாலான பத்திரிகைகள் நஷ்டத்தில்தான் நடத்தப்படுகின்றன. சொற்ப விளம்பர வருமானத்திலிருந்து நஷ்ட ஈடு செய்து கொண்டு உயிர் வாழ்ந்து வருகின்றன. இப்பொழுது பலத்த போட்டி வேறு. இந்நிலையில் விளம்பர வரி வேறு போடப்பட்டால் சாமானிய பத்திரிகைகள் மூடப்பட வேண்டியவையே. கனம் பிரதமர் ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜா அவர்கள் சமீபத்தில் பேசுகையில் சென்னையில் பெரிய பத்திரிகைகள் கொள்ளைலாபம் அடைகின்றன என்றும், அவைகள் தற்போதைய மந்திரி சபையை ஆதரிக்க வில்லை என்றும், அவைகள் பாதிக்கப் பட்டு மறைவது நல்லதென்றும் குறிப்பிட்டார். பொறுப்புள்ள ஜனநாயக ஆட்சி நடத்தும் பிரதமர் இப்படிப் பேசுவது ஆச்சரியமான விஷயம். பத்திரிகைகள் இந்த மந்திரி சபையை ஆதரிக்க வில்லை என்பது உண்மை என்றே வைத்துக்கொண்டாலும், அதற்கு விரோதமாக உள்ள பத்திரிகைகள் வாழ இந்நாட்டில் இடம் கிடையாதா? அவைகளைப் பாதிக்கவென்றே இவ்வரி விதிக்கப்பட்டுள்ளதா? அல்லது அத்தகைய பத்திரிகைகள் தன்னை ஆதரிக்கச் செய்ய வேண்டித் தானா இவ்வரிப் பூச்சாண்டி? நோக்கம் விளங்கவில்லை. இவ்வரி விதிப்பினால் பத்திரிகைகள் தங்கள் சுதந்திரத்தை இழந்து மந்திரிகள் விருப்பப்படி நடக்கச் செய்யலாம் என்று நினைப்பது அறிவீனமாகும். யதேச்சாதிகார பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துத் தேசிய இயக்கத்திற்குப் பாலூட்டி வளர்த்து வந்த பத்திரிகைகளா இந்தச் சில்லுண்டி மந்திரிகள் ஒப்பத் திருத்திக் கொள்ளப் போகின்றன? இல்லவே இல்லை. மந்திரிகளும் பொது மக்களைத் தான் சுட்டிக் காட்டுகிறார்கள். தங்களுக்கு மக்கள் ஆதரவளிப்பதாகப் பறை சாற்றிக் கொள்கிறார்கள். இது முற்றிலும் தவறு. தற்காலிகமாகச் சட்ட சபை மெம்பர்களின் ஆதரவு பெற்றதினால் இன்று குமாரசாமி ராஜா மந்திரி சபை பதவியிலிருக்கிறதே ஒழிய, பொது மக்கள் விருப்பத்தினால் அல்ல. காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு வாக்குக் கொடுக்கப்பட்டது. காங்கிரஸுக்கு மக்கள் ஆதரவுள்ளது. எனவே வருஷந்தோறும் மக்களுடைய தொடர்பின்றி மாறிக் கொண்டிருக்கும் மந்திரி சபைக்கு, அவர்களின் ஒவ்வொரு செயலுக்கும், பொதுமக்கள் ஆதரவு இருக்கிறது என்று கூறுவது தவறு.

பத்திரிகைகள் பொது மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்குகின்றன. தேசியத்தை இந்நாட்டில் வளர்த்ததில் பத்திரிகைகளுக்கும் பெரும் பங்குண்டு. இவைகளை ஊன்றுகோலாகக் கொண்டுதான் காங்கிரஸ் ஸ்தாபனம் மக்களைத் தன்பால் இழுத்துக்கொண்டு வெள்ளையனை விரட்டியது. இவற்றை யெல்லாம் மறந்து இன்று குமாரசாமி ராஜா போன்ற மந்திரிகள் தங்கள் தியாகத்தினால் மட்டுமே சுயராஜ்யம் கிட்டிவிட்டது, இனி ஊன்றுகோல் தங்களுக்குத் தேவையில்லை, இப் பத்திரிகைகள் தங்களுடைய செய்கைகளை ஆதரிக்க வில்லை, எனவே அவைகள் மறைவது நலம் என்று பேசினால், அதைக்கண்டு பொதுமக்கள் நகைப்பார்களே யொழிய அவரை ஆதரிக்கமாட்டார்கள். தேசிய இயக்கத்தில் சேர்ந்து சில மாதங்கள் சிறைசென்றால் ஐந்து ஏகர் நிலம்; அறுபது வருஷங்களாக, தேசிய காங்கிரஸ் தோன்றிய நாள் முதற்கொண்டு, அதற்குப் பெரும் தூண்போல் நிற்பதோடு, மக்கள் உள்ளங்களை இதன்பால் லயிக்கச்செய்து அதைப் பாலூட்டி வளர்த்து வெள்ளையனை விரட்ட உதவிய பத்திரிகைகளுக்கு அதன் ஜீவனையே அணைக்கக்கூடிய வரி விதிப்பு! காரணம்? தற்போதையமந்திரிசபையைப்பத்திரிகைகள் ஆதரிக்கவில்லை; எனவே அவைகள் மறைவது நலம். பேஷ்! குமாரசாமி ராஜா அவர்களே! தங்களுடைய ஆட்சியின் நேர்மைக்கு இப் பேச்சு ஒன்றே போதுமானது.

காங்கிரசின்பேரால் தங்களைப் பதவிக்கேற்றிய பொதுமக்களை வரிப்பளுவினால் கூனச்செய்வதோடு தங்களை வளர்த்த பத்திரிகைகளையும் மாய்க்கத் திட்டம் வகுத்த ராஜா மந்திரிசபை நீடூழி வாழ்க!

மகா சபை

இந்தத் தடவை வம்பர் மகாசபையின் திருக்கூட்டம் ரிடயர்ட் இன்ஜினியர் ராவ் பகதூர் ரகுபதி சர்மா அவர்களது முகாமையில் ஆரம்பமாயிற்று. அபரிமிதமாகப் பொருளைக் குவித்தும் பட்டண வாசத்தில் நிம்மதியைக் காணுமல் சர்மா அவர்கள் கிராமத்தில் குடியேறி வேறு வேலை செய்ய மனமில்லாமல் மகாசபையில் ஐக்யமாகி விட்டார். "சுட்டகுழாய்' என்று கிண்டல் பஞ்சு அவரை ஏளனம் செய்வதற்குச் சரியாக, ஒரு ரிடயர்ட் உத்தியோகஸ்தர் என்பதைக் கொஞ்சமும் அந்தத் தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தாகூட மதிக்கவில்லை. சர்மா அவர்கள் அதிகாரிகளுக்கு அனுப்பும் மனுக்கள் எல்லாம் நிவாரணமின்றித் திரும்பி வந்து கொண்டிருந்தன. சர்மாவுக்கு அன்று அசாத்திய கோபம். லஞ்சம், ஊழல் அதிகாரிகளிடையே அதிகமாகிவிட்டதை அழுத்தம் திருத்தமாகக் கண்டித்தார். "இஞ்சினியரிங் டிபார்ட்மெண்டில்தான் லஞ்சப்பேய் உக்கிரமாகத் தாண்டவமாடுகிறதாமே" என்று கிட்டு போட்ட வெடிகுண்டு சர்மாவைத் திகைக்கச் செய்தது." இரண்டு கையும் தாராளமாக விரித்து நீட்டி வாங்கக் கூடிய இலாகா அதுதான்" என்று கனபாடிகள் வேறு சொல்லிவைத்தார். "கனபாடிகளே! உமக்குக் கையை நீட்டி நீட்டி வாங்கி வழக்கம்! உளறுகிறீர்!" என்று சர்மா உஷ்ணப்படவே பேச்சு வேறு வழியில் திரும்பியது.

பஞ்சு: கனபாடிகளே, திருவண்ணுமலையில் ஆச்சாரியார் கோவிலைத் திறந்தாரே, அந்த வைபவத்தைக் கேட்டேளோ?

கன: நான் நேற்றுத்தானே ஆச்சாரியாளைத் தரிசனம் செய்துவிட்டு வந்தேன். அவர் திருவண்ணுமலைக்கு எப்பொழுது போனுர்?

கிட்டு: கோவிலைத் திறந்தது ஸ்ரீ சங்கராச்சாரியஸ்வாமிகள் அல்ல. கவர்னர் ஜெனரல் கனம் திரு சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார்.!

கன: அட கஷ்டமே! நாமம் போடற பேர்வழியா சிவன்கோவிலைத் திறப்பது? கோவில் கும்பாபிஷேகம் என்று கேள்விப்பட்டிருந்தேன். கோவிலைத் திறப்பது என்பதை இதுவரை யாரும் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை.

ஆகம விதிப்படி யாகசாலை, கடஸ்தாபனம், சக்தியை ஆவாகனம் செய்தல், மருந்து சாத்துதல் எல்லாம் ஏற்பாடாகச் செய்து விசேஷமாக அன்னதானம் செய்து கும்பாபிஷேகம் செய்வது சாஸ்திரம், சம்பிரதாயம், எல்லாம். ஆஸ்பத்திரியா, பாலமா, பள்ளிக்கூடமா திறப்பதற்கு? இனிமேல் வேலையில்லாத அதிகாரிகள் எல்லோரும் கோவில்கள் திறக்க ஆரம்பிச்சுடுவார்கள். கடவுளுக்குச் சான்னித்தியம் குறைந்து போயிடுத்து என்றுல் ஏன் குறையாது?

கிட்டு: கடவுள் கையாலாகாத கபோதி என்பதைத் தெரிந்துதானே தேவஸ்தானங்களையும், அவைகளின் சொத்துக்களையும் அரசாங்க ஆதிக்கத்தில் எடுத்துக் கொள்ளச் சட்டம் வரப்போகின்றது?

கன: நல்ல காலமில்லை. அந்த ஓமாந்தூரார் வாய் கிழியச் சட்டத்தைப்பற்றிப்பேசினுரே, அவர் கதி என்ன ஆச்சு! பதவி போச்சு, பவிஷூம் போச்சு! ஞானமில்லாத கொசப்பசங்கள் கடவுள் நிந்தனை செய்யலாம்!.

பஞ்சு: கனபாடிகளே, உஷார்! நாக்கை அடக்கிப்பேசும்! இனி குயவன், கொசவன் என்று ஒரு ஜாதியாரைக் குறிப்பிடக் கூடாது. 'குலாலர்' என்று அழைக்க வேண்டும் என்பதாகச் சர்க்கார் உத்தரவு.

கன: அடகஷ்டமே! கடவுள் திருநாமம், ஊர்ப்பெயர் இவைகள்கூடப் பழம் தமிழர்கள் உபயோகித்தபடி இருக்கவேண்டும் என்று சர்க்கார் வெகு அக்கரையாக முன் சொன்னுர்களே? பக்தர் திரு நீலகண்டரைப்பற்றிய திருப்பாசுரங்களில்கூட, 'குயவனுர்' என்று வருகிறதே? எவன் பட்டினிகிடந்தான் நல்ல பெயரை மாற்ற வேண்டுமென்று?

கிட்டு: பட்டினி கிடப்பது எதற்குத் தான் என்பது இப்பொழுது நிர்ணயமில்லாமல் போய்விட்டது. வடக்கே

ஒரு ஊரில் ஒரு பெண் தன்னைக் கலியாணம் செய்துகொள்ள மறுத்ததால் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க ஒரு வாலிபன் துணிந்துவிட்டதாகப் பேப்பரில் போட்டிருந்தது. இனி ஜில்லா போர்டுக்கு நிற்கத் தன்னைக் காங்கிரஸ் கமிட்டி தேர்ந்தெடுக்கவில்லை என்று ஒரு காங்கிரஸ்காரன் உண்ணு விரத மிருந்தாலு மிருப்பான்.

சர்: இப்பொழுது என்ன ஜில்லா போர்டுக்குத் தேர்தல் அவசரம்?.

பஞ்: உமக்கு மூளை மழுங்கிப் போய் விட்டது வர வர! சட்ட சபைத் தேர்தல்கள் வந்தால் இந்த ஜில்லா போர்டு அங்கத்தினர்களாகிய கல்தூண்கள் வெகுவாக உதவுவார்கள் என்று நினைத்து இருக்கலாம்.

கன: ஜில்லா போர்டு தேர்தலுக்குக் காங்கிரஸ் கட்சி என்ன, மண்ணாங்கட்டி என்ன? சட்ட சபையில் எதிர்ப்பில்லாத இந்தக் கும்பல் என்ன சாதித்து விட்டது. கிரகச்சாரம்!

சர்: கிரகச்சாரம் என்று சொன்னவுடன் ஞாபகம் வருகிறது. புதிதாக இப்பொழுது ஒரு கிரகம் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. சூரியனைச் சுற்றும் கிரகங்களுக்குள் இரண்டாவது பெரிய கிரகமான 'நெப்டியூன்' சமீபமாக 'டிரிடான்' என்று ஒரு உபகிரகம் இருக்கிறதாம்.

கன: உலகத்துக்கே கிரகக் கோளாறுகள் ஏற்பட்டிருக்கு. சண்டையுமில்லை, சமாதானமும் காணோம்! நியாயம், ஒழுக்கம் எல்லாம் எங்கேயோ மறைந்து விட்டன. ஆனல் முடிவில் பகவான் சொன்னது போல் 'ஸத்யமேவ ஜயதி' அதாவது உண்மை வெல்லும்.

பஞ்: விலை மட்டும் அநியாயமாக இல்லாவிடில், கனபாடிகளே, ஒரு வீசை சர்க்கரையை உமது வாயில் திணிப்பேன்! நீர் வடமொழியில் உளறினதை அப்படியே நமது இந்தியசர்க்கார் லக்ஷிய வாசகமாகத்தங்கள் சின்னத்திலும் முத்திரையின் கீழும் தேவநாகர லிபியில் பொறிக்கப் போகிருர்கள்.

கிட்: வேறு வினை வேண்டாம். இது மற்றொரு ஆரியச்சூழ்ச்சி என்று சிலர் கூத்தாடுவார்கள்.

கன: உண்மை வெல்லும் என்ற நம்பிக்கையில்லாதவர்கள் வேறு என்ன செய்வார்கள்? ஹிந்தியைப் பற்றி அர்த்தமற்ற கூச்சல் இல்லையா? எல்லாம் அது போல்தான்.

சர்: இந்தப் பைத்தியக்காரர்களுக்குக் கல்லிடைக்குறிச்சி தேசபக்தர் தியாகமூர்த்தி ஸ்ரீயக்ஞேசுவர சர்மா நல்ல சூடு கொடுத்திருக்கிருர். 'ஹிந்தி தெரியாவிட்டால் தமிழர்கள் கிணற்றுத் தவளைகளாக வாழ வேண்டியதுதான்' என்று நன்ருகச் சொல்லியிருக்கிருர். உஸ்! என்ன உஷ்ணம் அப்பா!

வெள்ளைக்காரன், வெள்ளைக்காரன் தான். நம் இஷ்டம் போல் உஷ்ணம், குளிர்ச்சி இவைகளில் வசதி செய்து கொள்ளச்சாதனங்கள் கண்டு பிடித்திருக்கிருன். 'ஏர் கண்டிஷன்' (air condition) அறைகள் இப்பொழுது சகஜமாகிவிட்டன.

பஞ்சு: என்னமோ சீமையி விருந்து நேரே குதித்தவர்போல் அளக்கிறீரே! பேப்பரைப்பார்த்தீரா? லக்ஷ்மணபுரியில் ஐயாயிரம் சதுர அடி பரப்புள்ள குளிர்ச்சியான பாதாளச்சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ராமர் ஆண்ட அயோத்தி பிரிட்டிஷ்காரர் வசமாகுமுன் 1856ஆம் ஆண்டில் அதைக் கடைசியாக ஆண்ட நவாப் மஜீத் ஆலிஷா வசித்த 'ஷத்தர்மன்சில்' என்ற மாளிகையின்கீழ்த் தளத்தைத் தோண்டுகையில் பிரஸ்தாப குளிர் வசதி ஏற்பாடு இருப்பது தெரிந்ததாம். மத்தியசர்க்கார் இந்த இடத்தை மூலிகை ஆராய்ச்சிக் கழகத்தின் உபயோகத்துக்குக் கொடுக்கப் போகின்ருர்களாம்.''

கன: ஆமாம் கொச்சியில் குறுணி மிளகு என்ருல் நமக்கென்ன ஆச்சு?

கிட்: கனபாடிகளே, இனி கொச்சி சமஸ்தானம் என்று தனியாக குறிப்பிடக் கூடாது. ஐக்கிய கேரளம் என்று சொல்லவேண்டும். திருவாங்கூரும் கொச்சியும் ஒன்ருக இணைக்கப்பட்டுள்ளன. திருவாங்கூர் மகாராஜாதான் ஐக்கிய கேரளத்துக்கு 'ராஜப்பிரமுகர்.'

கன: ஆமாம், இப்படி சமஸ்தானதிபதிகள், மகாராஜாக்கள் இவர்களை எல்லாம் பல்லைப் பிடுங்கி, ஒன்ருேடு

ஒன்று சேர்த்துவிட்டால் அந்த மகா ராஜாக்கள் என்ன செய்வார்கள்?

பஞ்சு: சோம்பேறியாகக்காலம் தள்ள விரும்புபவர்கள் நன்றாகத் தூங்கலாம். கொஞ்சம் நல்ல பெயர் எடுக்க விரும்பும் புத்திசாலி ராஜாக்களுக்குக் கவர்னர் வேலை, வெளிநாடுகளில் இந்திய அரசாங்கப் பிரதிநிதிகள் வேலை - இம்மாதிரி தகுந்த உத்தியோகங்கள் கொடுக்கப்படும். இந்திய ராணுவத்திலும் தகுதியுள்ளவர்களுக்கு நல்ல பதவி உண்டு. வேறு என்ன வேணும்?

கன: ஆண்டியும் அரசனும் ஒன்று?

கிட்: இந்தியர்கள் எல்லோரும் சமம், எல்லோருக்கும் சம உரிமை.

சர்: எல்லாம் பேச்சளவில்தான்.

பஞ்சு: உத்தியோகஸ்தர்கள் மனம் மாறவில்லை. பழைய ஜபர்தஸ்து ஒழியவில்லை. மக்களின் ஊழியர்கள் என்ற மனப்பான்மை ஏற்படவில்லை. வெள்ளை அரசாங்கம் ஆயிர மடங்கு தேவலை என்றாகிவிட்டது.

கன: இப்பொழுது தானே லகானைப் பிடிக்க ஆரம்பித்திருக்கிறோம். கொஞ்சம் பொறுமை வேண்டும். கண்டபேர் வழிகளெல்லாம் சட்டசபையில் நுழைவதைத் தடைசெய்து சரிப்படுத்தினால் ஒழுங்குபடும்.

சர்: ஏது? கனபாடிகள்கூட இப்படிப் பேசத் தலைப்பட்டு விட்டார்!

கன: ஒன்றும் புதிசு இல்லை. சுயநலமிகளின் வேஷம் கலைக்கப்பட்டு உண்மையில் மக்களுக்கு, தேசத்துக்கு உழைக்கும் மனப்பான்மை கொண்ட தகுதி வாய்ந்தவர்கள் அரசாங்க யந்திரத்தை ஓட்ட வேண்டும் என்பதை யார்தான் மறுக்க முடியும்?

பஞ்சு: ரொம்ப சரி. கிட்டு! உன் மருமான் பாஸ் செய்துவிட்டானா?

கிட்: பாஸாவது? கோழிமுட்டை கோழிமுட்டையாக மார்க் வாங்கினால் பாஸ் எப்படி ஆகும்?

பஞ்சு: முட்டாள்! கோழிமுட்டை என்றால் வட்ட வடிவம்தான் என்பதை இனிமேல் மறந்துவிடு. தட்டையாக முட்டையிடக் கோழிகளை விஞ்ஞான முறையில் அமெரிக்காவில் பழக்கியிருக்கிறார்கள்! பேப்பரைப் படித்தால்தானே விஷயம் விளங்கும்

கன: கலிகாலம் அல்லவா? எல்லாம் நடக்கும்!

எனது லண்டன் பிரயாணம்

(மிஸஸ். லீலா கோபாலன்)

கடல் கடந்து சென்றால் ஜாதிப் பிரஷ்டம் செய்யவேணும் என்று சொல்லியகாலம் மலையேறிவிட்டது. அப்படி சொன்னாலுங்கூடக் கவலை இல்லை; ஏனென்றால் கடலில் செல்லும் கப்பலில் ஏறி, சுமார் ஒரு மாத காலம் பிரயாணம் செய்துதான் லண்டனுக்கு வரவேணும் என்கிறது இல்லையே. பம்பாயில் முதல் நாள் இரவு ஆகாய விமானத்தில் ஏறினால் மறுநாள் இரவு லண்டனுக்கு ஓய்வு எடுத்துக்கொள்ள வந்துவிடலாம். வந்து இறங்கியதும் வசதியாகத் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டு நமக்கும் குடி இருப்பு வசதிகள் செய்துகொள்ளும்வரை தங்குவதற்கு எவ்வளவோ சௌகரியமான ஹோட்டல்கள் இருக்கின்றன.

நம்முடைய தாய்நாட்டைவிட்டுக்கிளம்பும் முன் எவ்வளவோ யோசனைகளுடன் தான் நாம் கிளம்பவேண்டியிருக்கிறது. ஆண் மக்களே தங்கள் உத்யோகத்திற்காகவோ, படிப்பிற்காகவோ வருவதற்குத்தயங்கித்தான் சம்மதம் கொடுக்கிறார்கள். ஆனால் என்னைப்போன்ற பெண்கள் இங்கு வருவதற்கு, எனக்குத் தயக்கம் இல்லாவிட்டால் கூட, அநேக ஆக்ஷேபனைகள் கொடுக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து இங்கு வந்து போனவர்களும் வந்து செல்லாத அநேக கட்டுக்கதைகளைக் கேட்கும் பெரியவர்களும் பலவிதகஷ்டங்களை எதிர்த்துப் புறப்படும் சொற்ப எண்ணிக்கை உள்ளவர்களையும் தடுக்கத் தயங்குவதில்லை. சாப்பாடு கிடைக்காது, குடியிருக்க வசதிஇல்லை, பணம் அதிகம் செலவாகும் என்றெல்லாம் போதனைகள் கொடுக்கப்படும்.

இந்தியாவிலிருந்தால் என்ன, லண்டனிலிருந்தால் என்ன? பணம் எங்கும்தான் செலவு செய்யவேண்டும். அதுவும் யுத்தத்திற்குப் பின் சாதாரண கிராமத்தில் கூடத்தான் குடும்பச் செலவு அதிகரித்திருக்கிறது. அதேமாதிரிதான் எங்கும் சாப்பாட்டு ரேஷனும், குடியிருப்புக் கஷ்டமும் இருக்கின்றன. நீங்களே யோசித்துப் பாருங்கள். தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய இடங்களில் இப்போது குடியிருக்க வீடு கிடைக்குமா?

ஆனால் லண்டனில் குடியிருக்க வீட்டுக் கஷ்டம் அவ்வளவு இல்லை. இங்கு வாரக் கணக்கில்தான் வீடு வாடகைக்குக் கொடுக்கிறார்கள். ஆகையால் வீடு கிடைப்பது மிகவும் கஷ்டமில்லை. வாரத்திற்கு 3 முதல் 4 கினி வரை கொடுத்தால் வசதி உள்ள சிறிய மாடிகள் (Flats) கிடைக்கும். சற்றுப் பெரியதாகவும் வசதியாகவும் வேண்டுமென்றால் 6 முதல் 8 கினி வரை கொடுக்க வேண்டும். சகலவிதமான சௌகர்யங்களுடனும் இந்த வாடகைக்குள்ளேயே மரச்சாமான்கள், படுக்கைகள், பீங்கான் தட்டு கோப்பை வகைகள், ஒரு ரேடியோ, ஒரு Fridge, Electric Stove எல்லாம் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் குளிர்காய Electric Fire ம் வைக்கப்பட்டிருக்கும். சாமான்கள் இல்லாமல் தனி வீடு மட்டும் எடுப்பதென்றால் இன்னும் மலிவாகக் கிடைக்கும். மாணவர்களுக்கு வாரம் $1\frac{1}{2}$ பவுனில் அறைகள் கிடைக்கும்.

வீட்டு விஷயம் இப்படியிருக்க, இனி சாப்பாட்டைப் பார்ப்போம். பெண்களும் கூடவந்து குடும்பம் நடத்தும் ஆண் மக்களுக்குத்தான் இந்த ஊரில் வசதி அதிகம். வெளியில் சாப்பாடு அதுவும் இந்திய அரிசிச்சாப்பாடுபோடும் கடைகள் எவ்வளவோ இருக்கின்றன. இருந்தாலும் அவர்களுக்கும் லாபம் வேண்டாமா? ஆகையால் சாப்பாடு ஒரு

ஆளுக்கு ஒரு வேளை நன்றாகச் சாப்பிட வேண்டுமென்றால் 5 முதல் 6 ஷில்லிங் அதாவது 3 அல்லது 4 ரூ பிடிக்கும். வீட்டில் சமையல் செய்து சாப்பிட்டால் வயிறும் நிரம்பும், பணமும் அதிகம் ஆகாது. ஆகையினால்தான் அநேக பிரம்மசாரிகளும், தனி ஆண்களும் இங்கு வந்து சமையல் கற்க ஆரம்பித்து ஏதோ சாப்பாட்டைத் தயாரித்துக் கொள்ளவும் தயங்குவதில்லை.

பெண்கள் வந்தால் குடும்பம் வசதியாக நடத்தமுடியுமா என்று நீங்கள் யோசிக்கலாம். இங்கே கீழைத்தேச மக்களுக்கு அதுவும் இந்தியப் பெண்களுக்குச் சகல சௌகரியங்களும் கிடைக்கின்றன. நல்ல அழகான வீடு, பளபளப்பான சமயலறை, சகல சாமான்களும் கிடைக்கும் கடைகள் — இவைகளினால் எவ்வளவு திருப்தி உண்டாகிறது தெரியுமா? வெண்ணெய், Cooking Fat என்ற சமையல் செய்யும் எண்ணெய், சர்க்கரை, டீ முதலியயாவும் ரேஷன்செய்து கொடுக்கப்படுகின்றன, அரிசி போதியஅளவு கிடைக்காவிட்டாலும், இருப்பதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியதுதானே. அரிசிச்சாப்பாட்டை கவனித்தால் லண்டனுக்கு வந்திருக்க முடியுமா? வெறும் ரொட்டியைத்தான் தின்று காலம் கழிக்க வேண்டுமென்று பயமுறுத்தப்பட்ட எங்களுக்கு அரிசிச்சாப்பாடுசாப்பிடும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. மாவு, ரவை முதலியவைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இந்தியச் சரக்குகளையே விற்பனை செய்யும் Abdullo's Bombay Emporium என்று இருகடைகள் இருக்கின்றன. அவைகளில் நமக்குத் தேவையான சகல சாமான்களும் கிடைக்கின்றன. எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு ஒரு பெண்ணும் சமைத்துப்போட இருந்தால் எந்த ஆண்மகனுக்குத்தான் லண்டனும் தாய் நாடாகத் தோன்றாது.

முன்பெல்லாம், லண்டனுக்குப்போனால் மாமிசம் சாப்பிடவும், முட்டை தின்னவும் பழகி வந்து விடுவார்கள் என்று அநேகர் சொல்லிக் கேட்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய அனுபவத்தில் நம்முடைய ஆசாரத்தையும் பழக்க வழக்கத்தையும் இங்கே கையாளுவதற்கு ஒரு கஷ்டமும் தெரியவில்லை. இங்குள்ள ஒரு இந்தியரிடம் "நாங்கள் இன்னம் முட்டை சாப்பிடக்கூட பழக்கிக் கொள்ளவில்லை" என்ற போது "அது எப்படி" என்று ஆச்சரியப்படுகிறார். மிகவும் மலிவாகக் கிடைக்கும் பாலில், தயிர் உண்டாக்கி, தயிர் சாதமும் பலகார வகைகளும்ஆனந்தமாகச்சாப்பிடும் எங்களுக்கு முட்டையும், மாமிசமும் தேவை இல்லை என்று பெருமைப்படத்தான் வேண்டும்.

இவ்வளவு சௌகரியங்கள் உள்ள லண்டனிலும் சில அசௌகரியங்கள் இருக்கின்றன என்றுதான் நான்வருத்தத்துடன் சொல்லவேண்டும். முதலாவது வேலைக்காரர் தொல்லை. இங்கு வேலைக்கு ஆள் வைத்துக்கொள்ளவேண்டும் என்றால் ஆள் இல்லாமல் இல்லை. ஆனால் ஒரு மணி நேரம் வேலை செய்தால் 2½ ஷில்லிங் — 2ரூபாய் கொடுக்க வேண்டும். நம்முடைய பெண்கள் வேலைசெய்வதற்கு மட்டும் இங்கு வந்து தயங்கக்கூடாது. வீடு சுத்தம் செய்யவோ, சமைக்கவோ, லாண்டரி வேலை செய்யவோ சகலத்திற்கும் தயாராக இருக்க வேண்டும். இங்கெல்லாம் வீடு சுத்தம் செய்வதற்கு Hoover என்ற Electric Machine இருக்கிறது. ஆனால் எல்லோராலும் வாங்கக்கூடிய விலையில் இல்லாததால் பெரும்பாலோர் கைகளாலேயே தான் வேலைசெய்ய வேண்டும்.

இரண்டாவதாகஅசௌகரியம், என்று நான் சொன்னது இந்த லாண்டரி வேலையைத்தான். லாண்டரியில்வெளுப்பதற்காகத் துணிகளைக் கொடுத்தால் 1 துணிக்கு 1 ஷில்லிங் போகும். அதுவும் நன்றாக வெளுத்து வராது. ஆகையால் வீட்டிலேயே ஒரு எலெக்டிரிக் இஸ்திரிப் பெட்டியை வாங்கி வைத்துக் கொண்டு நம் பொழுது போக்காக லாண்டரி வேலையையும் செய்யத்தான் வேண்டும். பணத்தைக் கவனமாகச் செலவு செய்யும் நபர்களுக்குத் தான் இது.

கடைவீதிகளுக்குச் சென்று நம்முடைய குடும்பத்திற்குத் தேவையான சாமான்களை வாங்குவதும் இங்கே பெண்கள் வேலைதான். கடை வீதிகளில் நுழைந்து வரிசைகளில் நின்று சாமான் வாங்கத்

தெரியாத என் போன்ற சிலருக்குக் கஷ்டமாகத்தான் தோன்றும். ஆனால் பழக்கத்தில் எல்லாம் சரியாகி விடும். இங்கே கடைகளுக்குச்சென்றால் எல்லோரும்—பணக்காரரும் ஏழைகளும்—க்யூவில் நின்று தான் சாமான் வாங்க வேண்டும். ஆனால் கடைகளில் வேலை செய்யும் ஆண், பெண்கள் யாவரும் இன்பமாகச் சிரித்த முகத்துடன் "என்ன வேண்டும், அது நல்லது, இது வாங்க வேண்டாம்" என்றெல்லாம் சொல்லி மரியாதையுடன் வியாபாரம் செய்வதைப் பார்த்தால் கடைக்குப் போவதில் என்ன சிரமம் என்று தோன்றுகிறது.

இந்த நாட்டில் எங்கே சென்றாலும் நமக்குக் கௌரவமும், மரியாதையும் கொடுக்கப்படுகின்றன. விசேஷமாகப் புடவை அணிந்து செல்லும் மாதருக்குக் கௌரவம் அதிகம். பெண்களால் தான் அவர்களுடன் வரும் ஆண்களுக்குக்கூட மதிப்பு என்று நான் சொல்வேன். தெருவில் ஒருவித பயமுமின்றிப் பெண்கள் கூடத் தைரியமாக நடக்கலாம். வழி தவறினால்கூட விபரங்கள் சொல்ல அங்கங்கே போலீஸ்காரர்கள். எந்த ஒரு விஷயம் நாம் யாரைக் கேட்டாலும் தயங்காமல் உதவி செய்ய வரும் மனப்பான்மை கொண்ட மக்கள். இவ்வளவு வசதிகளும் உள்ள லண்டன் பட்டணத்தை இந்திய மக்களுக்கு வாசம் செய்ய வசதியற்றது என்று யாரேனும் சொன்னால் இனிமேல் நீங்கள் நம்ப வேண்டாம். லண்டனும் இந்தியாவிலுள்ள மற்றப் பெரிய பட்டணங்களான பம்பாய், கல்கத்தா போலத்தான் தோன்றுகிறது. அயல்நாட்டில் இருக்கிறோம் என்ற உணர்ச்சியே இல்லை. இதைப் படிக்கும் சகோதர சகோதரிகள் யாவரும் தங்களுக்கும் இங்கேவர ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவசியம் தயங்காமல் வந்து இங்குள்ள அதிசயங்களையும் கண்டானந்திக்கலாம். இது தான் என் அபிப்பிராயம்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடுவில் அகப்பட்டுக்கொண்டு தன் தலைவிதியை நிர்ணயிக்கப் பந்தோபஸ்து சபையின் முடிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் காஷ்மீரைத்தான் இந்தியாவின் நந்தவனம் என்று கூறுகிறேன். இன்று இந்தியா முழுதும் நறுமணம் பரப்பும் ரோஜா மலரான பண்டித நேருவை அளித்தது காஷ்மீர்தான். இந்தக் கட்டுரையில் பெரும்பாலும் அங்குள்ள அதிசயப் பொருள்களைப் பற்றியும், புராதன ஞாபகச் சின்னங்களைப் பற்றியும் எழுதப் போகிறேன். அதன் வருங்காலத்தைப்பற்றிக் கவனிக்கும் போது மிக முக்கியமாகத் தோன்றும் மதம், மக்களின் நடையுடை பாவனை, மொழி முதலியவைகளை இங்கே விட்டு விடுவோம்.

காஷ்மீரத்தில் இருப்பவர்கள், அதைத் தாயகம் என்று சொல்லிக்கொள்ளும் பெருமை வாய்ந்தவர்கள்; அதைப் பூலோக சுவர்க்கம் என்று வருணிக்கிறார்கள். காஷ்மீரைப்பற்றிய புத்தகங்களில் ஆசிரியர்கள், "மகிழ்ச்சி உலவும் இந்தப் பள்ளத்தாக்குகளும், பரிசுத்தம் உறையும் இந்தப் பனி முடிகளும் நிறைந்த இங்கேதான் துன்பம் நிறைந்த உலகம் முடிவடைகிறது. இன்பமே உருவான சுவர்க்கம் தொடங்குகிறது" என்று எழுதுகிறார்கள். உண்மையிலே அதை ஸ்விட்ஸர்லந்துக்கு ஈடாகச் சொல்லாம். ஒரு வருஷத்துக்கு மேலாகக் காற்றில் கலந்து வரும் வெடிமருந்துப் புகையும் நாசவேலைக்காரர்களின் அட்டூழியங்களும் கூட எழிலே உருவான அந்த இடத்தைப் பாழாக்க முடியவில்லை.

வசந்த காலத்தில் இந்த நாடே பூத்துக் குலுங்குகிறது. பொது நந்தவனங்களில் பட்டுப் பூச்சிபோலப் பலநிற ஆடைகள் உடுத்த மக்கள் குதூகலமான முகத்துடன் காணப்படுகிறார்கள். நகரங்களுக்கு வெளியே பரந்து விரிந்த பள்ளத்தாக்குகளில் நிலம் வெளியே தெரியாமல் அதைப் போர்த்தியிருக்கும் பசும்புல் வெளிகளும், செழித்த பயிர்களும் காணப்படுகின்றன. அவைகளுக்குப்பின் வானளாவி வளர்ந்திருக்கும் தேவதாரு விருக்ஷங்கள்—அதற்கும் அப்பால் பனி முடி தரித்த சிகரங்கள்—அவைகளுக்குப் பின் நிறைந்து நிற்கும் வெண்முகிற் கூட்டங்கள். எங்கும் வெண்மையும் தூய்மையும் தான் தங்கி அலங்கரிக்கின்றன. இந்த நாட்டின் தலை நகரம் ஸ்ரீநகர். அதைத் தமிழில் திருவின் உறைவிடம் என்று சொல்லலாம். உண்மையில் அது செல்வமும் செழிப்பும் கொழிக்கும் இடம்.

இத்தகைய நாட்டில் எண்ணற்ற அதிசயமான இடங்களும் பொருள்களும் நிறைந்திருக்கின்றன. மனிதனால் சிந்தித்துக்கூட இருக்கமுடியாத இவைகளைத் தெய்வீகம் ததும்பும் பொருள்களாகக் கொண்டு இந்து-க்கள் வழிபடுகிறார்கள்.

அமரநாத் காஷ்மீரின் கிழக்குப்புறம் அமைந்திருக்கும் இமயமலைத் தொடர்களில் ஒன்றில் புகழ்வாய்ந்த இந்தக் குகை இருக்கிறது. இங்கே இயற்கையாகப் பனிக்கட்டியினால் அமைந்த லிங்கம் ஒன்று இருக்கின்றது. சந்திரன் தேய்ந்து வளரும்போது இதுவும் தேய்ந்து வளர்கிறது. இதனால் பௌர்ணமி தினத்

தன்று இதைப் பார்க்க மக்கள் பல பாகங்களிலிருந்தும் வந்து கூடுகிறார்கள். சிறப்பாகச் சவன மாதத்தில் (ஜூலை-ஆகஸ்ட்) வரும் பௌர்ணமி தினத்தில் இங்கே திருவிழாக்கூட நடைபெறுகிறது.

தூய வெண்மையான நிறத்துடன் இந்த லிங்கம் விளங்குகிறது. குகையின் மேலிருந்து பனித்துளிகள் இதன்மேல் விழுந்து உறைந்து இதை வளரச்செய்கின்றன. மறுபடி இவை உருகி லிங்கம் தன் பழைய நிலையை அடைகின்றது. பனிக்கட்டியைப் பெருக்கும் ஒரு இடமாக இதைக் கருத முடிவதில்லை. ஏனென்றால் அமாவாசை நாட்களில் இந்த இடம் நன்றாக உலர்ந்து காணப்படுகிறது. அமரநாத்திலிருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ள பஞ்சதரணி கிராமத்தில் உள்ள மக்கள் இந்த லிங்கத்தின் வளர்ச்சியையும் தேய்வையும் உடனிருந்து கவனித்திருக்கிறார்கள். “இந்த லிங்கத்தைக்கண்டு நான் மெய் மறந்துவிட்டேன்” என்று விவேகானந்தர் கூறுகிறார். எவ்வளவோ ஐரோப்பிய ஆசிரியர்கள்கூட இதன் தன்மையைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

லார் கிராமத்திலுள்ள துல்முலா என்னும் ஊற்று அடிக்கடி பல வேறு நிறங்களைக் கொண்ட நீரைப் பெருக்குகிறது. ஊதா, பச்சை, நீலம் போன்ற நிறங்களில் வரும் ஊற்று நீர் அதிசயிக்கத்தக்கது. ஜீத் மாதத்தில் (மே-ஜூன்) வளர்பிறை நாட்களில் இங்கே பெரிய திருவிழா ஒன்றும் நடைபெறுகிறது.

திரிஸந்தியா என்னுமிடத்தில் மற்றொரு அதிசயமான ஊற்று இருக்கிறது. வாழ்வில் இன்பம்போல் வானத்தில் மின்னலைப்போல் இங்கே ஊற்றுப் பெருகிப் பெருகி வற்றுகிறது. ஒரு வருஷத்தின் ஆரம்பத்தில் பெருகத்தொடங்கும் இந்த ஊற்று வருஷத்தின் பல பாகங்களிலும் திடீர் திடீரென்று வற்றிவிடுகிறது. குறிப்பாகப் பாய்ஸக்-ஜீத் மாதங்களில் (ஏப்ரல்-மே) இந்த ஊற்று ஒரு மணிக்கு மூன்றிலிருந்து ஒன்பது தடவைகள் வரை வற்றத் தொடங்குகிறது.

விரிநாகம் என்ற கிராமத்திலிருந்து சுமார் ஐந்துமைல் கிழக்கே இதைப்போல பாவனஸந்தியா என்று ஒரு ஊற்று இருக்கிறது. பாவனம் என்றால் காற்று என்று பொருள். காற்றை உட்கொண்டுவாழும் எண்ணற்ற உயிர்களைப்போல இந்த ஊற்றும் சுவாசிப்பதாகக் கூறுகிறார்கள். விரிந்து சுருங்கும் மார்பைப்போல இந்த நீரும் உயர்ந்து தாழ்கிறது.

ஹாலமபுரத்தில் ஒன்றுக்கொன்று அண்மையில் ஐந்துஊற்றுக்கள் இருக்கின்றன. இந்த ஐந்து ஊற்றுக்களும் ஒன்றுசேரும் இடத்தில் கல்லினால் ஆன லிங்கம் ஒன்று இருக்கின்றது. அந்தப் பரந்த நீர்ப்பிரதேசத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு இந்த லிங்கம் ஒரு மாதத்துக்குள்ளாகத்தானே நகர்ந்து செல்கிறது. சில ஜனங்கள் அதற்குக் காரணத்தைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள். அந்த இடத்தில் உள்ள மணல் ஊற்றின் வேகத்திற்குத் தக்கவாறு மேடு பள்ளங்களை உண்டாக்குகிறது. உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்திற்கு லிங்கம் தானாக நழுவிச் செல்கிறது.

துப்ஜனம் என்ற இடத்துக்கு அண்மையில் உள்ள தடாதனம் என்ற ஊற்றின் நீர் எப்போதும் கொதிப்பாகவே இருக்கின்றது. காகர்த்தகுண்டம் என்ற கிராமத்தில் உள்ள சீத குண்டம் என்ற ஊற்றில் உள்ள மீன்களுக்கு ஒற்றைக் கண்தான். எல்லா மீன்களுக்கும் ஒரு கண்தான் பார்வையுள்ளதாக இருக்கின்றது. லார் கிராமத்தின் அருகிலுள்ள பாம்புகள் மிகவும் நல்ல பாம்புகள். அவைகள் எந்த மனிதரையும் கடிப்பதில்லை. இந்த மலைப் பிரதேசத்துக்கு ஹரமுகம் என்று பெயர். பாம்புக்கும் பரமனுக்கும் எப்போதுமே பொருத்தம் அதிகமல்லவா?

வந்திபுரம் என்ற கிராமத்திற்குப் பன்னிரண்டு மைல் கிழக்கே தியானேச்வர் குகை இருக்கிறது. குகை வாயிலிருக்கும் கோமுகம் ஒன்றின் நாசியிலிருந்து தண்ணீர் எப்போதும் பெருகிக்கொண்டே இருக்கிறது. சுமார் ஒரு கஜம் அகலமே உள்ள இந்த குகைப் பாதையில் சுமார் நாற்பத்தைந்து கஜ தூரம் ஊர்ந்து சென்றால் குகையின் பிரதான பாகத்தை அடையலாம். இங்கே ஒளி வீசும் லிங்கம் ஒன்று இருக்கிறது. அதன்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1949
MADRAS

காஷ்மீரின் காட்சிகள்.

அளவைப் பார்க்கும்போது இவ்வளவு பெரிதான இதை, இத்தகைய குறுகிய பாதையில் எவ்விதம் எடுத்துக்கொண்டு வந்தார்கள் என்ற ஆச்சர்யம் உண்டாகிறது.

நிச்சிகம் என்ற கிராமத்திற்குத் தென் கிழக்கில் உள்ள சுயம்பு என்ற குகையில் முப்பது வருஷங்களுக்கு ஒரு முறை நிலம் கொதித்துப் போகிறது. நிலத்தினுடைய சூட்டைக் கையால் தொட முடிவதில்லை. அந்த நாட்களில் ஜனங்கள் மட் குடங்களில் அடைத்த நீர் கலந்த அரிசியையும் நீரில் ஊறிய பண்டங்களையும் கொண்டுபோய் நிலத்தில் பானையின் கழுத்தளவிற்கு வைத்துப் புதைத்து விடுகிறார்கள். அது சில நிமிஷ நேரத்தில் வெந்து பக்குவமாகி விடுகிறது. இவ்வாறு சமைத்த இந்தப் பொருள்களை இந்துக்கள் இறந்து போன தங்கள் முன்னோர்களுக்குப் படைத்துத் திருப்தி அடைகிறார்கள். சர்க்கரை, கற்பூரம், நெய் இவைகளைத் தோண்டிய குழிகளில் இவர்கள் இடும்போது கண்ணைப்பறிக்கும் ஒளி வாய்ந்த ஜ்வாலை கிளம்புகிறது.

ஹல்தார் என்ற பெயருடன், மானஸபலம் என்ற ஏரியை நோக்கியவாறு ஒரு பெரும் மலைப்பாறை இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் நிர்ஜல ஏகாதசி தினத்தன்று இங்கு விழா நடத்துகிறார்கள். இந்த பெரிய மலைப்பாறையின் அடியிலிருந்து அன்று மட்டும் நீர் பெருகி வழிகிறது. அடிவாரத்தில் நின்றுகொண்டு யாத்திரிகர்கள், "முகில்களைத் தேக்கும் மலைகளின் அரசனே! மழை போன்ற குளிர்ந்த அருவியைப் பொழிந்து அருள்" என்று ஆராதிப்பார்கள். இதைப் படிக்கும் போது தமிழ் நாட்டு மக்கள் 'நீராடப்போந்த கதையை,' திருப்பாவையில்





படித்ததை நினைவு கூர்ந்து கொண்டால் ஆச்சரியமில்லை.

லார் கிராமத்தின் அருகில் உள்ள பிரதேசத்தில் ஒரு அதிசயம் நடக்கிறது, மக்கள் நீரில் மீன் பிடிப்பதையே அறிவார்கள். இங்கே நிலத்திலும் மீன் பிடிக்கிருர்கள். இந்தப் பிரதேசத்தில் நிலம் சதுப்பாக இருக்கிறது. பெரிய மீன்கள் தண்ணீரில் நீந்தி அந்த இடத்துக்கு வரும்போது சேற்றைத் துளைத்துக்கொண்டு உள்ளே சென்றுவிடுகின்றன. நீர் வற்றிய பிறகு அவை நிலப் பரப்பின்கீழ் நிரந்தரமாகத் தங்கியிருக்கும் நீரில் நீந்தி உயிர் வாழ்கின்றன. மீன் பிடிப்பவர்கள் ஒரு கம்பம் நுழையக் கூடிய வாய் அகலமுள்ள துளை ஒன்று சுமார் ஐந்து அல்லது ஆறு கஜத்துக்குத் தோண்டியபின் தூண்டிலை நீளமான கயிற்றில் கட்டி உள்ளே இறக்குகிருர்கள். கயிற்றைச் சிறிது நேரம் கழித்து வெளியே இழுக்கும் போது மீன்கள் கொத்தாக அதில் சிக்கிக் கொள்ளும். இவைகளைத் தண்ணீரில் போட்டால் இவை மறுபடி மூச்சுவிட்டு நீந்தத் தொடங்குகின்றன. "கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும்" என்று நாம்

அடிக்கடி உபயோகிக்கும் வசனத்தில் இங்கே "நிலத்தினுள் மீனுக்கும்" என்று சேர்த்துக்கொண்டால் கூடப் பொருத்தமாக இருக்கும்.

அதிசயப்பொருள்கள் நிறைந்த காஷ்மீரைப் பார்த்தோம். ஆனால் சிற்பங்களும், கலைக்கோயில்களும் நிறைந்த காஷ்மீரம் அதைவிட அதிசயமானது. நம் நாட்டு மாமல்லபுரத்தைப்போல, அஜந்தாவையும் எல்லோராவையும்போல, அங்கேயும் உயிர்ததும்பும், உணர்ச்சிச் சிற்பங்கள் பொலிவும் உண்டு. அழகே உருவான எண்ணற்ற சிற்பங்கள் காலப்போக்கில் மங்கி உருவழிந்து நிற்கின்றன. அவைகளைப் பார்க்கும்போது அழகிய ஓவியத்தை மூடும் மெல்லிய திரையின் ஞாபகம் வரத்தவறுவதில்லை.

அழிவில்லாத கடவுளின் உறைவிடத்துக்கும் அழிவில்லாத தன்மையைக்கொடுக்க எண்ணிய அந்தச் சிற்பிகள் அழிந்த இடம்கூட இன்று யாருக்கும் தெரியாது. காஷ்மீரத்தின் சரித்திரத்தைக் கல்ஹனு என்ற மகாகவி "ராஜதரங்கிணி" என்ற நூலில் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார். உண்மையில் அதில் வருணிக்கப்பட்டிருக்கும் கோயில்கள் பெரும்பாலும் இப்போது காணப்படவில்லை. காலம் அழித்தவைபோக மதம் காரணமாக எழுந்த பூசலில் பல்வேறு மதத்தார்களிடம் அகப்பட்டுக்கொண்டு வீழ்ந்த கோயில்கள் எவ்வளவோ?

பாரி மஹால் இதுதான் தேவதைகளின் உறைவிடமாகக் கருதப்படுகிறது. பாரி என்றால் தேவதைகள் என்று பொருள். மொகலாய மன்னர்கள் வானசாஸ்திரம் சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கு இதை உபயோகித்து வந்திருக்கிறார்கள். தனித்து நிற்கும் ஒரு கற்பாறையின் மேல் இது அமைந்திருக்கிறது. செங்குத்தான பக்கச் சுவர்களுடன் உயர்ந்து நிற்கும் இந்தக் கோபுரம் இவ்வளவு நாட்கள் ஆகியும் பட்டை தீட்டிய ஸ்படிகம் போல ஒளி விடுகிறது. நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஆகியும், எவ்வளவோ புயல்களையும் சூறாவளியையும் கண்டும் அது புதிதாகத்தான் விளங்குகிறது. இதில் வசித்தவர் யாரும் இல்லை. ஆனால் அழியாத் தன்மை அடைந்த இந்தக் கலைக்கோயிலின் வாசிகளான அந்த அமரர்கள் தான் எங்கே?

இந்தக் கம்பீரம் வாய்ந்த கட்டிடத்தைச் சுற்றி விஸ்தாரமான நந்தவனம் ஒன்று இருக்கிறது. அதற்கு ஆறுவித மான மேற்கூரைகளை அமைத்து அலங்கரித்திருக்கிறார்கள். நடுவில் அமைந்திருக்கும் கோபுரத்தின் மேல் விதானத்தைக் கூண்டாகக் கட்டியிருக்கிறார்கள்.

பண்டரீதன் கோயில் இந்தக் கோயிலை கி. பி. 921ல் பார்த்தன் என்ற அரசன் காலத்தில் கட்டி இருப்பார்கள் என்று சரித்திர ஆசிரியர் கன்னிங்ஹாம் கருதுகிறார். ஒரு காலத்தில் இதைச் சுற்றித்தான் காஷ்மீரின் தலைநகரமே அமைந்திருந்தது. சரிந்து நிற்கும் ஒரு கற்பாறையின்மேல் இந்தக் கோயில் அமைந்திருக்கிறது, கோயிலைச்சுற்றிலும் நிழல் தரும் முந்திரிப்பழ மரங்கள் செழித்து வளர்ந்திருக்கின்றன, இந்தச் சரிவின் அடிவாரத்தில் ஒரு அழகான சிற்றாறு கலகலத்து ஓடுகிறது. இவைகள் பின்னால் அமைந்திருக்க இந்தக் கோயில் பல வர்ணங்கள் கூடிய சித்திரம்போலக் காணப் படுகிறது. இலைகளினூடே பின்னால் இருக்கும் கிராமத்தை நோக்கும்போது எழில் உருவமாக அது தோற்றம் அளிக்கிறது, இந்தக் கோயில் பத்துக் கற்பாறைகளைக்கொண்டு அமைக்கப்பட்டது. பாறைகளில் பக்கங்களை வெகு மிருதுவாகத் தேய்த்து ஒன்று சேர்த்திருப்பதால் சேர்க்கப் பட்ட இடமே தெரிவதில்லை, அசோகர் இதற்கு விஜயம் செய்ததாக உள்ளே எழுதப்பட்டிருக்கிறது.

அவந்திபுரம் சரித்திர நிபுணர்கள் இந்த இடம் ஒன்பதாம் நூற்றாண்டில் அவந்திவர்மன் என்ற அரசனால் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். இந்த இடம் ஸ்ரீநகரிலிருந்து 18 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கேயுள்ள கோயில்கள் ஒவ்வொன்றின் நீளம் 174 அடி, அகலம் 148 அடி. முன்புறத்தில் உள்ள விஹாரங்களின் வாயில்களை முக்கோண உருவமாகவும் வளைவா

கவும் அமைத்திருக்கிருர்கள். இந்தக் கோயில்களில் இப்போது சாசுவதமான அமைதி நிலவுகிறது. உறங்கும் நகரம் போல நிசப்தத்தில் ஆழ்ந்து கிடக்கும் இந்தக் கனவுக் கோயில்களை அமைத்தவர் யாரோ? கோயில்களைத் தவிர பல்வேறு இடங்களுக்கு மிருதுவான கற்பாதைகளும், உயர்ந்து விளங்கும் அரண்மனைகளும், ஒருவரால் நகர்த்த இயலாதபடி கனத்து நிற்கும் பெரியகதவுகளும் இங்கு இருக்கின்றன. சுவர்களில் பொறிக்கப்பட்ட சிற்பங்கள், அவந்திவர்மன் காலத்தில் எவ்வளவு அழகுடன் விளங்கினவோ, அந்த வண்ணம் குலையாமல் விளங்குகின்றன. ஆனாலும் இதைக் கவனிப்பவர் யார்? இந்த நகரமே இன்று உயிர் அற்ற உடல் அல்லவா? அவந்தி வர்மனுக்குப் பிறகு யாரும் இந்த இடத்தில் வசித்ததாகத் தெரியவில்லை. இருக்கும் கோயில்களுள் பெரியனவாக விளங்கும் அவந்திஸ்வாமி, அவந்திஸ்வரா என்று அழைக்கப்படும் இரண்டு கோயில்களும் திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் அர்ப்பணிக்கப்பட்டனவாக கூறப்படுகின்றன.

மார்த்தாண்டர்கோயில் இந்தக் கோயில் எட்டாம் நூற்ருண்டில் கட்டப்பட்டிருக்கவேண்டு மென்று சில சரித்திர நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். கன்னிங்ஹாம் இது கி. பி. 370—500ல் கட்டப்பட்டிருக்கவேண்டு மென்று கூறுகிருர். சுமார் அறுபத்து ஐந்து அடி நீளமுள்ள இந்தக் கோயில் வளைவுகளாலும், அலங்காரமான தூண்களினாலும் சூழப்பட்டிருக்கிறது. எவ்வளவோ அழிவுற்றிருந்தாலும் அதன் கம்பீரம் குறையவில்லை. சுற்றுப்புறங்கள் உட்பட மொத்தத்தில் இது 200 அடி நீளமுள்ளதாகவும் 142 அடி அகலம் கொண்டதாகவும் இருக்கிறது. அழகான சிற்பங்கள் செதுக்கப்பட்ட நேர்த்தியான வேலைப்பாடமைந்த சுமார் 84 தூண்கள் இதில் இருக்கின்றன. இவைகளிற் சில வேரற்ற மரம்போலக் கீழே விழுந்து கிடக்கின்றன. சிதைந்த கனவைப்போலத் தோன்றும் இந்தக் கோயில் கவிஞர்களையும் பாமரமக்களையும் சிந்தனையில் ஆழ்த்தக்கூடியது. மேல் நாடுகளில் இத்தகைய ஒரு கலைப் பொக்கிஷத்தை அழகான சித்திரத்தைப் போலக் கண்ணாடியால் மூடிவைத்துப் போற்றக்கூடத் தயங்கமாட்டார்கள். இதனுள் சிற்சில இடங்களில் காணப்படும் கலைத்திறன் தாஜ்மஹாலையும், இங்கிலாந்தின் ஸெயிண்ட் பீடர் மாதா கோயிலையும் கூடத் தோற்கடித்துவிடக் கூடியதாக இருக்கிறது. இமயமலைச்சாரலில் தனி மரமாக அது நிற்கிறது. ஒரு நகரத்தையே எரித்துவிடக்கூடிய நெருப்பைப் போன்ற வெயிலைத் தாங்கி, அது பல இடங்களில் வெடித்திருக்கிறது.

ஷா-இ-ஹம்தான் புராதன காலத்திலிருந்து இங்கு விளங்கிய காளியின் கோயிலைக் குதுப்-உதீன் அழித்துவிட்டு இந்த மசூதியைக் கட்டினன். பதினன்காம் நூற்ருண்டின் இறுதியில் ஸையத் அலி ஹமதானி பாரசீகத்திலிருந்து படையெடுத்து வந்து பெரும்பாலான இந்துக்களை முஸ்லிம்களாக மாற்றினன். அதற்குப் பின் இதுவும் நடந்ததாகக் கருதப்படுகிறது. இதன் உள்ளே முன்காலத்தில் காளிக்கே அர்ப்பணிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஒரு ஊற்று இருக்கிறது. ஏசுநாதர் வைத்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு ஊன்று கோல் இங்கே கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இதை விசேஷமான சமயங்களில் எல்லோருக்கும் காட்டுகிருர்கள். இதன் பிரதான விஹாரம் 63 அடி நீளமும் 43 அடி அகலமும் உள்ளதாக இருக்கிறது.

பதார்மஸ்ஜீத் ஜஹாங்கீரின் மனைவியான நூர்ஜஹான் அடிக்கடி இங்கே விஜயம் செய்ததாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. பிரசித்தமான காஷ்மீர் அத்தர் செய்யும் முறையைக் கண்டுபிடித்தவள் நூர்ஜஹான். அவள் காஷ்மீருக்கு வரும் போதெல்லாம் தொழுகைக்காக இதை உபயோகித்ததாகக் கூறப்படுகிறது. ஆனல் பிற்காலத்தில் இஸ்லாம் மதத்திலேயே உள்ள இரண்டு கட்சிகளின் பூசல்களுக்கு இது இலக்காகி விட்டது. அதன் பலனாக இதனுடைய எழில் ஆர்ந்த சுவர்களும் பளிங்கு பதித்த தரைகளும் உருவழிந்து போயிருக்கின்றன.

ஹார்வான் இந்தக் கோயிலின் இருப்பிடமே வெகு சமீபத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டது. குஷானிய அரசர்கள் இதைக் கட்டியிருக்க வேண்டும். அவர்களுடைய காலத்தில் மத்திய ஆசியாவின் பிரதிநிதிகள் இங்கு வந்து கூடியதாக இதனுள் எழுதி வைத்திருக்கிருர்கள். பிரசித்தி பெற்ற நாகார்ஜுனர் புத்த

மத சம்பந்தமான கூட்டங்களை இங்கே கூட்டியதாகக் கூறுகிறார்கள்.

சங்கராச்சாரியார் கோயில் இந்த அழகான கோயில் சங்கராச்சாரியார் மலை என்று கூறப்படும் மலையின் சரிவில் அமைந்திருக்கிறது. இதைச் சுமார் கி. பி. 500ல் கட்டியிருககிறார்கள். இதனுள்ளே தூய தங்கத்தினால் ஆன ஸ்வர்ணலிங்கம் ஒன்று இருக்கிறது, இந்தக் கோயிலைச் சுற்றி அமைந்திருந்த பெரிய நகரம் இப்போது மண்ணோடு மண்ணாகிவிட்டது. இந்தக் கோயில் இன்னும் அழியாமல் இருப்பதற்கு ஒரு காரணம் கூறுகிறார்கள். சிக்கந்தர் இங்கே படையெடுத்து வந்தபோது இதைக் கஜினி முகம்மது தொழுகைக்கு உபயோகித்த இடம் என்று சந்தேகப்பட்டு அழிக்காமல் விட்டு விட்டுப் போய்விட்டானாம். இதனுடைய உள் விஹாரத்துச் சிறபங்கள் கண்ணுக்கு விருந்தாக இருக்கின்றன,

இவைகளைத் தவிர இன்னும் எவ்வளவோ சிற்பக் கூடங்களும் கலைக் கோயில்களும் இங்கே இருக்கின்றன. இந்த நாட்டில் எங்கே சென்றாலும் புராதனச் சிற்பங்களும் பழமையான அதிசயங்களும் நிறைந்து காணப்படுகின்றன. எவ்வளவோ நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அந்தக் கோயில்களில் சிலவற்றிற்கு மட்டுமே அவைகள் தோன்றிய காலத்தை நிர்ணயிப்பது இயலுவதாக இருக்கிறது. அநேகம் கோயில்கள் தோன்றிய காலமே யாருக்கும் தெரிவதில்லை. இவைகளைக் கட்டுவித்தவர் யார்? இவைகளின் கூடங்களில். விஹாரங்களில், கோபுரங்களில் சிற்பம் செதுக்கித் தம் வாழ்நாளைச் செலவிட்டவர்கள் யாரோ? இங்கே மலைக் காட்சியில் புனல் வீழ்ச்சியில், நகர்நண்ணும் சுடர் மாடங்களில், சிலைக்கூடங்களில் தெய்விகம் ததும்பி நிற்கிறது.

இதைப் பார்க்கும் போது பாரதியாரின் சரஸ்வதியின் உறைவிடத்தைப் பற்றிய பாடலில், சரஸ்வதி தேவியை,

"கோதகன்ற தொழிலுடைத்தாகி,
குலவுசித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடையுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்"

என்று வருணிப்பது நம் நினைவுக்கு வருகிறது.

கல்யாண காலம்

கூறைச் சேலைகள்

கொள்ளேகாலம்
காஞ்சீபுரம்
பெங்களூர்
பெனாரஸ்

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்
பெரியதெரு :: கும்பகோணம்

பட்டுப் பாவாடைகள்
வெண் பட்டு வேஷ்டிகள்
இதர நூல் ஜவுளிகள்
குறைந்த விலை விற்பனை

—o—

ஸ்பெஷல் பில்லிமோரியா நூல் சேலைகள்



வெளியூர்க் கடிதம்

சாரி

பிரியமுள்ள――――க்கு,

ஊரைவிட்டுக் கிளம்பும்போது பிரதிவாரமும் உனக்குத் தவருமல் எழுதுவதாய்ச் சொன்னேன். ஆனல், "இந்த ஒரு மாதத்தில் உன் க்ஷேமத்தைக் குறிக்கும் ஒரே கடிதம் தவிர வேறொன்றும் எழுதவில்லையே," என்று நீ குறைந்து கொள்வது நியாயமே. இன்று சோம்பலைப் பாராட்டாமல் உட்கார்ந்து, நான் வந்ததுமுதல் பார்த்த இடங்கள், செய்த காரியங்களை வஞ்சனை இன்றி உனக்கு வரைந்து தள்ளிவிட நினைத்திருக்கிறேன். கூடவே ஒரு சந்தேகமும் தோன்றுகிறது. காற்று வேகத்தில் ஓடிப்போன இந்த ஒருமாத நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்தி உனக்கும் சுவாரஸ்யமாயிருக்கும்படி எழுதுவது சாத்தியமோ? மேலும், அனேக விஷயங்களை நீ ஏற்கனவே படித்தும், கேள்வியுற்றும் இருக்கலாம், அவைகளை என் கடிதத்தில் படிக்கும்போது என்னை மன்னித்துவிடு. என்னதான் முன்பே அறிந்த விஷயமானுலும், உனக்குப் பக்ஷமான நான் அவற்றைச் சொல்லிக் கேட்பதிலும் ஒரு தனி இன்பம் இருக்கிறதல்லவா?

அன்று நான் பங்களூரில் வந்து இறங்கியபோது நம்ம ஊரைவிடக் குளிர்ச்சியான இடம் என்று தோன்றவில்லை. மழை இல்லாததால் வெயில் ஏறக்குறைய நம்ம பிரதேசத்தைப் போலவே இருந்தது. ஆனல் இந்த ஊரில் இரவில் ஒருநாளும் வியர்த்துக் கொட்டவில்லை; நம் ஊர்போல் காற்றேயில்லாமல் புழுங்கவில்லை. இந்த ஒரு கருணைக்காவது கடவுளைப் போற்றி, என் நாட்களை ஊர் சுற்றுவதில் செலவிட ஆரம்பித்தேன்.

மே மாதத் துவக்கத்தில் இங்கே வந்த எனக்குப் பகலில் வெளியே சென்று சுற்றுவது கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. உஷ்ணம் சற்றுக் கடுமைதான். ஆனல் ஒரே மாதத்தில் முடிந்துபோகிற என் குறைந்த விடுமுறையை ஞாபகப் படுத்திக்கொண்டு, உண்ணவும் உறங்கவும் என் விடுதியை உபயோகித்து, மற்றநேரம் முழுவதும் வெளியில் கழிக்க நிச்சயம் செய்தேன்.

இம்மாதிரி அலைந்ததில் 50, 60 மைல் விஸ்தீர்ணம் கொண்ட இப் பட்டணத்தை அனேக முறை கால் நடையாலும் பஸ், ஜட்காவில் ஏறியும் சுற்றி வலம் வந்தேன். மூலை முடுக்குகள்கூடப் பழக்கமான இடங்கள் ஆயின. சகல திசையிலும் இருந்து இவ்வூரின் அழகைக் கண்டு களித்தேன்.

அத்துடன் விடவில்லை. ஒவ்வொரு கோடியில் உள்ள என் நண்பர் உறவினரைத் தேடிச் சென்றும், யதேச்சையாகச் சந்தித்தும் மகிழ்ந்தேன். நானுகத் தேடி இடங்களைக் கண்டு பிடிப்பதில் எனக்கு ஒரு அலாதி ஆனந்தம். நான் தேடிச் சென்ற நண்பர் கிடைத்து விட்டாலோ, கொலம்பஸ் கூட என்னைப் போல் சந்தோஷித்திருக்க மாட்டார்! நண்பருடன் உரையாடுவதும், அவர் கட்டாயப் படுத்திப் போட்டுத் தரும் சூடான காப்பியைப் பருகி இன்புறுவதும் அடுத்தபடியாக எனக்கு ஏற்படும் ஆனந்தம்.

பங்களூர்க் காப்பிக்கே ஒரு தனி ருசி! மணத்திலும் ருசியிலும் இந்தியா காப்பியையோ, நரசு, கணேச் காப்பியையோ தோற்கடிக்கக் கூடியது. சாதாரணமாய்க் கடைத் தெருவில் கிடைக்கும் சாக்கம்மா காப்பி! அவ்வூரில் நான் இருந்த பொழுது, என் காப்பியை நான் அனுபவித்துச் சாப்பிட்ட மாதிரி வேறு ஒரு நாளும் சாப்பிட்டதில்லை—

பங்களூரில் ஜனங்கள் பிறரிடம் அதிக மரியாதை காண்பிக்கிருர்கள். நீ என்னதான் சொல்லு; நம் ஊரில் பஸ்ஸில் ஏறினல் காதில் விழும் காலிப்பேச்சும், கேலிச்சிரிப்பும் இன்றளவிலும் குறைந்தபாடில்லை. என்னைப் போல் ஊருக்குப் புதியவர், வழியையோ இடத்தின் பெயரையோ கேட்டுவிட்டு மரியாதையான பதிலை எதிர்பார்க்க முடியுமா? 'தெரியாது' என்ற விடை நிச்சயமாகக் கிடைக்கும்! அதிலும் ஒரு பெண்மணி அவ்விதம் கேட்டு விட்டால் அவளுக்குச் சரியான பதில் ஒரு நாளும் கிடைக்காது. இதெல்

லாம் நம் ஊரில் சகஜம் என்பதை நீ அறிவாய்.

இந்த ஊரில் நான் தெரிந்து கொண்ட அவ்வளவு விஷயங்களும் முன் பின் அறியாத ஜனங்கள், பஸ் கண்டக்டர்களிடமிருந்தே. இது உனக்கு ஆச்சர்யமாக இருக்கும். ஒரு முறை கூட அலக்ஷியமான பதில் நான் பெறவில்லை. எவ்வளவு முறை திருப்பிக் கேட்டாலும், அவர்களுடைய ஹள்ளி-பள்ளி (கன்னட) பாஷை தெரியாத நான் கேட்ட பொழுதும் சலிக்காமல் பதில் சொல்வார்கள்.

போகும் பாதையில் நம்மால் கீழே தள்ளப்பட்ட ஒருவன் எழுந்து நின்று "ஐயோ உன் முன்னால் விழுந்து உனக்கு அசௌகர்யம் கொடுத்தேனே, என்னை மன்னித்து விடு." என்று வருந்துவது இவ்வூருக்குச் சகஜமான மரியாதை என ஒரு நண்பர் சொன்னார்! அவர் வேடிக்கையாய்ச் சொல்லியிருந்த போதிலும், இவ்வூர் ஜனங்களின் சுவபாவத்திற்கு ஓர் உதாரணமாய் நானும் நீயும் இதை எடுத்துக்கொள்ளலாம்.

பழைய நாள் முதல், பங்களூர் லால்பாக், கப்பன் பார்க், சோப் பாக்டரி, பீங்கான் பாக்டரி, ராமன் இன்ஸ்டிடியூட் இவற்றினால் புகழ் பெற்ற இடம். நான் இங்கே இவைகளை வருணிக்கப் போவதில்லை. தற்சமயம் ஆயிரக்கணக்கில் சரணார்த்திகள் வந்து குடியேறி, முக்ய வியாபாரஸ்தலங்களில் தங்களை ஸ்தாபிதம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்த லக்ஷப்பிரபுக்களைச் சரணார்த்திகள் என்று சொல்வதில் அர்த்தமேயில்லை. குஜராத்திகள் குடியேறியுள்ள இடங்களைக் கடந்து செல்லும்போது அசல் பம்பயிக்கு வந்து விட்டதாய்த் தோன்றும். அடுக்கடுக்கு மாடி வீடுகள் குஜராத்தின் நவ நாகரிகச் சின்னங்களுடன் விளங்குகின்றன.

பங்களூரில் அடிக்கொரு காப்பி பார்கள் உண்டு. அதேபோல் சினிமாக்களும். இங்கே 36 சினிமாக்கள் உள்ளனவாம். இதில் குறைந்தது 15 சினிமாக்கள் சிட்டிக்கு மத்தியில் ஒரு பர்லாங்கு விஸ்தீரணத்தில் அமைந்திருக்கின்றன. பங்களூர் ஹாலிவுட் என்று இந்த இடத்தை ஒரு நண்பர் குறிப்பிட்டார். அது மிகப் பொருத்தமான பெயர். வாழ்க்கையில் படம் பார்ப்பதும், காப்பி அருந்துவதும் ஆனந்தமான பொழுது போக்கு என்று நினைப்பவரின் சொர்க்கலோகம் இது என்றால் தகும்! நடுநடுவே மில்க் பார்களும் தங்களுடைய ஐஸ்க்ரீம், மில்க் ஷேக்குகளை விளம்பரம் செய்து பணத்தைப் பறிக்கின்றன.

இவ்வூரில், படம் ஆரம்பிக்க ஒரு மணி நேர முன்பே ரிகார்டு சங்கீதத்தை ஒலி பரப்பி நம் காதைத் துளைப்பதில்லை. அடுத்தடுத்து உள்ள 15 சினிமாக்களும் ஏக காலத்தில் ஒலி பரப்பினால் நம் காதுகளின் கதி என்னவாகும் என்று அஞ்சுவதுபோல் சினிமாக்கள் மௌனமாக இருக்கின்றன.

பங்களூருக்கு வந்தவர் இங்குள்ள பைத்தியக்கார ஆசுபத்திரியைத் தரிசித்து வருவது வழக்கம். எனக்குப் பிடிக்காததால் நான் போகவில்லை. அனேகமாய் நான் பேசிப் பழகிய ஒவ்வொருவரும் தங்களுக்கு ஒரு நண்பரோ, உறவினரோ அங்கே இருப்பதாய்க் கூறியது எனக்கு விந்தையாக இருந்தது. ஐச்வர்யமும் அழகும் நிரம்பிய இப்பட்டணத்தில் மூளைக் குறைவும் இவ்வளவு அதிகரித்திருப்பதின் காரணம் எனக்குப் புரியவில்லை.

நான் சந்தித்த மைசூர், பங்களூர்க்காரர் ஒருவருக்கும் மைசூர் ஸ்டேட், சமஸ்த்த இந்தியாவுடன் கலப்பது பிடிக்கவில்லை. இவ்வூர்க்காரர் இதை ஆதரிக்காமல் இருப்பதற்கு அனேக காரணங்கள் இருக்கலாம், ஆனால், என்னோடு மைசூருக்குப் பிரயாணம் செய்த ஒரு ஆந்திர காங்கிரஸ்காரர் (எம். எல். ஏ.) சொன்னதுபோல் மைசூர் இந்தியாவுடன் சேர்ந்தால் ஊரின் அழகையும் சுத்தத்தையும் காப்பாற்றிப், பரிபாலிக்க முடியுமாவென்பது ஒரு பிரச்னை. அவருடைய அபிப்ராயத்தை நானும் ஆதரிக்கின்றேன். உதாரணம் வேண்டுமானால், ஒரு காலத்தில் சென்னை கவர்னரின் மாளிகையாய்த் திகழ்ந்து, தற்காலத்தில் எம். எல். ஏக்களின் விடுதியாக விளங்கும் இடத்தை எடுத்துக் கொண்டால் போதும்.

எது எப்படிப் போனாலும், நம் கவர்னர் ஜெனரல் சி. ஆர். அவர்கள் சமீபத்தில் இந்த ஊரில் வந்து தங்கி, திரும்பிப் போகும் சமயத்தில் "இந்தியாவிலேயே அழகான பட்டணம்' என்று இதற்குப் பெயர் அளித்ததை நானும் முழு மனதுடன் ஒத்துக்கொள்கிறேன். சிறிய மனிதர்களாகிய உனக்கும் எனக்கும் பெரிய பிரச்னைகளைப்பற்றிய கவலை ஏன்?

ஆனால் இவ்வழகிய பட்டணத்தின் பெருமையையும் குறைக்கக்கூடிய விஷயங்கள் ஒன்று இரண்டு உள்ளன, நெருக்கடியான இடங்களில், சற்றும் மறைவே யில்லாமல் மனதரின் அல்ப சங்கைக்கான சௌகர்யங்களைச் சுவர்களில் அமைத்திருப்பதைக் கவனித்தேன். இவைகள் நமக்கு அருவருப்பை உண்டாக்குகின்றன. திரள் திரளாய்ப் போகும் ஜனங்களை லக்ஷியம் செய்யாமல் இவைகளை உபயோகிக்கும் ஆண்களைக் காணும்போது நம் அருவருப்பு அதிகமா

கிறது. ஒன்று சுவருக்கு மூன்று புறமும் மறைவுகள் கட்டவேண்டும்; அல்லது இந்தச் செளகர்யங்களைச் சற்று எட்டி விசாலமான இடங்களில் அமைப்பது நலம். நாகரிகம் மிஞ்சிய இவ்வூரில் இவைகள் இன்னும் இருந்து வருவது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

பங்களூர் ஜட்காக்களில் ஏறி, குடை சாயாமல் திரும்புவது நம் அதிர்ஷ்டம். பட்டணம் ஜட்காவைப் பற்றி அ-மாதவையா தம் நாவலில் எழுதியிருக்கிறார்! அவைகள் எப்படியோ எனக்குத் தெரியாது. இவ்வூர் மேடு பள்ளங்களிலும், கும்பலிலும் ஜட்கா வண்டிப் பிரயாணம் மிக்க அபாயகரமானது. ஒவ்வொரு முறையும் நான் பயந்துகொண்டே ஏறுவேன். ஒரு தடவை வண்டி கவிழ்ந்து என்னைக் கீழே தள்ளி விட்டது. நல்ல வேளையாக, காயம் ஒன்றும் படாமல் தப்பினேன்; அதிர்ச்சியோடு விட்டது.

பங்களூரில் நான் தங்கி, விடுமுறையை நிம்மதியாய்க் கழிக்கச் சிரத்தையோடு ஏற்பாடு செய்த நண்பர்களை உனக்கு முன்பே ஒரு கடிதத்தில் அறிமுகம் செய்து வைத்தேன் அல்லவா? இவர்களுடைய அன்பும் உபசரணையும், என் உடலைப் பருக்க வைத்து விட்டன என்றால் பொய்யில்லை. இவர்களுடைய விசுவாசத்திற்குப் பிரதியாக நான் செய்யக் கூடியது ஒன்றுமேயில்லை. இக்கடிதத்தின் மூலம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சனி ஞாயிறில் மைசூர் போய் வந்ததாக உனக்கு எழுதியது ஞாபகமிருக்கும். வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமைக்குள் முடித்துக்கொண்ட இந்தப் பிரயாணத்தையும், நான் போய் வந்த இடங்களையும் பற்றி உனக்குச் சொல்வது அவசியம்.

ஆனால் நான் சென்று திரும்பிய அவசரமும், மைசூரின் அற்புதக் காட்சிகளும் என் மனதில் ஒரு சந்தேகத்தைக் கிளப்புகின்றன. ரயில் ஏறித் தூங்கிப் போய் இந்திரலோகத்தில் கண் விழித்தேனா என்பதே! பங்களூரின் அழகில் மயங்கிப் போனவர், மைசூரையும் பார்த்துவிட்டால் பிரமிப்புத் தட்டுமே தவிர, விவரிக்க முடியாது.

இயற்கைத் தேவியின் பரிசான, தண்ணீர், குளிர்ச்சி, செழுமை இவற்றோடு, மின்சார வசதி, குபேர சம்பத்து இவைகளைச் சாதனமாக்கிக்கொண்டு அழகு உணர்ச்சிப்போட்டி வைத்தால் முதல் பரிசு பெறக்கூடிய ஒருவர் தம் முழுத்திறமையைக் கையாண்டு, ஒரு பட்டணத்தைச் சிருஷ்டிக்கப் புறப்பட்டால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்கிற கேள்வைக்கு, மைசூர் என்று உடனே பதில் சொல்லலாம்.

ஊமை கண்ட கனவுபோல் என் உள்ளத்தில் புரண்டுகொண்டிருக்கும் மைசூரின் செளந்தர்யத்தை இந்தப் பேனா காகிதத்தின் உதவிகொண்டு, என் திறமையற்ற சொற்களினால் உனக்கு எவ்விதம் சொல்லப் போகிறேன் என்கிற தயக்கம் ஏற்படுகிறது.

மைசூரில் அதி காலையில் போய் இறங்கினேன். மழை பெய்துகொண்டிருந்தது. ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்ததும் குளிர்ந்த காட்சியில் கண் மயங்கிற்று. பிரும்மாண்டமான கட்டிடங்களும், அகன்ற சாலைகளும், மரங்களும் ஜில்லென்று உற்சாகமூட்டின.

நான் தங்கிய நண்பரின் வீடு ஒரு மேட்டில் நின்றது. கீழே போகும் சாலை அரசர் பவனி வரும் முக்யமான வீதியாகையால் ஜனங்கள் அதைக் காணும் பொருட்டு, செளகர்யமாய், சாலை நெடுக, குன்றின் சரிவில் படிகள் கட்டிவிட்டிருக்கிறார்கள்.

குளித்துக் காலை ஆகாரம் அருந்தியதும், எங்கள் நண்பர் தயாராய் ஏற்பாடு செய்திருந்த மோட்டாரில் புறப்பட்டோம். சாலைகளில் வண்டி செல்லும்போது, மைசூரின் கவர்ச்சி மந்திர சக்திபோல் என்னைச் சூழ்ந்து இருந்தது. நிழல் தரும் குல்முஹர் மரங்கள் சாலையில் வெயில் படாமல் பாதுகாத்து, செந்நிறப் புஷ்பங்களை உதிர்த்துக் தரையில் ஒரு சிவப்புக் கம்பளம் விரித்தாற்போல் காட்டின.

ஒரு சாலையில் குறுக்கே பந்தல் போட்டமாதிரி கொடிகள் பின்னிக்கொண்டிருந்தன. அழகுக்காகவே கொடிகளைக் குறிப்பிட்ட தூரத்திற்கு ஒரு தடவை இம்மாதிரி குறுக்கே கொணர்ந்து பிணைத்திருக்கிறார்கள். இச்சாலையின் குளிர்ச்சி டண்டி ஸடக் எனும் பெயருக்குப் பொருத்தமாயிருக்கிறது.

மைசூரைப் பூந்தோட்டப் பட்டணம் (Garden city) என்று சொல்வது பொருந்தும்.

முதலில், பிரசித்தி பெற்ற மைசூர் பட்டாடைகளை உற்பத்தி செய்யும் சாலைக்குச் சென்றோம். யந்திர சாலைகளைப் பார்ப்பதில் எனக்கு விருப்பம் தோன்றுவதில்லை. ஆனால் கண்ணைப் பறிக்கும் நிறங்களில், ஜரிகைப் பூவேலைகள் கொண்ட மைசூர்ப் பட்டுச் சேலைகள் தயாரிக்கும் சாலையைப் பார்வையிட யாருக்குத்தான் தயக்கம் ஏற்படும்?

கக்கூன்களிலிருந்து பட்டு எடுக்கப்படும் விதத்தை நான் பார்க்க விரும்பவில்லை! பட்டு இழைகளைக் கதிர்களின் மூலம் முறுக்கு ஏற்றி, தறிகளில் கோத்து, நெசவு ஆரம் பிக்கும் இடத்திலிருந்து பார்க்க ஆரம்பித் தேன்.

மைசூர் கிரேப், ஜார்ஜெட், பட்டு என்கிற மூன்று ரகங்களை முக்கியமாய்த் தயாரிக்கிறார் கள் என்பதை நீ அறிவாய். நெய்யும்போது சேலைகளை வர்ண இழைகளினால் நெய்வ தில்லை. உருப்படிகளைத் தயார் செய்த பிற்பாடு சாயம் ஏற்றுகிறார்கள். தயாரித்த சேலைகள் பல்வேறு மாதிரி ஜரிகைக் கரை களும், முந்தாணியும் நெய்யப்பட்ட சுத்த வெண் பட்டாகவோ அல்லது லேசான மஞ்சள் நிறத்திலோ காணப்படுகின்றன.

சாயம் தோய்க்கும் இடத்தில் பெரிய கல்தொட்டிகளில் பலவகை வர்ணச் சாயங் களைக் கொதிக்கும் நீரில் கலக்கிச் சுமை சுமை யாகப் பட்டு உருப்படிகளை நனைக்கின்றார்கள். —இயந்திரமே இதைச் செய்கிறது.

வர்ணம் அழுந்துவதற்கு ரசாயன முறை யில் பட்டுக்களை அலசி, பிறகு காயவைத்து, முழுச் சேலைகளை ஒன்றோடு ஒன்று பிணைத்து, இயந்திரங்களில் ஒரே சமயத்தில் உலர்த்தி இஸ்திரி போடுகிறார்கள். சேலைகளைப் பிணைக்க அவ்விடத்தில் ஒரு ஆஸாமி தையல் மிஷினில் அமர்ந்து வேலை செய்கிறார். பிரம் மாண்டமான உருளை இயந்திரம் நூற்றுக் கணக்கில் சேலைகளைக் காயவைத்து தன் முதுகில் உருட்டிக் கொள்வதை நான் சிறிது நேரம் நின்று கவனித்தேன். மனிதனைவிடப் பன்மடங்கு நிதானமும் நாசூக்கும் அந்த வேலையில் தெரிந்தது.

இதற்குப் பிறகு விற்பனை ஸ்தலத்திற்கு வந்தோம். உற்பத்திச் சாலைகளில் பெரும் பாலும் ஆர்டர்கள் எடுப்பதையே நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இவ்வழகிய சரக்கைக் கையோடு விற்பனைக்காகவும் ஏரா ளமாய் அடுக்கி வைத்திருப்பதை மைசூரில் தான் நான் முதல் தடவை பார்த்தேன். எனவே கண்ணைப் பறிக்கும் இந்த ஆடை களில் மாதிரிக்கு ஒன்றுவது வாங்கி, என் பணப் பையின் கனத்தைக் குறைக்காமல் வர மனம் இல்லை! பட்டுக்களை அவர்கள் அலட்சியமாய்ப் புரட்டும் போது, அவைகள் வெறும் சாக்குத் துணிகளா என்ன வென்று ஆச்சர்யமடைகிறோம்.

மைசூர்ச் சந்தனத்தைலம் உலகப் பிரசித்தி பெற்றது. இந்தச் சமஸ்தானத்தில் உள்ள சந்தன மரங்கள் அவ்வளவும் சர்க்காரின் எண்ணிக்கைக்கு உட்பட்டவை. தனியாக எவர்க்கும் இம்மரங்களை வளர்க்கும் உரிமை கிடையாது.

சந்தனக் கட்டைகளைச் சேதிப்பது, தூளாக் குவது, பிறகு அதினின்று நுண்ணிய தை லத்தைச் சொட்டுக் கணக்கில் வடித்து எடுப் பது யாவும் இயந்திரம் செய்கின்ற வேலை. சந்தனத் தைலம் இறக்கும் சாலைக்கு வெகு தூரத்தில் எங்கள் வண்டி நின்றதுமே ஜம் மென்ற வாசனை மனதைக் குளிரச் செய்தது.

ஏற்றுமதிக்காக டிப்போவில் ஏராளமான டின்களில் தைலத்தை நிரப்பி ஈயப்பற்று வைத்து அடுக்கியிருக்கிறார்கள். பெரிய கிரோசின் டின் அளவிலிருந்து ஒரே அவுன்சு பிடிக்கும் அளவு வரையில் டின்கள் மலை போல் குவிந்திருந்தன. ஒரு அவுன்சு தைலம் நம் ஊரில் ரூபாய் 5க்கு விற்கிற மதிப்பில் இங்குள்ள சரக்கின் கிரயம் எவ்வளவு ஆயி ரங்கள், லக்ஷங்களுக்கு ஓடக்கூடும் என்று என்னால் கணக்கிடவும் முடியவில்லை.

நான் தங்கியிருந்த வீட்டுக்காரர், எனக்கு ஒரு சந்தன மரத்தட்டைப் பரிசாகக் கொடுத்தார். அடுப்புக்கு வாங்கும் கட்டை களோடு தவறுதலாக வந்த ஒரு சந்தன மரத்துண்டில் இருந்து செய்வித்த அனேக தட்டுக்களில் அதுவும் ஒன்றும்! அதன் வாசனை என் பெட்டியில் இன்னமும் உள் ளது.

இதன் பிறகு கஜ சாலைக்குச் சென்றோம். பெயருக்குத் தக்கபடி ஒரு டஜன் யானைக ளைப் பழக்கி விசாலமான இடத்தில் வைத்தி ருக்கிறார்கள். அரசர் ஏறுவது ஐராவதம் என்கிற பெரிய யானை.

ஒரு பெண் யானை, தான் ஈன்ற மூன்று மாதக் குட்டிக்குப் பால் ஊட்டிக் கொண்டி ருந்தது. ஈசுவர சிருஷ்டியில் பிரம்மாண்ட மான வஸ்துக்களையும், மிகச் சிறிய வஸ்துக் களையும் பார்க்க நமக்கு ஆவல் உண்டாகி றது. இந்த யானைக் கன்று ஒரு எருமைக் கன்று அளவு பருமன், நீளம் இருந்தது.

தாயின் முன் கால்களுக்கிடையில் புகுந்து பால் அருந்திய கன்றை, தாய் யானை தன் தும்பிக்கையினால் அணைத்துத் தடவிக்கொ டுத்தது. யானைகள் தம் குட்டிக்கு மாடுகள் போல் பால் கொடுப்பதில்லையென்பதையும், மனித வர்க்கம்போல் பெண் யானைக்கு முன் காலுக்கு இடையில் மார்பு அமைந்திருப் பதையும் நான் அங்கே தெரிந்துகொண்டேன். இதைக் கவனித்து ஏதோ சொன்னபொழுது எங்கள் வழிகாட்டி ஒரு வேடிக்கையான விஷயத்தைச் சொன்னார். ஒரு நண்பர் ஐ. சி. எஸ். பரீக்ஷைக்குப் போன சமயம்



இரண்டும் தோற்றத்தில் ஒன்றே. ஆனால் ஒன்று அநாமதேயம்!

பார்வையைக்கண்டு ஏமாறக்கூடாது. இரு வாட்ச்கள் தோற்றத்தில் ஒன்றைப்போலவே இருக்கலாம். ஆனால் உழைப்பின் சக்தியில் வேற்றுமை இருக்கிறது. அதனால்தான் புகழ்பெற்ற கம்பெனியின் வாட்ச் வெற்றி பெறுகிறது!

கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக, உயரிய வேலைத்திறன், நாணயம், நீண்ட நாள் உழைப்பு, கவர்ச்சிகரமான அமைப்பு இவற்றுடன் கூடிய வாட்ச்களை வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனியார் தயாரித்து வருவதன் பயனாக, தம் புகழை நிலைநாட்டி யிருக்கிறார்கள். நீங்கள் எவ்வகை வாட்ச் வாங்கினாலும் சரி, எவ்விலை கொடுத்தாலும் சரி — வெஸ்ட் எண்ட் வாட்ச்களில் எல்லா நன்மைகளும் இருக்கின்றன.

சாமான்கள் வரத்து போதுமான அளவு இல்லாவிடினும், முடிந்தவரையில் தேவைகளை நிறைவேற்ற முயன்று வருகிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.
பம்பாய் :: கல்கத்தா

West End Watch Co.
BOMBAY CALCUTTA

ஜெண்டீல்
பாக்கெட் வாட்ச்
நிக்கல் ரூ. 60,
ரோல்ட்கோல்ட்
ரூ. 112,



வை. வா. வோஸ். என்கிற பரீக்ஷக்கு "யானை தன் குட்டிக்கு எப்படிப் பால்கொடுக்கிறது?" என்கிற ஒரு கேள்வி வந்ததாம். அந்த அப்பாவி மனிதர், "ஏன்? பசுவைப் போல்!" என்று பதில் சொல்லிவிட்டாராம்!

இன்னும் இரண்டு நாட்கள் தங்கினால் மைசூரில் யானை பிடிக்கும் காட்டுக்கு அழைத்துச் செல்வதாயும், அங்கே கூட்டம் கூட்டமாய் யானைகள் யதேச்சையாய்த் திரிவதை நாங்கள் பார்க்கக்கூடும் என்று அவர் சொன்னபொழுது எனக்குக் கொஞ்சம் ஆசை தட்டிற்று! ஆனால் சமயம் இல்லை.

Ronge elephant என்கிற ஆண் யானையைப் பற்றி அவர் சொன்னது விசித்ரமாக இருந்தது. ஓர் கூட்டத்தில் ஒரே ஆணும் அனேக பெண்களும், பெண் குட்டிகளும், ஆண் குட்டிகளுமாக வசிக்குமாம். அந்த ஒரே ஆண் யானைக்குக்கீழ்ப்படிந்து இந்தக்கூட்டம் நடக்கவேண்டும்; அது போகும் இடங்களுக்குக் கூட்டமும் பின் தொடரும். வேறு ஒரு ஆண் யானை இந்தக் கூட்டத்தை அணுகவே முடியாது.

நாளடைவில் கூட்டத்தில் வளர்ந்த ஒரு ஆண்யானைக் குட்டி பெரிதாகி, தலைவனைப் போல் நடிக்க ஆரம்பிக்குமாம். அப்பொழுது பழைய ஆண் யானை தன் ஸ்தானத்தை விடாமல் பெரிய சண்டை போடுமாம். ஆனால் கூட்டத்தில் உள்ள மற்ற யானைகள் புதிய தலைவனோடு சேர்ந்துகொண்டு பழைய யானையைத் துரத்தித் தள்ளிவிடுமாம். அது முதல் பழைய ஆண்யானைக்கு மதம் பிடித்து Ronge elephant ஆக மாறி, சகலர்க்கும் துன்பம் விளைவிக்குமாம்.

கஜ சாலையில் யானைக்கு வேண்டிய தழைகளைக் காட்டிலிருந்து கொண்டுவர, பெரிய வண்டிகளையும், எவ்வளவோ ஜதை மாடுகளையும் வைத்திருக்கிறார்கள். யானைக் குட்டி 5 மாதம் தாயின்பால் சாப்பிடுமாம். அதன் பிறகு 'சிறிது' அன்னம் கொடுப்பார்களாம். அங்கிருந்த இரண்டு குட்டிகளுக்குப் பகல் உணவாக ஒரு பெரிய கம்பளி நிறையச் சமைத்த அன்னத்தைக் கொட்டி ஆறவைத்திருந்தார்கள்! சுமார் பத்துப்படி அரிசி அன்னம் இருக்கலாம்.

காலையில் சுற்றுவதை இத்துடன் நிறுத்திக்கொண்டு, மைசூர் மார்க்கெட்டைப் பார்த்தபிறகு வீடு திரும்பினோம். அங்கே முக்கிய விசேஷம் புஷ்பக் கடைகள். அடடா! இந்த மல்லி மொக்குக்கு இவ்வூரில் மாத்திரம் ஏது இத்துணை நறுமணம்? பூக்கடைகளோ, அழகிய மாலைகளும் வேணிகளும் தயாரித்து அடுக்கடுக்காய், அலங்காரமாய்ச் சுமந்துகொண்டு இன்று முழுவதும் பார்த்துக்கொண்டு இருக்கலாமெனத் தோன்றுகின்றன. மேல்நாட்டில் ஏதாவது இம்மாதிரி (Florists)—புஷ்பக் கடைகள் இருக்கலாமோ, என்னமோ. நம் பிரதேசத்தில் இம்மாதிரி நாகரிகப் பூக் கடைகளை நான் கண்டதில்லை; இந்த வாசத்தை மோந்ததுமில்லை.

மார்க்கெட்டில் அடுத்தபடியாக பாதாமி என்கிற மாம்பழம் விசேஷம். சேலம் ஒட்டுப் பழத்தை இங்கே ரஸ்பூரி என்கிறார்கள். அவைகளின் வாசமும், ஆனால் சற்றும் புளிப்பே யில்லாத இனிப்பும் வாய்ந்தவை பாதாமி மாம்பழங்கள்.

இவைகளின் சாற்றைப் பாலில் கலந்து இனிப்பும் வாசனையும் சேர்த்து செய்யப்படும் ஆம்காரஸ் ஒரு நேர்த்தியான உணவு என்று ஒரு பிரயாணி ரயிலில் என்னோடு சொன்னார். நானும் அதை ஒத்துக் கொண்டேன். ரயில் நண்பருக்கு இதனால் உற்சாகம் மிகுந்து மைசூரின் அருமை பெருமைகளை வருணிக்க ஆரம்பித்து விட்டார்.

உலகமே புகழும் மூன்று அரும் பொருள்களை உற்பத்தி செய்யும் தனிச் சிறப்பு மைசூருக்கே உரியது என்று அவர் அடியிற் கண்ட வரிசையில் அவைகளை அடுக்கினார்.

(1) மைசூர்ப் பட்டு. யாரோ ஒருவர் மேனாடு சென்றபொழுது அங்குள்ள ஐரோப்பிய நண்பர்கள் "ஓ, உங்கள் ஊர்ப்பட்டு ஒரு கஜமும், ஒரு சந்தனச் சோப்புக் கட்டியும், எங்களுக்குக்கொண்டுவரக்கூடாதா?" என்று அங்கலாய்த்தார்களாம்!

(2) மைசூர்ச் சந்தனத் தைலம். இதன் உயர்வுக்கு இதுவரை போட்டியே கிடையாது.

(3) பாதாமி மாம்பழங்கள்!

ரயில் நண்பர் புகழ்ந்ததை நானும் ஆமோதித்து, ஆனால் நாலாவதாக (4) மைசூர் புஷ்பங்கள்—அதிலும் மல்லிகையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றேன்.

அவர், "நீங்கள் சொல்வது வாஸ்தவம். மைசூர் மல்லிகைக்கு இணை இவ்வுலகிலேயே வேறு இல்லை" என்று கூறி தம் ஜாபிதாவில் புஷ்பங்களையும் சேர்த்துக் கொண்டார். நானும் வெற்றியோடு மைசூர் மார்க்கெட்டில் மோந்த நறு மணத்தை மனதில் நினைத்துப் புன்னகை புரிந்தேன்.

அன்று பிற்பகல் 2மணிக்குமேல் மறுபடியும் சுற்றுவதற்குக் கிளம்பலாமென்று

ஏற்பாடு செய்து. அதற்குமுன் சற்றுநேரம் படுத்து உறங்குவது அவசியம் என்று நான் தங்கியிருந்தவீட்டுக்காரர் சொன்னபொழுது, அதை ஏற்றுக்கொள்ள எனக்கு மனமே வரவில்லை.

எதற்காகத் தூங்க வேண்டும்? இந்த ஊரிலோ சிரமமே தோன்றவில்லை. மேலும் உறங்கும் நேரத்தில் வேறு சில இடங்களையாவதுபோய்ப் பார்க்கலாமே என்று நினைத்துக் காலை நீட்டிக் கிழே படுத்தேன். அடடா! அவர் என்ன ஒரு மந்திரவாதியா? தூங்கு என்று கட்டளையிட்டால் கண்ணைச்சுற்றிக் கொண்டு அப்படியா ஒரு தூக்கம் வரும்?

சற்றுப் புரண்டு படுத்துக் கண்ணைத் திறந்த பொழுது மணி 2½. எங்கள் வழிகாட்டியோ, தயாராக உடுத்திக் கொண்டு நின்றார். "புறப்படலாமா? ஆனால் அவசரமேயில்லை. மெள்ள எழுந்து காப்பி அருந்திவிட்டுக் கிளம்புங்கள்." என்று அன்போடு உபசரித்தார்.

மைசூர் மன்னர் ஊரில் உள்ள சமயத்தில் கூட முன்னால் அனுமதி பெற்றவர் அரண்மனைக்குள் போய்ச் சுற்றிப் பார்த்துவர முடிகிறது. மற்றச் சமஸ்தானங்களில் இவ்வாறு இல்லை. இந்திர சபை போன்ற மண்டபங்கள், கண்ணைப்பறிக்கும் வர்ணச் சித்திரங்கள், தூண்கள், விளக்குகள், சிம்ம ஆசனங்கள், அபூர்வ வேலைப்பாடு கொண்ட தர்வாஜாக்கள், திரைகள் இவ்வாறு வருணிக்க முடியாத அழகையெல்லாம் ஒருங்கே மைசூர் அரண்மனையில் கண்டேன்.

கணக்கற்ற மின்சார விளக்குகளையும் சாதனங்களையும் பார்க்கும் போது மட்டும், இது இந்திர லோகமில்லை; மனிதனே இவ்வற்புதச் சிருஷ்டிக்கு கர்த்தா என்று நினைவில் வருகின்றது.

ஓர் இடத்தில் தற்போதைய மன்னரின் பெரியப்பாவும், முந்திய அரசருமான ஸ்ரீ கிருஷ்ண ராஜேந்திர உடையாரின் திரு உருவம் ஒன்றை வெண்களிமண்ணால், உயிர் அளவுக்குச் செய்து, அற்புதமாய் இயற்கை வண்ணம் தீட்டி, தத்ஸ்வரூபம் உயிருள்ளவர்போல் உட்கார வைத்திருக்கிறார்கள். கையில் ஓடியுள்ள நீல நரம்புகள்கூட நிஜம் போலவும் கண் இமைகள் இந்த க்ஷணமே கொட்டுமென்றும் முகத்தில் புன்னகை தவழுமென்றும் நான் பிரமை கொண்டேன்!

நமக்குப் பிரியமானவர் இறந்துபோக நேரிட்டால் பெரிய புகைப்பட உருவங்களைச் செய்விப்பதைவிட இம்மாதிரி சிலை செய்து வைத்துக்கொள்ளக் கூடுமானால் எவ்வளவு ஆறுதலாக இருக்கும்? உயிருள்ளவரைக் கண்டதுபோல் தினமும் காணலாமே? என்று ஒரு கணம் நினைத்தேன்.

ஆனால் நமக்குப் பிற்காலம் இச்சிலைகளில் யாருக்கு அக்கரை இருக்கக் கூடும்? சாதாரண மனிதராகிய நமக்கு இச்சிலைகளைப் பரிபாலிக்கும் வசதிதான் ஏது? மன்னாதி மன்னரே இவ்வகை ஞாபகச் சின்னங்களுக்கு லாயக்கானவர் என்று என்னையே தேற்றிக் கொண்டு ஒரு பெருமூச்செறிந்தேன்.

அங்குள்ள தங்கச் சிம்மாசனத்தில் அரசர் வருடத்திற்கு ஒரு முறையே ஏறுவது வழக்கமாம். முன்னே பூஜை செய்து ஆசனத்தைக் கௌரவித்து, பாதங்கள் அதில் படாமல் அமர்வதும் தொன்று தொட்டு ஏற்பட்ட பழக்கங்களாம்.

அரசர் ஏறும் பஞ்ச கல்யாணி என்கிற அசல் வெள்ளைக் குதிரையைப் பார்த்தோம். பேச்சுக்குச் சொல்வதற்காகவாவது ஒரு சிறிய கறுப்புப் புள்ளி அதன் உடலில் இருக்குமோவென்று தேடினேன்: கிடையவே கிடையாது. அதன் உடலில் பள பளப்பும் கண்களின் ஜ்வலிப்பும் அரசர் ஏறும் குதிரை என்பதற்குப் பொருந்தியவை. உடலில் ஏழு இடங்களில் சுழிகளும், இவ்வளவு வெண்மையாயும் உள்ள பரிகளையே தேர்ந்து எடுப்பது மைசூரில் வழக்கமாம். பவனி வருமுன் அரசர் பஞ்சகல்யாணியையும் பூஜித்தே ஏறுவாராம்.

லலிதா மஹால் என்கிற அரண்மனை மைசூரின் விசேஷ அதிதிகளுக்கென்றே அமைக்கப்பட்ட பிரும்மாண்டமானதோர் அரண்மனை. கவர்னர்கள், இராஜப் பிரதிநிதிகள் விஜயம் செய்து தங்கும் இடம். சாமுண்டியை எதிர்நோக்கி, கம்பீரமான தனிமையில் நிற்கின்றது.

வெள்ளையர் நாகரிகத்திற் கேற்றவாறு அங்கே விலை யுயர்ந்த பொருள்களை அலக்ஷியமாய் வாங்கிக் குவித்திருக்கிறார்கள். வைஸ்ராய், வைஸ்ரீன் வரும்போது படுக்க, உடுக்க, உலாவ, வேலை செய்ய, விளையாட இம்மாதிரி தனிப் பகுதிகளை வெகு அழகாய் நிறுவியிருக்கிறார்கள்.

நடனமாடும் ஒரு பெரிய அறையின் முழுத்தளத்தையும் மின்சார விசையினால் மேலே தூக்கி இறக்கும் விந்தையை இங்கே கண்டேன்.

ஒரு காலத்து இந்திய வைசிராய், லார்டு வின்லித்கோ அதிக உயரமான மனிதர் அல்லவா? அவர் மைசூருக்கு விஜயம் செய்தபொழுது, லலிதாமஹாலில்உள்ள கட்டில்கள்

நீளம் போதாவென்று எட்டு அடி நீளமுள்ள ஒரு கட்டிலை அவருக்காகச் செய்தார்களாம்!

பிறகு சாமுண்டி மலையைக் 'காரில்' ஏறினோம். விளக்குகள் பொருந்திய பிறகு மலையின் தோற்றம் ஒரு பெரிய முதலையின் வடிவத்தை ஒத்திருக்கின்றது. சாமுண்டி தேவியின் சக்திக்கு நான் பிரத்யேகமான என் முறையிலும், மற்றவர் அவரவர் முறையிலும் பக்தி செலுத்தினோம். கோவிலுக்குப் போகுமுன் உள்ள மகிஷாஸுரனின் பிரும்மாண்ட, வர்ணச்சிலை நம்மைப் பிரமிக்க வைக்கின்றது.

மலைமேல் மைசூர் மன்னர் தங்குவதற்கான ஒரு கோடை அரண்மனை உள்ளது. அதைச் சுற்றிப் பார்க்கையில் மாடி ஏறியதும் எதிரே தோன்றும் ஆறுபட்டை நிலைக் கண்ணாடிகளில் எங்கள் கூட்டத்தினரின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகமாகக் காட்டிற்று. திடீரென்று ஒரு கூட்டத்தில் பிரவேசித்துவிட்டேனென்று நினைத்து நான் ஏமாந்து போனேன்!

சாமுண்டிக்கு ஏறும் வழியில் படுத்திருக்கும் பஸவாவைப்பற்றி உனக்குச் சொல்ல வேண்டும். ஒரே பாறையில் செதுக்கப்பட்டு, முன் கால் ஒன்றைத் தூக்கி ஊன்றி, பஸவா படுத்திருக்கின்றது. இவரை வலம் வந்து, தூக்கிய திருவடிக்குள் நுழைந்து புறப்படும் போது, பக்தர் மனதில் எண்ணுவது நிச்சயமாய்ப் பலிக்கும் என்று என் நண்பர் கூறினார்.

இதன் உண்மையை நிரூபிக்க, அவர் சொன்ன ஒரு கதையையும் உனக்குச் சொல்கிறேன். வடக்கேயுள்ள லக்ஷ சீமான் ஒருவர்க்கு இவர் மைசூரைச் சுற்றிக்காண்பிக்கையில் பஸவாவின் சக்தியையும் எடுத்துச் சொன்னார்.

அந்த மனிதர் ஒரு வருஷங் கழித்து இவருக்கு ஒரு கடிதம் எழுதினாராம். அதில், ''பஸவாவை வலம் வந்து குனியும் சமயம், இன்னும் எத்தனை நாளைக்கு நான் பிரும்மசாரியாக இருப்பது என்று நினைத்துக் கொண்டேன்: இன்றோ, என் மனைவியாகிய ....வுடன், எங்கள் இனிய 'தேன்மதியை'யைச் சீமையில் கழிக்கின்றேன். உன்னை நன்றியோடு நினைத்து இக் கடிதம் எழுதலானேன்,'' என்று எழுதியிருந்ததாம்.

இன்றைய உலகில் அழகை வளர்க்கும் சாதனங்களில்
தலை சிறந்து விளங்குவது எது?

பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்தான்!

இதை ஒருமுறை வாங்கி உபயோகிப்பவர் வேறு எந்தத் தைலத்தையும் விரும்பார்.

இதன் மணம், குணம், வாசனை

எப்பொழுதும் மனதை உற்சாகப்படுத்தி உபயோகிப்பவர்களுக்கு இன்பம் பயக்கின்றது.

இக்காரணங்களே "பிரஸிடெண்ட்" வெஜிடபிள் ஹேர் ஆயில் சீக்கிரத்தில் உயர்வடையக்காரணம்.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்போர்:

ரதோட் டிரேடிங் கம்பெனி,

21, தொளசிங்கம் தெரு, ஸௌகார்பேட்டை, சென்னை-1.

பிரபுவுக்கு அப்பொழுது வயது 52!! பஸவா சாதிக்கும் காரியங்களைப் பாரு.

அன்று சனிக்கிழமை. மாலை $6\frac{1}{2}$ மணி ஆகிவிட்டது. சனி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை $7\frac{1}{2}$ மணி முதல் இரவு 10 மணிவரை கண்ணம்பாடி அணைக்கட்டில் மின்சார விளக்குகளைப் போட்டு, தண்ணீர்த்தொட்டிகளை அழகு படுத்துகிறார்கள். இதை உத்தேசித்தே நான் மைசூர்ப் பிரயாணத்தை அந்தத் தினங்களில் நிர்மாணித்திருந்தேன்.

நாங்கள் அங்கே போய்ச் சேரும்போது மணி $7\frac{1}{2}$– பிருந்தாவனம்!!

அம்மம்மா, அற்புதக் காட்சியடி என்றுதான் பாடவேண்டும். அதன் அழகை வருணிக்க!

என்ன பசும்புல் தரைகள், செடி கொடிகள், தண்ணீர்த் தொட்டிகள்! கண்ணைப் பறிக்கும் விளக்குகளும், பௌண்டன்களும், வளைவுகளும், உயர்ந்த ஸ்தம்பங்களும், பரந்த குடைகளும் மழையையே பொழிகின்றன; ஆயிரக்கணக்கான சிறிய துவாரங்களின் மூலம் ஜலத்தை வாரித் தூவுகின்றன!

கற்பனை செய்ய இயலாத, வானவில் நிறங்களில் மின்சார விளக்குகள் இவைகளுக்கு உருவமும், வெளிச்சமும் தருகின்றன., நடு நடுவே நடை பாதைகள்: ஏறி இறங்கப் படிகள்: முடிவிலோ பெரும் நதி போல் பாயும் ஜலம்: அதில் போய்வர உல்லாசப் படகுகள்.

ஓர் இடத்தில் ராதாவும் கிருஷ்ணனும் சலவைக் கல்லினால் தங்களைப் பிறப்பித்துக்கொண்டு, தண்ணீர் மத்தியில் ஆனந்த நர்த்தனமிடுகிறார்கள்.

வர்ண வெளிச்சத்தில், பாதையில் அருவம் போல் நடமாடும் ஸ்திரீகளும் ஆடவரும் ஒரு ஸ்வப்ன உலகத்துக் கோபிகளும் கண்ணனுமாய் நமக்குத் தோன்றுகிறார்கள். "பிருந்தாவனத்தில் வளர்ந்த" அந்தநாளே வந்துவிட்டதாய்க் கற்பனை செய்தபொழுது மனதில் எழுந்த களிப்பில் என்னை மறந்துநின்றேன்.

பிருந்தாவனம் என்று எவ்வளவு பொருத்தமான பெயர்! இந்த அற்புதச் சிருஷ்டி உலகத்தின் கரையில் ஜனங்கள் தங்குவதற்குச் சௌகர்யமாய் ஒரு பிரும்மாண்டமான மூன்று அடுக்கு விடுதி உள்ளது. அதன் முகட்டில் ஆசனங்களில் அமர்ந்து, பிருந்தாவனத்தின் அழகையும், கண்ணாடிக் கோப்பைகளில் விடுதிக்காரர் அளித்த குளிர்ந்த பானத்தையும் ஒருங்கே பருகினோம்.

எங்கள் வழிகாட்டியோ எங்களைச் சற்றும் அவசரப்படுத்தவில்லை. "இன்னும் ஒருமுறை சுற்றி வருகிறீர்களா? அந்த ஓரம் போய்ப் பார்க்கலாமா? படகில் ஊர்வலம் வருகிறீர்களா?" என்றெல்லாம் விசாரித்து உபசரித்தார். எவ்வளவு நாழிகைதான் தேனையே அருந்திக்கொண்டிருக்க முடியும்?

இரவு $9\frac{1}{2}$ மணிக்கு மைசூர் திரும்பினோம். இந்த 12 மைல் பாதை முழுவதும், காங்க்ரீட் போட்டு, மின்சார தீபங்களினால் பிரகாசப் படுத்தியிருக்கிறார்கள்.

வழியில் பிரிந்து ஸ்ரீரங்க பட்டணம் சென்றிருக்கலாம். 30 வருஷ முன்பு தரிசித்த காவேரி ஆற்றின் உறவை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள உள்ளம் ஆவல் கொண்டது: ஆனால் இயலவில்லை. அதேபோல், திருநாராயணபுரத்துப் பெருமாளை—செல்வப் பிள்ளையை—தரிசிக்கவும் எனக்குப் பிராப்தமில்லை.

ஜிலுஜிலுவென்று மைசூர் திரும்பினோம். உள்ளம் ஆயிரம் வைர நகைகளைப் பூண்டது போல் ஒளிவிட்டது. மூளையில் வர்ணங்களும், வெளிச்சங்களும், தண்ணீர்த் திவலைகளும், பட்டு ஆடைகளும் கொடி செடிகளும், ஒன்றுக்ச் குழம்பிக்கொண்டு இருந்தன! ஒரே வேளை போஜனத்தில், ஹல்வா, பாதம்கீர், ஜாங்கிரி, பேணி, லட்டு, ப்ரூட் ஸாலட், ஐஸ் க்ரீம் இவை அனைத்தையும் சாப்பிட்டமாதிரி ஒரு உணர்ச்சி மிகுந்திருந்தது.

ஞாயிற்றுக்கிழமை பகல் $2\frac{1}{2}$ மணிக்கு நான் பங்களூர் திரும்ப ரயில்; அன்று காலையில் மைசூரில் பாக்கி நின்ற இன்னும் சில இடங்களுக்குப் புறப்பட்டோம்.

மைசூர் Zoo வைப்பற்றி நீ கேட்டிருக்கிறு யல்லவா? அங்கே சிங்கத்தை ஒரு பெரிய இடத்தில் சுயேச்சையாய் உலவ விட்டிருக்கிறார்கள். தூரத்தில் பார்க்கும்போது சிம்மம் எந்த நிமிஷம் நாலுகால் பாய்ச்சலில் ஓடி வந்து நம்மைப் பிடிக்குமோவென்று அஞ்சினேன். ஆனால் கிட்டப்போனதும், அந்தப் பெரிய இடத்தைச் சுற்றிலும் ஆழமான அகழ் வெட்டி வைத்திருப்பதும், துஷ்ட சந்துக்கள் அதைத் தாண்டுவது அசாத்தியமென்பதும் புரிந்தது. நிம்மதி அடைந்தேன்.

சிங்கம் தவிர, குரங்குகளின் செய்கைகளைக் கவனிப்பது எனக்குப் பிடித்திருந்தது. ஒரு பெண்குரங்கு, கண்ணில் வலிவந்து இமைகள் ஒட்டிக்கொண்டிருந்த தன் காதலனுக்குப் பரிதாபப்பட்டுப் பிரலாபித்ததும் துடிதுடித்துப்போய் இமையை நக்கியும் பிய்த்தும் அதன் கண்ணை விடுவித்த காட்சியை நான் மறக்கவேமாட்டேன். இரண்டும்

சந்தோஷ மிகுதியில் கட்டிக்கொண்டு எங்களைப் பார்த்துப் பல்லைக் காட்டியது விசித்ரமாயிருந்தது.

ஜகன்மோகன அரண்மனையில் தற்காலம் கண்காட்சிச்சாலை வைத்திருக்கிறார்கள். பூர்வ காலத்துப் படங்கள், திரைகள், ஆசனங்கள் இத்தியாதி. எல்லாம் அரண்மனைக்குச் சொந்தமானவை. ஒரு அரசகுமாரிக்குச் சீதனம் வந்த வெள்ளி இயந்திரத்தையும், உலக்கையையும் அங்கே கண்டேன்.

மேல்தளத்து ஒரு பெரிய அறையை ரவி வர்மாஹால் என்கிறார்கள். அந்த ஓவியக்காரர் தீட்டியுள்ள பிரும்மாண்டமான வர்ண சித்திரங்கள் அருமையானவை. யாரும் பார்க்கவேண்டியது அவசியம். பீஷ்மரின் சபதமும் ஸீதா ஸ்வயம்வரமும் என் கண் முன்னே இப்பொழுதும் தோன்றுகின்றன.

காந்தி அடிகள் மைசூரில் தங்கியபொழுது அரசர் அவருக்குத் தந்த ஒரு சர்க்காவை அங்கே கண்டேன். அடிகள் நூற்ற சர்க்கா வென்று நானும் அதை ஒரு சுற்றுச் சுற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன்.

பிரியமுள்ள —! இந்நீண்ட கடிதத்தின் முடிவிற்கு வந்துவிட்டேன். ஏற்கனவே நான் சொன்னபிரகாரம், உனக்கு அலுப்புத் தட்டும் இடங்களில் என்னை மன்னித்துவிடு—ஆனால் கடிதம் படிப்பதற்குச் சுவாரஸ்யமாக இருந்தது என்றுமட்டும் எழுத மறந்து விடாதே! இல்லாவிட்டால் நான் மன முடைந்து போவேன்!

மைசூரிலிருந்து ரயிலில் பங்களூர் திரும்பிக் கொண்டிருந்தேன். என் உள்ளம் அமைதியான ஒருவித இன்பத்தில் தோய்ந்து மிதந்து கொண்டிருந்தது. ரயிலும் அதற்கு ஏற்ற வாறு ஊர்ந்து சென்றுகொண்டிருந்தது.

கணக்கற்ற செல்வத்தைப் பிரயோகித்து, இக் குபேர பட்டணத்தைச் சிருஷ்டித்த மூளைக்கு மௌனமாய் அஞ்சலி செலுத்தினேன். இயற்கையும் செல்வமும் எவ்வளவு மகத்தான உதவி அளித்து இதைச் சிருஷ்டித்திருந்த போதிலும், ஈசுவரனின் பார்வை பூர்ணமாய் விழுந்திருந்தாலன்றி இவ்வளவு உன்னத ஸ்தானத்தை மைசூர் எங்ஙனம் பெற்றிருக்கக் கூடும்? லக்ஷ்மியின் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாகி, அதைக் காப்பாற்றி வரும் பெருமை மன்னர்க்கு முற்றிலும் உரியது. கீதையின் பத்தாவது அத்யாயத்தில் உள்ள சுலோகம் இதற்குப் பொருத்தமாக அமைந்திருப்பதை மனதில் எண்ணினேன்.

யத்யத் விபூதிமத் ஸத்வம் ஶ்ரீமதூர்ஜிதமேவ வா |
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ச ஸம்பவம் ||

"எதெது பெருமையுடைத்து, உண்மையுடைத்து, அழகுடைத்து, வலிமையுடைத்து———அதது எல்லாம் எனது ஒளியின் அம்சத்தில் பிறந்ததென்றுணர்."

இவ்வாக்கியங்களைச் சிந்திக்கும்போது, இயற்கைக் காட்சியில் லயித்திருந்த என் கண்களில் நீர் நிறைந்தது. ஏனோ சொல்ல முடியாத ஒரு வேதனை நெஞ்சை அமுக்கிற்று. ரயில் ஸ்ரீரங்கபட்டணத்தை அணுகும் சமயம்: காவிரியாற்றைக் கடந்து பாலத்தின் மீது ஊர்ந்து சென்றது.

பாறைகளையும் கற்களையும் லேசாய் அலசிக்கொண்டே பாய்ந்த காவிரியின் மிதமான வேகத்தை நான் குனிந்து கவனித்தேன்: வெகு நாள் பழகிய இனிய நண்பனைப் பிரிவதுபோல் மனம் சோர்ந்து கண்ணீர்கொட்ட ஆரம்பித்தது.

லேசாய் விழுந்த மழைத் துளிகளை மறைக்க அருகில் இருந்த ஒரு ஐரோப்பிய ஸ்திரீ, ஜன்னல் கதவைக் கீழே விட்டாள். அச்செய்கையின் மூலம் என்னையும் ஸ்வய நினைவிற்குக் கொணர்ந்து, ஆற்றின் வேகம் போலவும், அது என் கண்ணிற்கு மறைந்தது போலவும், என் வாழ்க்கையும் ஓடி மறைகின்றது என்பதை ஞாபகம் மூட்டினாள். ஆம், வருந்துவதில் என்ன பிரயோசனம்?

கதவைச் சாத்தியதற்காக என் மன்னிப்பை வேண்டி அவள் கூறிய மரியாதைச் சொற்களுக்கு நான் மௌனமாய்ப் புன்னகை புரிந்தேன், கண்ணீருக்கிடையே.

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!

Use Fordson MAJOR TRACTORS

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)**

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

தியாகம்

டி. எஸ். குழந்தைக்காதன்

“ஆனால், மகாதேவி, இதைத் தவிர வேறு உபாயந்தானென்ன?”

“சுவாமி, ஒரு தாய் தன் புத்திரி சம்பந்தமாக இம்மாதிரியான வெறுக்கத் தக்க திர்மானத்தை ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டாள்.”

“ராணி, அப்படியானால் நாம் பிறந்து வளர்ந்த இத் தாய்நாடு ஒரு புத்திரியைப் பலி கொடுக்காத காரணத்தால் காட்டு மிராண்டிகளான ஹூணர்களால் அழியட்டும் என்பது உன் விருப்பமா?”

“பலியா? சுவாமி, இவ்வளவு நிஷ்டூரமான பரிகாசம் வேண்டாம். இது பலியல்ல, அவமானம். இது கேவலம் ஒரு காஷ்மீரப் பெண்ணின் அவமானமல்ல; காஷ்மீரின் எல்லாப் பெண்களின் அவமானமேயாகும்.”

மகாராஜா பிரவர்ஸேனுடைய முகத் தோற்றம் சற்றுக் கம்பீரமடைந்தது. அவர் யோசனையிலாழ்ந்தார். அவருடைய புருவங்கள் நெறிந்தன. நெற்றியில் கவலையின் கோடுகள் நெளிந்தன. அவருடைய கண்ணெதிரே காஷ்மீரத்தின் பூராச் சௌந்தர்யமும் காட்சியளித்தது. தூய வெண்ணிறமான பனிக்கட்டியால் மூடப்பெற்ற மலைத்தொடர் அரண்மனையின் வெளிப்புறத்து ஏரியின் மறுபுறத்திலிருந்து ஆரம்பித்துத் தூரத்தில் தெரியும் அடி வானம்வரை பரவியிருந்தது. ஏரியின் ஸ்படிகம் போன்ற நிர்மலமான ஜலத்தில், பனிக்கட்டி தவழும் வானளாவிய பருவதச் சிகரங்களின் பிரதிபிம்பம் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. காலை நேரத்தின் மந்தமாருதம் ஒவ்வொரு வீட்டிலும் நறுமணத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. பட்சி இனங்களின் இனிய நாதத்தைத் தவிர சூழ்நிலையில் பூரண அமைதி நிலவியது.

ஆனால், அந்த அமைதியான சூழ்நிலையிலும் கூட இத் தம்பதிகளின் மனதும் மூளையும் அமைதியற்றிருந்தன. மன நிம்மதியைத் தரும் அக்காலை நேரத்திலும்கூட மகாராஜாவும் மகாராணியும் வாட்டமுற்றிருந்தனர். இரு கருத்துக்கள் கொண்ட பெரிய பிரச்னை அவர்கள் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தது. ஒருபுறம் ராஜகுமாரி ரத்னமாலா; மற்றொருபுறம் காஷ்மீரின், காஷ்மீர மக்களின் நலமும் சுதந்திரமும்.

“அப்படியானால் என்ன முடிவு செய்தாய், ராணி?”

“முடிவு செய்வது நானல்ல, நீங்கள்தாம் சுவாமி.”

“ஐம்பதாயிரம் பொன் நாணயங்களைக் கொடுத்தும் ரத்னமாலாவை மிஹிர்குலுக்கு மணம் செய்வித்தும் காஷ்மீரத்தின் சுதந்திரத்தை எப்படியாவது காக்கவேண்டும் என்பதுதான் என் எண்ணம்.”

“ஆஹா, சுவாமி! க்ஷத்திரியர்களின் உடைவாட்கள் துருப்பிடித்துப் போயிருக்கின்றன என்பதும், காஷ்மீர மக்களின் ரத்தக் குழாய்களில் கொதித்துக் கொண்டிருக்க வேண்டிய உஷ்ணமான ரத்தத்திற்குப் பதில் பனியைப் போன்ற சீதளமான வெறும் தண்ணீர் ஓடத் தொடங்கியிருக்கிறது என்பதும் எனக்குத் தெரியாமற் போய்விட்டதே!”

“ராணி!” மகாராஜா ஆவேசத்துடன் கூறினார்: “கேள் ராணி, அமைதியான மனத்தால் சிந்தித்துப் பார். ராஜீய விஷயத்தைப்பற்றி ஆவேச உணர்ச்சியுடன் ஆலோசிக்கக் கூடாது. பரபரப்பை விடுத்து அமைதியுடன் சிந்திக்கவேண்டும். குப்த சாம்ராஜ்யத்தின் முடிவுக்காலம்; அண்டை நாட்டிற்கு உதவி அளிக்கும் சக்தி பலமிழந்த குப்த சக்கரவர்த்திகளிடம் இப்பொழுது கிடையாது; அண்டை நாட்டிற்கு உதவ முடியாமற் போவது போகட்டும்; அவர்கள் தங்களது சுதந்திரத்தையாவது காக்க முடியுமா என்பதில் எனக்குச் சந்தேகம். அவர்கள் உதவி செய்வதுதான் எப்படி? முரட்டுச் சுபாவம் கொண்ட மிஹிர்குல் காஷ்மீரத்தின் எல்லைப்

புற மாகாணங்களைத் தன் வசமாக்கிக் கொண்டுவிட்டானே. எனவே வெளி உதவி சாத்தியமில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நமது கடமை.........?

"அப்படியானல், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நமது கடமை, ஒரு க்ஷத்திரியன் ஜீவித்திருக்கும்வரை, தன் ஒரு துளி ரத்தம் மிஞ்சியிருக்கும்வரை தன் தாய் நாட்டைக் காக்கப் போராட வேண்டியது என்பது தான்'' என்று மகாராணி மிகுந்த ஆவேச முற்றவளாய்க் கூறினள்.

''அப்புறம் நீ.........?'' — மகாராஜாவின் இந்தக் கேள்வி ஆராய்ச்சிக்குரிய சிந்தனையைத் தூண்டிற்று.

''பிறகு நாங்களா? மகாராஜா, நாங்கள் ஜன்மபூமி காஷ்மீரத்தின் மீது ஆணையிட்டுப் பிரதிக்ஞை செய்து கொள்ளுகிறோம். 'காஷ்மீரத்தின் சத்துருக்களால் நசுக்கப் படுவதற்குமுன்பே எங்களை மாய்த்துக் கொள்ளுவோம்' ''ஹாம்''

மகாராஜா சற்று யோசித்த வண்ணம் வெளியே சென்று விட்டார்.

* * *

காஷ்மீர மகாராஜா யுத்தப் பிரகடனம் செய்தார். ஆயுதம் தரிக்கச் சக்தியுள்ள ஒவ்வொரு நகர வாசியும் காஷ்மீரச் சுதந்திரப் படையில் சேர்ந்து விட்டனர். குடியானவர்கள் கலப்பையைப் பிடிப்பதற்குப் பதில் கையில் வாளைப் பிடித்தனர். வணிகர்கள் வியாபாரத்தை நிறுத்தி விட்டுப் போர்க்கோலம் பூண்டனர். வீட்டில் இருக்க வேண்டிய ஸ்திரீகள் ஆண்களின் ஸ்தானத்தை மேற்கொண்டனர். கவிகளின் வீரத்தை ஊட்டும் கவிதைகளால் நாடு எதிரொலித்தது. ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் வீரத்தின் மானத்தைக் காக்கத் தலைநகரான ஸ்ரீநகரில் கூடி போர்க்களத்தை நோக்கிச் செல்ல ஆயத்தமாயினர்.

''ராஜகுமாரி! ராஜகுமாரி!'' இவ்வாறு கூப்பிட்டுக் கொண்டு மேல் மூச்சு வாங்கச் சுனந்தா அறையில் பிரவேசித்தாள்.

ராஜகுமாரி ரத்னமாலா ஜன்னலருகில் சலவைக் கல்லால் அமைக்கப் பெற்ற திண்ணையில் உட்கார்ந்தபடியே காஷ்மீரத்தின் வனப்பு மிகுந்த இயற்கை அழகை ரசிப்பதில் ஈடுபட்டிருந்தாள். அவளெதிரே முற்றத்தில் நீர் ஊற்றிலிருந்து நீர்த்தாரைகள் வானத்தை நோக்கிக் கிளம்பி அங்கிருந்து தெறித்து முத்துக்கள் போன்ற நீர்த்துளிகள் வடிவத்தில் கீழே ஜலத்தில் விழுந்து மறையும். சலவைக் கற்கள் பதித்த அழகிய குளங்களில் சுத்தமான, நிர்மலமான ஜலம் தளும்பிக் கொண்டிருந்தது. அவைகளில் சிவப்பு, நீலம், வெள்ளை ஆகிய நிறங்களுடைய அழகிய தாமரைப் பூக்கள் பாதி மலர்ந்த படியே காட்சியளித்தன.

அஸ்தமனக் கதிரவனின் செந்நிறக் கிரணங்கள் பனிக்கட்டியை ஒத்த, ராஜகுமாரியின் சுந்தரவதனத்தில் பட அது அன்று மலர்ந்த செந்தாமரை மலரைப்போல் அற்புதக் களையுடன் ஜ்வலித்தது. பொன்னொளி வீசும் அவளது முகத்திலிருந்து திவ்ய தேஜசு சொட்டியது. ராஜகுமாரியின் நிறம் பச்சைப் பாலை ஒத்தது. சாமுத்திரிகா லட்சணங்கள் பொருந்திய அவளது எழிலழகிற்கேற்ப, பாதி திறந்த பெரிய பெரிய அவள் கண்கள் அதிவசீகரமானவை. ராஜகுமாரி சந்தடியற்று உட்கார்ந்திருந்தாள்.

''ராஜகுமாரி!'' என்று சுனந்தா கூவினள் ''ஓஹோ, சுனந்தாவா, எவ்வளவு அழகான கனவு தெரியுமா!'' நீ என் இன்பக் கனவைக் கலைத்து விட்டாயே.''

''ராஜகுமாரி, கோட்டையின் பின்புறப்பாகத்தில் நமது சேனையின் முன்னணிப் பட்டாளத்தைச் சேர்ந்தோர் கூடியிருக்கிறார்கள். செல், பார்த்து வரலாம்: ராஜகுமாரி, இவ்வாலிபர்கள் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தங்கள் உயிரை இழக்கத் தயாராயிருக்கின்றனர். ஆஹா, முரடர்களான ஹூணர்களோ...........''

''முரடர்களான ஹூணர்களோ.........'' ராஜகுமாரி பெருமூச்சு விட்டாள்.

''செல் ராஜகுமாரி''

இருவரும் அங்கிருந்து சென்றனர்.

சுதந்திரப் போர் மூண்டுவிட்டது. காஷ்மீரத்தின் வெகு நாளைய அமைதி குலைந்து விட்டது: நாடு நிர்த்தூளிபட்டது. காஷ்மீரத்தின் பசுமை நிறைந்த மலைச்சாரல்கள் மனித சஞ்சாரமற்றுச் சூன்யமாயின. காஷ்மீரத்தின் செல்வங்களே திரண்டு உருவெடுத்தாற்போன்ற அழகிய பூஞ்சோலைகளும், நந்தவனங்களும், அழகிய பெண்களின் மிருதுவான பாதங்கள் படும் புல்லடர்ந்த மைதானங்களும் குண்டர்களான ஹூணர்களின் கால்களால் நசுக்கப் பட்டுத் துவண்டு போயின.

காஷ்மீரச் சேனைகள் திரும்பத் திரும்பத் தோற்கடிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் போர்க்களத்திலிருந்து வரத் தொடங்கின. பொருள், ஆசை பிடித்த காம வெறியர்களான ஹூணர்களால் மிதிக்கப்பெற்றுப் பூமியே நடுங்கிற்று. காஷ்மீரில் வீடுகளிலிருந்து பரிதாபகரமான அழுகைக் குரல் கிளம்பி வானையே பிளக்கத் தொடங்கிற்று.

"ராணி, பார், இது உன்னுடைய பிடிவா தத்தின் பலன்"

"இது சுதந்திர யுத்தம், மகாராஜா, அதைரியப்படாதீர்கள்." என்று மகாராணி சமாதானம் கூறினாள்.

"ஆஹா, அம்மா! நீ ஏன் இவ்வளவு கொடூரமானவளாய் இருக்கிறாய்? பரிதாப மான இக் கூக்குரலையும் அழுகைக் குரலையும் கேட்டுவிட்டு நீ எப்படியம்மா சகித்துக் கொண்டு இருக்கிறாய்? இத்தனை உயிர்க ளின் நலனையும் நிம்மதியையும் கருதியாவது எதிரிகளிடம் என்னை ஏன் ஒப்படைத்திருக் கக் கூடாது?" என்று ரத்னமாலா மன முருகிக் கூறினாள்.

"ரத்னமாலா. ஓர் காஷ்மீரப் பெண் இவ் வளவு கோழையல்ல. நீ இங்கிருந்து போய் விடு! உன்னைப்போன்ற பால் மணம் மாருத சிறுமிகள் அரசியல் விவகாரங்களை நிர்வகிக்க முடியுமானால் புகழ்பெற்ற ஆலோசகரான ஸ்ரீ குமாரிமல்பட் போன்றவர்களுக்கு என்ன வேலை?"

"அம்மா!"

"போ பெண்ணே, போய்ச் சுகமாய் ஓய் வெடுத்துக்கொள்."

ராஜகுமாரி ரத்னமாலா அங்கிருந்து தன் இருப்பிடம் நோக்கிச் சென்றாள்.

* * *

"காஷ்மீரே! தாய்நாடே! ஆஹா! இல்லை சுனந்தா, நான் இதைச் செய்யத்தான் வேண்டும். அனாதைகளாகப் பரதவிக்கும் இவ் விதவைகளின் துக்கம் நிறைந்த புலம்பலையும் குழந்தைகளின் அழுகைக் குரலையும் என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இவர்கள் இவ் விதம் பிரலாபிப்பதைப் பார்க்க என் இருத யம் வெடித்துவிடும் போலிருக்கிறது."

"ஆனால், ராஜகுமாரி........."

"ஆனால் என்ன, ஒன்றுமில்லை. நீ சும்மா இரு சுனந்தா. நான் ஆலோசிக்கட்டும்."

"ஆனால், மகாராஜாவுக்கோ அல்லது மகா ராணிக்கோ இவ்விஷயம் தெரிந்துவிட்டால்?"

"சுனந்தா, நம் நாட்டுப் பெண்கள் தங்கள் கடமையை நன்றாய்த் தீர்மானித்துக்கொண் டே எதையும் செய்வார்கள். நான் கைகளைக் கட்டிக்கொண்டு செயலற்றுச் சும்மா இருக்க வேண்டுமா? அநாதைகளாக்கப்பட்ட விதவைகளின் துயரம் நிறைந்த புலம்பல் பிரதி தினமும் அதிகரித்துக்கொண்டிருக்க வேண்டுமா? இதுதான் உன் யோசனையா? காஷ்மீரின் பவித்திரத் தன்மை அழிந்தாலும் அழியட்டும்; நான் என்னை மட்டிலும் பவித் திரமானவளாகக் காத்துக்கொண்டால் போதுமானது என்பது உன் உள்ளக் கருத்தா?"

"ஆனால், ராஜகுமாரி, காஷ்மீர் வெகுகால மாகப் பவித்திரமான புண்ய பூமியாக இருந்து வந்திருக்கிறது."

"நீ முழுப் பைத்தியம் என்பதில் சந்தேக மில்லை. காஷ்மீர் என்று எதற்குப் பெயர்? கேவலம் இந்த நதிகள், அருவிகள், குளங்கள் முதலிய இயற்கை வனப்புகள் நிறைந்த பூமியின் பெயரா? பைத்தியமே; இது கேவலம் காஷ்மீர் சரீரமேயாகும். காஷ்மீ ரின் ஆத்மாவோ நானும், நீயும் காஷ்மீரின் ஒவ்வொரு குழந்தைகளுமே யாகும். காஷ்மீ ரின் ஆத்மாவே துன்புறும்போது நாம் அதன் உடலைக் காத்து என்ன செய்வோம்? ஆத்மா அடிமையானல் உடலும் அடிமையாகும்."

"ஆனா......ல்........."

"அப்புறம், ஆனாலென்ன? இன்று காஷ் மீரத்திற்கு இச்சரீரம் தேவையாயிருக்கிறது. நான் என்னை அர்ப்பணம் செய்துகொள் வேன். நீ தடுக்காதே சுனந்தா. நான் போகட்டும்; நான் போகட்டும். ஜய காஷ் மீர்! ஜய காஷ்மீர்!"

ராஜகுமாரி ஆயுதச் சாலைக்குள் நுழைந் தாள். சுனந்தா வியப்பால் திகைப்புற்றாள்; காவலாட்கள் திகைப்புற்றனர்; பரிசாரப் பெண்கள் திகைப்புற்றனர். ராஜகுமாரி ஆயுதச்சாலையில் தனக்கு வேண்டிய ஆயுதங் களை எடுத்துக்கொண்டிருந்தாள். 'சிப்பாய்!' அவள் சிப்பாயைக் கூப்பிட்டாள்.

"ஆக்ஞை, ராஜகுமாரி"

"எனக்கு இந்தக் கவசத்தைப் பூட்டு"

சிப்பாய் பிரமிப்படைந்தான்.

"என்ன யோசிக்கிறாய்"?

"ஆனால், சேனாதிபதியின் கட்டளை......"

"இது என் கட்டளை. ராஜகுமாரி ரத்ன மாலாவின் கட்டளை. உத்தரவுக்குக் கீழ்ப்படி."

ராஜகுமாரியின் கண்களிலிருந்து ஒருவித விசித்திர ஜ்வாலை கிளம்பிக்கொண்டிருந்தது. அடர்ந்த அவளது கேசம் அவளுடைய அழகிய முகத்தைச் சுற்றி முப்புறங்களிலும் சிதறுண்டிருந்தது. அவளது நெற்றி தெய் வீகக் காந்தியுடனும் பொலிவுடனும் பிரகா

சித்தது. பிரத்யட்ச யுத்த தேவதையைப் போலானாள் ரத்னமாலா. காவலாள் பயந்துவிட்டான்.

* * *

குதிரைமீது சவாரி செய்துகொண்டு மலைப் பாதை வழியாக ஒருவன் அதி வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். அவன் தரித்திருந்த இரும்புக் கவசமும் இரும்புத் தொப்பியும் சூரிய கிரணங்களின் பொன்னொளிபட்டுப் பிரகாசித்தன. அவனுக்கு இருபுறங்களிலும் பனிக்கட்டியால் மூடப் பெற்ற வானளாவிய பருவதச் சிகரங்கள் கம்பீரமாகக் காட்சியளித்தன. பசுமை நிறைந்த—ஆனால் ஜன நடமாட்டமற்ற—மலை அடிவாரம் அந்தப் பிரமாண்டமான மலைத் தொடரின் மடியில் ரமணீயமாகத் தோற்றமளித்தது. குதிரை மீதிருந்த அம் மனிதன் இடுப்பில் தொங்கிக்கொண்டிருந்த நீண்ட உடைவாள் குதிரை துரிதமாக ஓடிக்கொண்டிருந்தமையால் அதன் கால்களில் பட்டு மேலும் கீழும் துள்ளிக் குதித்தது. மலையின் ஓர் ஓரத்தில் ஹூணர்களின் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

காவலாளி, குதிரைமீது வரும் அம் மனிதன் தன்னை நோக்கி வருவதைப் பார்த்ததும் தன்னிடமிருந்த சங்கை ஊதினான். அமைதியான மலைப்பிரதேசம் எதிரொலித்தது.

"நில், நீ யார்?"

"நான் மகாராஜா பிரவர்ஸேனனின் விசேஷ வேலையாள். நான் இப்பொழுது ஹூண ராஜாவைச் சந்திக்கவேண்டும்"

"ஏன்?"

"நான் சமரசத் தூதன்."

காவலன் தன்தோழனை நோக்கி, சமிக்ஞை செய்தான். தோழன் சென்றான். சிறிது நேரம் கழித்து அவன் வந்து "அனுமதிக்கலாம்" என்றான்.

குதிரைமீதிருந்தவன் தன் குதிரையைக் காவலாளிடம் ஒப்படைத்துவிட்டுச் சிப்பாயுடன் சென்றான். ஒரு பெரிய கூடாரத்தின் அருகே சென்றதும் அவன் இடுப்பிலிருந்த உடைவாள் அகற்றப்பட்டது. அக் குதிரை வீரன் கூடாரத்திற்குள் பிரவேசித்தான். அக் கூடாரம் ஓர் ஆயுதச்சாலையைப்போல் தெரிந்தது. தரையில் மான், சிங்கம் முதலிய காட்டு மிருகங்களின் தோல் விரிக்கப்பட்டிருந்தது. ஓர் உயர்ந்த ஆசனத்தில் ஹூண அரசன் வீற்றிருந்தான். தோலங்கி தரித்து, பளப்பளப்பான ஈட்டியைப் பிடித்துக் கொண்டு மெய்க்காவலாளிகள் அவனுக்கு இரு புறங்களிலும் நின்றுகொண்டிருந்தனர். எதிரே பச்சை மாமிசமும் மதுவும் இருந்தன. ஒரு பெண் மதுவை ஊற்றிக்கொண்டிருந்தாள்.

"நீ யார்?" மிஹிர்குல்லின் கரடுமுரடான இக் குரல் கூடாரத்தில் எதிரொலித்தது.

"நான் தூதன்."

"என்ன வேண்டும்?"

"நான் தங்களிடம் மகாராஜா பிரவர்ஸேனனுடைய செய்தியைத் தெரிவிக்க வந்துள்ளேன். ஆனால், சம்பாஷணை இரகசியமானது. தனிமையில் பேசவிரும்புகிறேன்."

ஹூணராஜன் சமிக்ஞை செய்தான். கூடாரத்திலிருந்து காவலாட்களும் நடன மாதர்களும் வெளியே சென்று விட்டனர்,

குதிரை வீரன் தன் இரும்புத் தொப்பியைத் தலையிலிருந்து எடுத்துக் கீழே தரையில் போட்டான். அவனுடைய நீளமான சுருண்ட கேசம் அவிழ்ந்து அவன் தரித்திருந்த கவசத்தின்மீது பட்டுப் படர்ந்தது.

"நீ யார்!"

"இப்பொழுது தெரிந்து கொள்ளவில்லையா, ஹூணராஜாவே? நான் ராஜகுமாரி ரத்னமாலா. எந்த ரத்னமாலாவை அடைவதற்காக நீ, ஒரு பாபமுமறியாத நிரபராதிகளான உயிர்களைக் கொன்று ரத்தம் வெள்ளம் ஓடச் செய்கிறாயோ அதே ரத்னமாலா தான் நான். நான் உன் வீரத்தையும் அசகாயச் சூரத்தனத்தையும் மெச்சுகிறேன்."

"ஓஹோ, ரத்னமாலாவா! ரத்னமாலாவா!'

மிஹிர்குல் மதம் கொண்ட யானையைப் போல் ரத்னமாலாவை நோக்கி நகர்ந்தான்.

* * *

ஒரு சில நாட்கள் சென்றன. ராஜகுமாரி ரத்னமாலாவைப் பற்றி எங்கிருந்தும் யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. அன்று ஆயுதச்சாலையைக் காவல் புரிந்த அதே காவ

புதுமை உணர்ச்சிக்கும் சரும ஆரோக்கியத்திற்கும் **மலபார்** லிம்டா சோப்புத்தான் சிறந்தது.

சுத்தமான வேப்பெண்ணெய் சேர்க்கப்பட்டது.

FAS-461.

VEGETABLE SOAP WORKS, CALICUT.
PROPRIETORS: SAIT N.P. & CO. LTD.
CALICUT-BOMBAY-2-MADRAS-1.

லாள், ராஜகுமாரி அங்கு ஆயுதம் எடுத்துக் கொள்வதற்காக வந்திருந்தாள் என்று மட்டும் மகாராஜாவிடம் தெரிவித்தான்.

மகாராஜா' மகாராணி, ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—எல்லோரும் மிக்க வியாகுல மடைந்தனர். ஆனால் இவ்விஷயத்தை யுத்தம் காரணமாக இரகசியமாக வைத்திருந்தனர். யுத்தகளத்திலிருந்து நம்பிக்கை தரும் செய்திகள் வரத்தொடங்கின. ஹூணர்கள் எவ்விதக் காரணமின்றியே காஷ்மீர் எல்லையில் பின் வாங்கிக் கொண்டிருந்தனர். காட்டுமிராண்டிகளான அவர்களது முரட்டுச் செயல்களில் சிறிது மாறுதல் தெரிந்தது. இவ்வெல்லா விஷயங்களைப் பற்றியும் ஆலோசிப்பதற்காக மகாராஜா அந்தரங்க சபையைக் கூட்டினார்.

நடு நிசி. நாற்புறங்களிலும் முற்றிலும் பூரண நிசப்தம் குடிகொண்டிருந்தது. அந்தரங்க சபையிலுள்ளோர் ஆலோசனையில் மூழ்கி இருந்தனர். சபாமண்டபத்தின் வெளியில் காவலாட்கள் காவல் புரிந்த வண்ணம் அதி உஷாராயிருந்தனர். திடீரென்று தொலையில் குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. காவலாட்கள் முன்னிலும் அதிக உஷாரடைந்தனர். குதிரை மீதிருந்தவன் சரியாக ஆலோசனை மன்றத்திற்கெதிரே வந்து இறங்கினான். எத்தனையோ இடங்களில் அவனுக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவன் வாசலை நோக்கி முன்னே சென்றான். காவலாட்களின் கூரிய ஈட்டிகள் அவனைத் தடுத்து விட்டன.

"முட்டாள்களா, என்னையும் தெரிந்து கொள்ளவில்லையா?"

"யார்? ராஜகுமாரியா!" காவலாட்கள் திடுக்கிட்டனர். சிப்பாய்கள் தலை வணங்கினர்.

"மகாராஜா அந்தரங்கமான விவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார்."

"விஷயம் மிக முக்கியமானதாக இருக்க வேண்டும். அப்பாவுக்கு என்னைப்பற்றிய கவலையும் இருக்கவேண்டும்"

காவலாட்களின் தலைவன் மந்திராலோசனை நடந்து கொண்டிருந்த இடத்திற்குள் பிரவேசித்தான். ஆச்சரியத்தால் திடுக்கிட்டு எல்லோரும் அவனை நோக்கினர்.

"மன்னிக்க வேண்டும், மகாராஜா. வெளியே வாயிலில் ராஜகுமாரி இருக்கிறாள்,"

"ராஜகுமாரியா?" இவ்வாறு மகாராஜா தழுதழுத்த குரலில் வினவினார்.

"ராஜகுமாரியா?" என்று கேட்டு ஆலோசனை மன்றத்தின் அங்கத்தினர் அனைவரும் திடுக்கிட்டனர்.

"அவளை உள்ளே அழைத்து வா. இதோ பார், ராஜகுமாரி வரும் செய்தி மிக இரகசியமாக இருக்கட்டும்" என்று மகாராஜா தம் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு சொன்னார்.

ராஜகுமாரி ரத்னமாலா உள்ளே வந்தாள்.

"ரத்னா, பெண்ணே, என் கண்மணியே, எங்கேயிருந்தாயம்மா?" என்று பொறுமையை இழந்தவராய் மகாராஜா கேட்டார்.

"இல்லை, இல்லை மகாராஜா, நான் தங்களுடைய புத்திரியல்ல. நான் நீசமானவள். துரோகியாவேன். நான் என் சரீரத்தைக் கொலைபாதகனான ஹூண அரசனுக்குச் சமர்ப்பித்துவிட்டேன். ஆனால் எனக்கு வேறு வழியில்லை."

"ராஜகுமாரி ரத்னமாலா, இதென்ன புதிராக இருக்கிறது?" என்று வயோதிக மந்திரி ஆச்சரியத்துடன் வினவினார்.

"புதிரல்ல, உண்மை; மந்திரியே, ஆலோசனை மன்றத்தைச் சேர்ந்த நீங்கள் எல்லோரும் சற்று அமைதியாகவிருங்கள். நான் உங்களுக்கு என் பூராக் கதையையும் விவரித்துச் சொல்வேன்."

மகாராஜா ஆசனத்தில் அமர்ந்தார். எல்லோரும் உட்கார்ந்தனர். காவலாட்களின் தலைவன் சமிக்ஞை பெற்று அங்கிருந்து சென்றான். ராஜகுமாரி கவசத்தில் பத்திரமாக வைத்திருந்த காகிதக் கட்டு ஒன்றை வெளியே எடுத்தாள்.

"மகாராஜா, நான் என்னைப்பற்றிய கதையை உங்களுக்குச் சொல்லுமுன் இந்தக் காகிதங்களை ஆலோசனை மன்றத்தின் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன், இவைகள் ஆக்கிரமிப்பிற்காக ஹூணர்களால் தயாரிக்கப்பட்ட கற்பனைச் சித்திரங்கள்."

"ஆக்கிரமிப்புத் திட்டப் படலங்களா!" சபையோரின் ஆவல் அதிகரித்தது.

"சேனாதிபதி, பாருங்களேன்" இவ்வாறு மகாராஜா ஆக்ஞையிட்டார்.

அக் கற்பனைச் சித்திரங்களை சேனாதிபதிக்குப் பிறகு மகாராஜாவும் பார்வையிட்டார்.

"ஆனால், இவைகள் உனக்கு எப்படிக் கிடைத்தன ராஜகுமாரி?"

"பெண்களின், குழந்தைகளின் பரிதாபமான கூக்குரலை என்னால் கேட்க முடியவில்லை மகாராஜா! ஹூண ராஜன் ஐம்பதாயிரம் பொன் நாணயங்களைப் பெற்றுக் கொண்டு என்னை மணக்க விரும்புகிறான் என்பது யுத்தம் துவங்குமுன்னரே எனக்குத் தெரியும். காஷ்மீர மக்கள் தங்கள் விருப்பத்திற்குப் புறம்பாக யுத்தப் பிரகடனம் செய்யும்படி தங்களை நிர்ப்பந்தித்துச் சுதந்திர தேவிக்குப் பலிதானம் செய்யத் தொடங்கினர்."

"பிறகு?"

"ஆயிரக்கணக்கான வீரர்கள் மடிந்தனர். நூற்றுக்கணக்கான பெண்கள் அநாதையாயினர். அவர்களது துக்கம் நிறைந்த புலம்பலை என்னால் சகிக்க முடியவில்லை. எப்படியாவது அதைச் சகித்துக்கொண்டிருப்பது எனக்கு ஒருவேளை சாத்யமாயிருக்கலாம். ஆனால் இடைவிடாமல் நம் சேனைகள் முறியடிக்கப்பட்டு வருவதாகப் போர்க்களத்திலிருந்து செய்திகள் வந்துகொண்டிருந்தன."

"இது உண்மைதான் ராஜகுமாரி. ஆனால் நம் நாட்டினர் தங்களது கடமையை நன்கு உணர்ந்தவர்கள். ஹூணர்கள் தங்களது உசிதமற்ற கோரிக்கைகளால் உங்களை மட்டிலும் அல்ல காஷ்மீர் முழுவதையுமே அவமானப்படுத்தினர்." என்று சேனாதிபதி கூறினர்.

"இது சரிதான் சேனாதிபதியே, நான் ஒரு சாதாரண நகரவாசியாக இருந்தால் ஒருவேளை இம்மாதிரி அசட்டுத் துணிவு காட்ட முயற்சித்திருக்கமாட்டேன். ஆனால், நானோ தேசத்தின் ராஜகுமாரி."

"நேரம் மிகக்குறைவு, ராஜகுமாரி, சொல்லவேண்டியவற்றைச் சுருக்கமாகச் சொல்" என்று மகாராஜா ஆத்திரங்கொண்டு சொன்னார்.

"அப்படியானால் சரி, நாகரிகம் முதிர்ந்த பெரியோர்களே! அன்றிரவு நான் என் கடமையைத் தீர்மானித்துக்கொண்டு கிளம்பிவிட்டேன். ஹூண ராஜன் என்னை வரவேற்றான். அதன் பிறகு ...... பிறகு ...... ஐயோ ...... அப்பா"

சேனாதிபதி தேற்றித் தைரிய மூட்டினர். ராஜகுமாரியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது,

"நான் இந்தியப் பெண்ணின் கௌரவத்தை இழந்துவிட்டேன். ஆனால் நாட்டின் நலனையும் உரிமையையும் கருதியே நான் இம்மாதிரி செய்தேன் என்பதைக் கடவுள் தாம் அறிவார்."

"பிறகு ராஜகுமாரி?"

"அத்துஷ்டன் பேச்சோடு பேச்சாக ஒரு நாள் சொன்னான்: "நான் இந்நாட்டின் செல்வங்களைக் கொள்ளையடிக்க வந்திருக்கிறேன். உன்னையோ என் அதிகாரத்திற்கு உட்படுத்திவிட்டேன். இப்போது உன் ராஜ்யத்தையும் அம்மாதிரி செய்யவேண்டும்.

ஐம்பதாயிரம் பொன் நாணயங்களையும் என்னையும் அடைந்தும் கூட அவன் நமது நாட்டை ஆக்கிரமித்திருப்பான்."

"இதுதான் நடந்தே தீருமே" என்று மந்திரி ஆமோதித்தார்.

"அவன் வெளியில் சென்றபோதெல்லாம் ஆக்கிரமிப்புத் திட்டத்துக்காக அவர்கள் அமைத்த கற்பனைப் படலங்களுக்கு நான் நகல் தயாரித்தேன். விரும்பியிருந்தால் நான் அவைகளையே எடுத்துவந்திருப்பேன். அதனால் அம்முரடன் தன் முறையை மாற்றிக் கொண்டுவிடுவான். எனக்குத் தெரிந்தவரை அவர்களது சேனைகள் பின்வாங்குவதிலும் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நம்மை மறக்கடித்துவிட்டுத் திடீரென அவர்கள் நம்மை ஆக்கிரமிக்கக்கூடும்."

"மிகவும் நல்லதாயிற்று. சபை தீவிரமாய் ஆலோசிக்கும். நீ தாழ்வுற்றது குறித்து எங்கள் மனது புண்பட்டுவிட்டது. ஆனால், நீ செய்ததெல்லாம் நாட்டின் நன்மைக்காகவே செய்தாய். நீ கர்ம வீராங்கனையாவாய் ராஜகுமாரி ரத்னமாலா" என்று வயோதிக மந்திரி புகழ்ந்து பேசினார்.

"ஹூணராஜன் பழிவாங்கப்படுவான் என்று நான் பிரதிக்ஞை செய்துகொள்கிறேன்" என்று சேனாதிபதி ஆவேசத்துடன் சொன்னார்.

* * *

காஷ்மீர வீரர்கள் முன்னிலும் அதிக ஊக்கத்துடன் எதிரிகளைத் தாக்க ஆரம்பித்தனர். முதல்தாக்குதலிலேயே ஹூணர்களின் ராஜா மிஹிர்குல் கைதுசெய்யப்பட்டான். இமயமலையின் மலைச்சாரல்களும், பள்ளத்தாக்குகளும், குகைகளும் காஷ்மீர வீரர்கள் சிந்திய ரத்தத்தால் கறையாக்கப்பட்டன. குப்தச் சக்கரவர்த்திகளும் காஷ்மீரச் சேனைகளுக்கு உதவி அளித்தனர். யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் ஹூணர்கள் சேர்ந்தாற்போல் பின்வாங்கிக்கொண்டிருந்தனர். பள்ளத்தாக்குகள் வழியாக ஓடிவிடலாம் என்பது அவர்கள் எண்ணம். ஆனால் காஷ்மீர வீரர்கள் அந்த மார்க்கங்களையும் முன்பே வசப்படுத்திக் கொண்டிருந்தனர். ஸ்கந்த குப்தனும் ரத்னமாலாவும் தாங்களே சேனைகளை நிர்வகித்தனர். ரத்னமாலாவின் அபாரத் திறமையைப் பார்த்து ஸ்கந்தகுப்தனுக்கு அதிக ஆச்சரியமுண்டாயிற்று. அவன் மனத்தில் அவளைப்பற்றி விசேஷ சிரத்தை பிறந்தது. முன்னும் பின்னும் இருபுறங்களிலும் எதிரிகள் சூழ்ந்துகொண்டுவிட்டதை அறிந்த ஹூணர்கள் நம்பிக்கையிழந்து முன்னிலும் அதிக பயங்கரப் போர் புரிந்தனர். ஆனால் காஷ்மீர வீரர்களின் பலம் அவர்களைச் சக்தியற்றவர்களாக்கிவிட்டது. ஆயிரக்கணக்கான ஹூணர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கான ஹூணர்கள் இமயத்தின் சீதள மலைச்சாரல்களில் தங்கள் அசுத்த ரத்தத்தைச் சிந்திவிட்டுச் சாந்தி அடைந்தனர்.

காஷ்மீரிகள் வெற்றி எய்தினர். 'காஷ்மீருக்கு ஜே!' என்ற பயங்கர கோஷத்தால் தூர மத்திய ஆசியாவிலிருக்கும் ஹூணர்களும் நடுங்கினர். 'காஷ்மீருக்கு ஜே!' என்ற கோஷம் இமயப் பருவதத்தின் சரிவுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் குகைகளிலும் எதிரொலித்தது. காஷ்மீர வீரர்கள் அநேக ஹூணர்களை மன்னித்துவிட்டனர். ஆனால் மிஹிர்குலை உயிரோடு செக்கில் வைத்து அரைத்துவிட்டனர்.

* * *

தவசத்தைக் கழற்றிக் கொண்டே ரத்னமாலா சொன்னாள்: "ராஜகுமாரி ரத்னமாலாவின் கடமை நிறைவேறிவிட்டது, சுனந்தா. க்ஷத்திரிய நாரியின் கடமையை இனி நிறைவேற்ற வேண்டும்."

"அப்படியானால், இப்பொழுது தங்கள் பார்வை யுவராஜா ஸ்கந்த குப்தர் மீது பட்டிருக்கிறதோ?"

"சுனந்தா சும்மாவிரு. அவர் பவித்திரமான க்ஷத்திரிய சிரேஷ்டர். நானோ நீசமானவள்."

"ஆனால், ராஜகுமாரி ...."

"என் குற்றத்திற்காக என் தேசவாசிகள் என்னை மன்னித்துவிட்டனர் என்பதை நான் அறிவேன். ஆனால் என் மனம் என்னை மன்னிக்கவில்லை. என் மனம் வேதனை நிறைந்திருக்கிறது. நான் பிராயச்சித்தம் செய்வேன்."

* * *

இன்று இரண்டாவது பிரவர்ஸேன் அமைத்த அந்த நகரமும் இல்லை; ராஜகுமாரி ரத்னமாலாவும் இல்லை. காஷ்மீர் செல்லும் யாத்ரிகர்களுக்கு இன்றும் ஸ்ரீநகர் அருகே ஒரு நகரத்தின் பாழடைந்த பாகங்கள் தென்படும். பாழடைந்த அந்தப் புராதனக் கட்டிடங்களில் ஏதாவதொன்றில் ரத்னமாலாவின் அறையும் இருந்திருக்க வேண்டும். அப்பாழடைந்த பிரதேசத்தில் இன்றும் யாராவது பிரயாணிகள் சென்று, 'காஷ்மீருக்குஜே!' என்று கோஷித்தால் அதன் இனிமையான எதிரொலி 'காஷ்மீருக்குஜே!' என்பதைக் காது குளிரக் கேட்கலாம் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறது.

புரியாத பொருள்

சௌரி

"இந்த அதிசயத்தைக் கேட்டீர்களா!" என்று கூறிக்கொண்டே வந்தாள் ரஸிகா.

"என்னடியம்மா அவ்வளவு பெரிய அதிசயம்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் பாரவி.

"அரண்மனையிலே உங்கள் காவியத்திலுள்ள நீதி மொழிகளை எல்லா இடங்களிலும் எழுதிவைத்திருக்கிறார்களாம்!"

"அந்தப்புரத்தில் நடக்கிறதையும், அடுப்பங்கரையில் இருக்கிறதையும், அம்பலப்படுத்தும் திறமையை உங்களுக்கெல்லாம் எதற்குத்தான் கொடுத்திருக்கிறானோ அந்தப் பிரும்மா......!''

"எங்களை இழுக்காவிட்டால் உங்களுக்கெல்லாம் பிழைப்பேது? அது இருக்கட்டும்; ஏன் இப்படியெல்லாம் எழுதியிருக்கிறார்கள்?"

"புது மோகம்; வேறென்ன? என் காவியத்தில் அரசர்களுக்கும் ஜனங்களுக்கும் இன்றியமையாத நீதிகள் ஏராளமாம். அந்த மொழிகளெல்லாம் எப்போதும் எல்லோருக்கும் தென்பட பல இடங்களில் எழுதிவைத்திருக்கிறார்கள்."

"அம்மன் கோயிலில்கூடப் பார்த்தேன்."

"கோயில், கொத்தளம், சத்திரம், பாடசாலை, வைத்தியசாலை இம்மாதிரி பொது இடங்கள் பூராவிலும் எழுதியிருப்பார்கள். அதுமட்டுமா, இந்த நகரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் எழுதியிருக்கிறார்கள்."

"அதுதான் நம் வீட்டிலும் எழுதியிருக்கிறீர்கள்.........ஆனால் நான் குடித்தனம் செய்ய வந்ததிலிருந்தே இவைகளெல்லாம் இருக்கின்றனவே!"

"இதெல்லாம் என் சிறு பிராயத்தில் என் தகப்பனாரே எழுதிவைத்தவை. என்னுடைய அறிவை வளர்த்தவர் அவர். எனக்கு அறத்தைக் கற்பித்து ஆத்மாவையே வளர்த்தவை இந்த மொழிகள். உயர்வையும் இவ்வளவு பெருமையையும் நான் அடைந்துகொண்டிருப்பது இவைகளால்தான்''

"ஏதோ வீட்டின் அழகுக்காக என்று எண்ணியிருந்தேன். அவ்வளவு பெருமை வாய்ந்தவைகளா இவைகளெல்லாம்?.....!''

"என் பிதா எனக்கு வைத்துப்போன மிக உயர்ந்த பொக்கிஷம் இவைகள்தாம். நான் இந்த மொழிகளின் பொருளை உண்மையாகப் புரிந்துகொள்வதற்கு முன்பு......... ஐயோ! நினைத்துப் பார்க்கவே முடியவில்லை''

"என்ன நாதா! உங்கள் உடம்பு நடுங்குகிறதே! ஏன் இப்படி மயிர்க் கூச்சல்? என்ன சொல்லுங்களேன்."

"சொல்லவே வெட்கமாக இருக்கிறது. ரஸிகா! நீங்களா இப்படி இருந்தீர்கள்' என்று ஆச்சரியப்படுவாய்."

"இவ்வளவு காலமாக மறைத்துத் தானே வைத்திருந்தீர்கள், என்னிடத்தில்கூடச் சொல்லாமல்............''

"இப்பொழுது தான் சொல்லுகிறேன், கேளேன்—''

* * *

"நான் அக்ஷராப்யாஸம் முதற்கொண்டு பிதாவிடம்தான் பயின்றேன், அவர் பாடசாலை வைத்துப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து வந்தார். ஸ்ரீதராசாரியார் பாடசாலை மிகவும் நன்றாக நடக்கிறது என்று எல்லோரும் கொண்டாடுவார்கள். மற்றப்பிள்ளைகளைவிட நான் மிக எளிதாகவே எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு விடுவேன். சிறுவயது முதற்கொண்டே சர்ச்சை செய்வதில் எனக்கு ஆர்வம் அதிகம்.

"ஒரு நாள் என் தகப்பனாரின் நண்பரொருவர் அப்பாவைத் தேடிக் கொண்டு வந்தார். அப்போது எனக்கு வயசு இருபது. அதற்குள்ளேயே என் பிதாவிடமிருந்து நாலுசாஸ்

198051

திரங்களிலும் திறமையைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டேன்.

வந்தவர் " ஸ்ரீதராசாரியார் இருக்கிறாரா?" என்று கேட்டார். என் அப்பா வெளியே போயிருந்த சமயம். "வெளியே போயிருக்கிறார்" என்று சொல்லியிருக்கலாம். ஏனோ குறும்புத்தனம் அப்போது என்னை விடவில்லை."

"இப்பொழுது மட்டும் என்ன; ரொம்ப குறைந்திருக்கிறதாக எண்ணமோ?"

'இதைக் கேளு?" என் பிதாவின் பாததூளியால் புனிதமான இந்த வீட்டில் தற்சமயம் மட்டும் அவர் இல்லை என்பது இருக்கிறது" என்று வக்ரநடையிலே பதிலளித்தேன். வந்தவர் பெரிய பண்டிதர். நான் இறுமாப்புடன் ஏளனம் செய்வதாக எண்ணிக் கொண்டார். என் பதிலிலேயே பல குற்றங்கள் இருப்பதாகக் கண்டித்தார். இருவருக்கும்வாக்குவாதம் வளர்ந்து விட்டது. நான் சொல்லியதிலெல்லாம் புதிய புதிய ஆக்ஷேபங்களைக் கிளப்பினார். எல்லாவற்றிற்கும் நான் சமாதானம் சொல்லிக் கொண்டே வந்தேன். அவரும் சலிக்கவில்லை. நானும் தளரவில்லை. கடைசியாக என்னை அவர் கட்டிக்கொண்டு— "உன்னைப் பிள்ளையாகப் பெற்றதற்கு ஸ்ரீதரர் எவ்வளவோ பாக்யம் செய்திருக்க வேண்டும்."

"மஹோன்னதமான ஸ்தானத்தைவைத்துக் கொண்டு வருங்காலம் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. எல்லா நன்மைகளும் சேரச் சிறப்பாக வாழப் போகிறாய்" என்று உள்ளத்தோடு ஆசீர்வதித்தார். உடனே என் பிதாவும் வந்து சேர்ந்தார். அந்தப் பண்டிதர் என்னையும் புகழ்ந்து நடந்ததையும் கூறினார்.'

"உங்கள் அப்பாவும் பெருமையால் பூரித்துப் போயிருப்பார்."

"அதுதானே இல்லை. அதற்குக்கூட நான் ஆசைப்படவில்லை. என்னை மட்டமாகப் பேசி உற்சாகத்தைக் குலைக்காமலிருந்தாலேயே போதுமென்று எண்ணியிருந்தேன்.

"அவர் என்னைப்பற்றி வாழ்த்துகிறவர்களிடத்திலெல்லாம்—"உங்கள் புகழ்ச்சிக்குத் தகுந்தவனே இல்லை என் பிள்ளை. வாயாடித்தனமும் அறியாமையும்தான் அவனிடம் நிறைந்திருக்கின்றன" என்று என் காதில் விழும்படியாகவே சொல்வது வழக்கம்.

"அன்று வழக்கத்தைவிட அதிகமாகவே என்னைக் குறைவாகக் கூறிவிட்டார். எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அழுகையை அடக்க முடியாமல் உள்ளேபோய்விட்டேன். தாயார்தான் எனக்குத் தேறுதல் சொன்னாள். எனக்காகப் பரிந்துகொண்டு அப்பாவிடமும் கோபித்துக்கொண்டாள். அது முதற்கொண்டு எனக்குத் தந்தையிடமிருந்த பக்தியே போய்விட்டது. வரவர அவரிடம் குரோதம்தான் வளர்ந்துகொண்டு வந்தது."

"உங்கள் தந்தை எவ்வளவோ படித்திருந்தும், உங்களிடம் ஏன் இப்படி நடந்துகொண்டார்?"

"அதுதானே எனக்கு ஆரம்பத்தில் புரியவில்லை. அவரது போக்கின் அந்தரங்கத்தை அறியாதவரையில் எப்படி இருந்தேன் தெரியுமா? மனிதப் பண்பே என்னைவிட்டு மறைய ஆரம்பித்துவிட்டது. அன்றுமுதல் அவருடன் கூட உட்கார்ந்து சாப்பிடுவதில்லை. நேரில் நின்று பேசுவதும் கிடையாது. பகைமையை வளர்க்கும் பங்காளியைப் போலத்தான் அவரை வெறுத்தேன். இருந்தாலும் சாஸ்திர விற்பன்னர்களோடு சர்ச்சை செய்து புகழ் சம்பாதிப்பதிலும், அரச சபைகளுக்குப்போய் வாதங்கள் நிகழ்த்தி வெற்றியுடன் வெகுமதிகள் வாங்கி வருவதிலும் எனக்குள்ள உற்சாகமும் முயற்சியும் தளரவில்லை. எவ்வளவோ பண்டிதர்கள் என் மேதையை மெச்சிப் போற்றினார்கள். பல வேந்தர்களிடமிருந்தும் பரிசுகளைப் பெற்று வந்தேன். ஒன்றுக்காவது என் தந்தை என்னைப் பாராட்டவில்லை. தம்மையும் பெருமையால் மகிழ்ச்சியுற்றவராகக் காண்பித்துக் கொள்ளவில்லை"

"அதிசயமாக இருக்கிறதே; இப்படியும் ஒரு தகப்பனார் உண்டா?......!!"

"ஆமாம் ரஸிகா! அவர் ஒரு அதிசய புருஷர். அது மட்டுமல்ல, ஆதர்ச புருஷரும் கூட. எனது வளர்ச்சியைத் தம் கடமையாக எண்ணி, அந்தக் கடமையை நிறைவேற்றவே என்னிடம் கண்டிப்பாய் நடந்துகொண்டார். அவரது கண்டிப்பு, துடித்தெழும் இளங்காளையின் மூக்கணாங் கயிறோடு இறுகிக் கிடக்கும் கழுத்துத் தும்பாகத்தான் எனக்கு முதலில் பட்டது. எனது உள்ளத்தின் உத்வேகமும், அதிலெழும் துடிதுடிப்பும் அவரது விசித்திரப் போக்கிற்குக் கட்டுப்படவில்லை. வெறித்துத்தான் எழுந்தன. என் மனசு அவரை நிதானமின்றித்திட்டியது, சபிக்கவும் சபித்தது. அந்த இழி செயல் என் உள்ளுடலை, அதன் அணுவான உள்ளத்தை, அதினின்றும் விபுவான ஆத்மாவையும்கூட மாசுபடுத்தி விட்டது. ரஸிகா! மறக்கவே முடியவில்லை.

"அப்பொழுது ஒரு நாள். வெறிபிடித்தெழுந்த என் மிருகத்தனத்தை யழித்து என்னை

"லக்ஸ் டாய்லட் சோப்பின் புதிய பரிமளத்தை நான் மிகவும் விரும்புகிறேன்"
. . . என்று கூறுகிறார்
சௌந்தரியவதி லலிதா
LUX
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்
LTS. 197-23 TM.

மனிதனுக்கியது அந்த நாள். அன்று காலே பல இடங்களில் திக்விஜயம் செய்து கொண்டு வரும் மஹாபண்டிதரொருவர் இந்த ஊருக்கு வந்தார். அவர் பெரிய மதவாதி. சென்ற இடங்களிலெல்லாம் பிறமதவாதிகளேயும், வித்வான்களேயும் வாதத்தில் வென்று வெற்றி முழக்கத்தோடு வருபவர். அவர் பெயர் கண்டன தேவர். வாதத்தில் ஸிம்ஹம் போல் கர்ஜிப்பாராம். இந்த ஊரிலுள்ள பல பண்டிதர்கள் அவருடன் வாதாடி, தோற்றுத் திரும்பி விட்டார்கள்.

தாராபுரியின் கௌரவமே பறி போகிறதென்று ஜனங்கள் குறைபட்டுக் கொண்டார்கள். எனக்கு இருப்பே கொள்ளவில்லே. கடைசியில் என்னே இறுதிப் பணயமாக வைத்துப் பார்க்கத் துணிந்து விட்டார்கள். அவர்களுக்கிருந்த நப்பாசை வெற்றியையும் கொடுத்து விட்டது.'

''நீங்கள் அவரை வாதத்தில் ஜயித்து விட்டீர்களா............!''

''ஆம் ரஸிகா! அப்பொழுது அப்பா ஊரிலில்லே. அம்மாவிடம்தான் விடைபெற்றுக் கொண்டு போனேன்.

''கண்டன தேவர் தங்கியிருந்தது பெரிய மாளிகை. உள்ளே போனேன். பல பண்டிதர்களும் பிரமுகர்களும் சூழ உயர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார். என்னேப் பற்றி அவருக்கு முன்பே தெரிந்திருக்கும். இருந்தாலும், சிறியவனுடன் வாதம் புரிவதை இளப்பமாக எண்ணிக் கொண்டாரோ என்னவோ என்னே வரவேற்கவே இல்லே. என்னேத் தெரிந்தவராகவே காண்பித்துக் கொள்ளவில்லே, அதற்காக நான் பின் வாங்கவில்லே. அவரெதிரே போய் நின்றேன். சிறிது நேரம் திரும்பவே இல்லே. பிறகு அலட்சியமாக ''யாரப்பா, நீ? இது சமாராதனே இடமில்லே. சமாராதனேக்குப் பிறகு தக்ஷிணே கொடுக்கும் இடமும் இதுவல்ல'' என்று இறுமாந்து பேசினர்.

''தேவரீர்தான் அந்த இடத்தைப்பரிவாரத்துடன் பிடித்துக்கொண்டு விட்டீர்களே! அப்படித் திரியவேண்டிய அவசியம் எனக்கு இதுவரை ஏற்படவில்லே. ஸ்வாமி!'' என்றேன் சிரித்துக்கொண்டே. அவருக்கு ரோஷம் கிளம்பிவிட்டது.

''பின் எதற்காக இங்கு வந்தாய்? வேடிக்கை பார்க்கவா? கூத்துக் கச்சேரி நடக்கிற இடமென்ரு இதை நினேத்தாய்......'' என்று ஏளனமாகப் பேசினர்.

''அங்கேயாவது கொஞ்சம் கலே யழகைக் காண முடியும். இது இறுமாப்பை முடிவு கட்டும் ரணபூமி என்று தெரிந்துதான் வந்தேன்.'' என்றேன் நிதானமாக.

''அவ்வளவு அசட்டுத் துணிச்சலும் அகம்பாவமும் கொண்ட நீ யார்?'' என்ருர் ஆத்திரத்தோடு.

வீறுகொண்ட துடிப்பை என்னுல் அடக்கிக் கொள்ள முடியவில்லே.

''சோர்வைக் கொடுக்கும் மந்தமான இரவுகளில் மட்டும் மலர்ந்து இறுமாப்புடன் வளரும் ஆம்பல் போன்ற உமது திருமுகத்தைக் கூசவைக்க வந்த பாரவி—(பிரகாசிக்கும் சூரியன்) நான்.'' என்றேன் துணிச்சலுடன்.

பக்கத்திலிருந்தவர்கள் திகைத்துவிட்டார்கள். பலர் சிரித்தும் விட்டார்கள். கண்கள் சிவக்கக் கர்ஜித்துக்கொண்டே எழுந்தார் வாதத்திற்கு. கண்டன தேவரை அம்மாதிரி எதிர்த்துப் பேச அதுவரை யாரும் துணிந்ததில்லே. அந்தப் புதிய அனுபவம் அவரை ஆட்டி அதிரச் செய்துவிட்டது. அவர் என்னே முதலில் நான்கு கேள்விகள் கேட்டு அதற்கு நான் தக்கபடி பதில் கூறவேண்டும்: பிறகு நான் கேட்டு அவர் பதிலுரைக்க வேண்டுமென முடிவு கட்டப்பட்டது.

''அவர் கேட்டுக்கொண்டே வந்தார். ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டே வந்தேன். என் பதில்களில் பலவித தோஷங்களேப் புகுத்திக் கண்டித்தார். யுக்தி வாதங்களால் அவைகளே எழுப்பவே வழியில்லேயென்பதை நிலே நிறுத்தினேன். சபையில் ஒரே ஆரவாரம். பாதி வெற்றியை யடைந்து விட்டதற்குப் பலர் என்னே வாழ்த்தினர்கள்.

பிறகு நான் அவரைக் கேட்கும் முறை வந்தது. அவர் என் மூன்று கேள்விகளுக்கும் பதிலுரைத்துவிட்டார். நானும் எவ்வளவோ விதங்களாக அவரை மடக்கி ஆக்ஷேபனேகளே அடக்கினேன். எல்லாவற்றையும் அநாயாஸமாகப் பரிஹரித்துவிட்டார். அவரது மேதையின் அதிசய சக்தியை அப்போது தான் தெரிந்துகொண்டேன். எவ்வளவு கிரந்தங்கள் அவரது நினேவுத் திரையில்வந்து நின்றன! கடைசியாக நான்காவது கேள்வியையும் கேட்டுவிட்டேன். அதுமட்டும் மிகச் சிக்கலான விஷயம். நான் பல ஆண்டுகள் சிரமப்பட்டு ஆராய்ந்து கண்டுபிடித்த வேதாந்த தத்வம் அது. அந்தக் கேள்வி அவரை ஒரு கணம் திகைக்கச் செய்துவிட்டது. சமாளித்துக்கொண்டு பதில் சொல்ல முயன்ருர். நிரம்ப நேரம் வாதாடினேம். அவரால் சரியானபடி சமாதானம் சொல்ல முடியவில்லே. கடைசியாகத் தம் தோல்வி



யை ஒப்புக்கொண்டார். விடையை நானே விளக்கினேன். அப்போது பார்க்கவேண்டுமே அந்தச் சபையை! ஒரே ஜய கோஷம்.

எனக்கு மலர் மாலைகள் வந்து குவிந்தன. கண்டன தேவர் என்னை அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டார். அவரது போன்ற உதார உள்ளம் யாருக்கும் அமையாது. பொன்னும், பணமும், பட்டுக்களும் ஏராளமாகக் கொடுத்து, என்னை யானைமீதேற்றி மங்கள வாத்தியங்களுடன் வீட்டுற்கு அனுப்பிவைத்தார். அந்தக் கோலத்தில் என்னைக் கண்டதும் அம்மா பிரமித்துப் போய் விட்டாள். அன்று மாலை தான் அப்பா வெளியூரிலிருந்து திரும்பி வந்தார். நடுவழியிலேயே பலர் இந்த மகிழ்ச்சிச் செய்தியைத் தெரிவித்துவிட்டார்கள். வீட்டிற்குள் ஒன்றும் அறியாதவர் போல் வந்தார். எனக்கு அவரிடம் சொல்ல வேண்டுமென்றிருந்தது. வெட்கமும் பயமும் என்னைப் பேச விட வில்லை. என் அம்மாவிற்கு இந்தப் பெருமையை அவருடன் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. என்ன பதில் சொல்கிறாரென்பதை அறிந்து கொள்ள நானும் அங்கேயே நின்று கொண்டிருந்தேன்."

"அப்பொழுதும் அவர் உங்களைக் கொண்டாட வில்லையா?"

"துளிக் கூட மகிழ்ச்சிக் குறியைக் காண்பித்துக் கொள்ள வில்லை. இம்முறையும் வழக்கப்படியே நடந்து கொள்வாரென்று கூட நான் எதிர்பார்க்க வில்லை மேலும் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வந்த சில பெரியவர்களையும் வைத்துக் கொண்டு என்னை மிகவும் இளக்கரமாகப் பேசி விட்டார். என்ன சொன்னார் தெரியுமா? 'டேய் மடையா! அல்பகுணன உனக்கு அகம்பாவம்தான் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய மஹானிடமும் போய் உன் வறட்டு வாயாடித் தனத்தைக் காண்பித்து விட்டாயா? வீண் இறுமாப்பின் உருவான உன்னால் நம் குல கௌரவமே பாழாகிறது. ஓடிப்போய் அந்த மஹானின் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டுவா.......போ!' என்று இரைந்து கொண்டே இருந்தார். அந்தப் பேச்சைத் தாக்கிக் கொண்டு என்னால் அங்கே நிற்க முடியவில்லை. கொல்லைப் புறமாக வெளியே போய் விட்டேன். அப்போது என் உள்ளம் பட்ட பாடு.........! மனோவேதனையின் முழு உருவத்தையும் அப்பொழுதுதான் கண்டேன். ஆத்திரத்தின் எல்லை மீறிய நிலையையும் அப்போது தான் அனுபவித்தேன். என்னால் என் பிதாவை மன்னிக்கவே முடியவில்லை. நான் படித்த தர்மசாஸ்திரங்கள் நீதிசாஸ்திரங்கள் முதலியவைகளில் ஒன்றும் அப்போது எனக்கு உதவிக்கு வரவில்லை. இரண்டே எண்ணங்கள் தாம் உதித்தன. ஒன்று தற்கொலை செய்து கொள்வது; இல்லாவிட்டால் என் தகப்பனரைக் கொலை செய்து விடுவது. இந்த இரண்டு காரியங்களைத் தவிர்த்து வேறு ஒன்றும் தோன்றவில்லை. இன்னும் பல அரச சபைகளில் வெகுமதிகள் பெற்று, பல நூல்களையும் இயற்றி, பெரும் புகழையடைய வேண்டுமென்கிற வெகு நாளைய ஆர்வம் தற்கொலை செய்துகொள்ளுவதைத் தடுத்துவிட்டது. பெற்ற தகப்பனாரோடு ஆசாரியராகவு மிருக்கிற அவரைக் கொல்லவும் துணிவு வரவில்லை. நிலைகொள்ளாமல் வெகு நேரம் தவித்தேன். கடைசியாக என் சுயநலம்தான் வெற்றி பெற்றது."

"தகப்பனாரைக் கொன்றுவிடவா முடிவு கட்டினீர்கள்?......!!"

"ஆமாம், ரஸிகா! 'தற்கொலை செய்து கொண்டாலும், தகப்பனாரைக் கொன்றாலும் நமக்கு நரகம் நிச்சயம். நாம் உயிரோடிருந்தால் வெகு நாளைய அபிலாஷைகளையாவது நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்று எண்ணினேன். என் பிதாவைக் கொன்று விடுவதென்றே முடிவு கட்டிக்கொண்டேன்.

"வீடு திரும்பும்போது நடுநிசி. உள்ளப் போராட்டத்தில் சிக்கிக் கிடந்த எனக்கு அப்பொழுதுதான் வீட்டை விட்டு வெகுதூரம் வந்துவிட்டது தெரிந்தது. கொல்லைக் கதவு திறந்தே கிடந்தது. மெள்ள உள்ளே நுழைந்தேன். கூடத்தின் மூலையில் பழைய அம்மிக்கல் கிடந்தது. என் பழியைத் தீர்த்துக் கொள்ள அதையே சாதனமாக எடுத்துக் கொண்டேன். அதைத் தூக்கிக்கொண்டு அப்பா படுத்திருக்கும் உள்ளின் பக்கம் போனேன், ஒரே யடியாக அவர் தலையில் போட்டு கொன்றுவிடுவதென்று. உட்பக்கம் தாழ்ப்பாள் போட முடியாத அந்த அறைக் கதவுகள் ஒருக்களிக்கப்பட்டிருந்தன. உள்ளே நுழைய ஆரம்பிக்கையில் அம்மாவும் அப்பாவும் பேசிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது.

'உங்களுக்கு இவ்வளவு வயசாகியும் பிள்ளையிடம் நடந்துகொள்ளத் தெரியவில்லை. பாரவி இன்று எவ்வளவு சிறப்பாக வந்தான்! அதைப் பார்த்துப் பெருமைப்படக் கொடுத்து வைக்காவிட்டாலும், அவன் மனசு நோகத் திட்டி அனுப்பிவிட்டீர்களே. என்ன அநியாயம்! குழந்தை எங்கே போனானோ, எங்கே சாப்பிட்டானோ. இம்மாதிரி அப்பாவிடம் இடிபட்டு மானங்கெட்டு வாழ்கிறதைக் காட்டிலும் பிராணனை விடுவதே

மேல் என்று தோணி யிருக்கும்.' என்று துக்கமும் ஆத்திரமுமாக என் தாயார் சொன்னுள்.

என் அப்பா பேசினுர்—'சுசீலா! பிள்ளை யென்கிற பாசம் உனக்கு மட்டும்தான் இருக்கிறதாக நினைக்கிருய். பிள்ளையின் உடம்பு வளர்ந்து, நோய் நொடி இல்லாமல் திடமாய் இருக்கவேண்டுமென்ற ஆசையோடு திருப்தியடைந்து விடுகிறது தாயின் பாசம். தகப்பன் அப்படி இருக்கமாட்டான். சீலம் நிறைந்து, அறிவு வளர்ந்து அதனுல் ஏற்படும் அழியாத—அழிக்கவும் முடியாத புகழுடம்பைப் பிள்ளையிடம் சாசுவதமாக எதிர்பார்க்கிருன் தகப்பன். இப்பொழுது புரிந்ததா?

'அப்படியெல்லாம் ஆசைப்படுகிறவர் பிள்ளை புகழைத் தேடிக் கொண்டுவரும் போதெல்லாம் உதாசீனப் படுத்தி அவன் உற்சாகத்தைக் குலைக்கிறது ரொம்ப நியாயமாக்கும்' என்று அம்மா கேட்டாள்.

'பாரவியின் சுபாவம் உனக்குத் தெரியாது. அவன் உற்சாகத்தைக் குலைக்க யாராலும் முடியாது. பெருமையடைய வேண்டும், தன் புகழ் பரவ வேண்டுமென்கிற ஆர்வம் அவனுக்கு எவ்வளவு இருக்கிறது தெரியுமா? அந்த ஆர்வத்தோடு கர்வமும் முளைத்து விடுகிறது. வரவர அது ஆர்வத்தையே அழித்து அந்த இடத்தையும் தானே ஆக்ரமித்துக் கொண்டு விடுகிறது. நான் மட்டும் பாரவியிடம் இவ்வளவு கண்டிப்பாய் நடந்து கொள்ளாவிட்டால் கர்வம் அவனது வித்யையை இதற்குள் இருந்த இடம் தெரியாமல் அழித்து விட்டிருக்கும்............' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

''அதற்காக அவன் மனசைப் புண்படுத்தி, உங்களிடமும் வெறுப்புண்டாகும்படியாக நடந்து கொள்ள வேண்டுமா?'' என்று அம்மா குறுக்கே கேட்டாள்.

''அவன் என்னை ஜன்ம விரோதியாகக் கருதுகிருனென்பதும் எனக்குத் தெரியும். அதற்காக நான் கடமையை விட்டு விட முடியுமா? வருங்காலத்தில் உயர்ந்த பதவியை அடையச் செய்ய, சிறு வயசிலிருந்தே கண்டிப்பும் கட்டுப்பாடுமாக வளர்த்து வரும் தகப்பனை, அப்போது அந்தப் பிள்ளை வெறுப்பது போலத்தான் பாரவியும் என்னை வெறுக்கிருன். ஆனுல் பிள்ளைகளைத் தான்தோன்றிகளாக அலைய விட்டு, அவர்களது வருங்காலத்தையே படுமோசமாக்கி விடும் தீர்க்க தர்சனமில்லாத மூடத் தகப்பனைப்போல நான் நடந்து கொள்ளவில்லை. பாரவியின் உள்ளம் குளிர நடந்துகொள்வதை விட நீண்ட நன்மையை அவன் பெற, கண்டிப்பாய் இருப்பதையே அதிகமாக விரும்புகிறேன். படித்த அவன் என் நடத்தையின் அந்தரங்கத்தை அறிந்து கொள்ளட்டுமென்றுதான் பல நீதிகளை இந்த வீட்டுச் சுவர்களில் எழுதி வைத்திருக்கிறேன். அவைகளின் பொருளைப் புரிந்து கொண்டு கர்வத்தை யொழித்து விட்டானுனுல் அவன் அமரகவியாகி விடுவான். ஏதோ என் கடமையைச் செய்து விட்டால், பிறகு அவனது விதிப்படி............

''அதற்கு மேல் அம்மா பேசவில்லை. இருவரும் தூங்க ஆரம்பித்து விட்டார்கள்.''

''பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?''

''அந்தக் கல்லை என் தலையிலேயே போட்டுக் கொண்டு பிராணனை விடலாமென்று தோன்றியது. என் நிலை எனக்கே பரிதாபகரமாக இருந்தது. உள்ளே ஓடிப் போய் பிதாவின் பாதங்களில் விழுந்து கதற வேண்டுமென்றிருந்தது. வெட்கமும் அவமானமும் என்னைக் குற்றுயிராக்கி விட்டன. சுவரை நிமிர்ந்து பார்த்தேன். அவர் எழுதி வைத்த இந்த உபதேச மொழி நன்றுகத் தெரிந்தது. அது என்னைப் பார்த்து ஏளனம் செய்தது, கோபித்தது, சபித்தது, எல்லாம் செய்தது. உணர்ச்சிகளின் மாறுட்டப்படியே எனக்குத் தோற்றமளித்தது.

'ஹிதம் மநோஹாரி ச துர்லபம் வச:'—(நன்மையானதும் மனசிற்குப் பிடித்ததுமான பேச்சு மிகவும் அரிது.) என்ற இந்த நீதிமொழி.

''மறுநாள் காலையில் அப்பாவே என்னிடம் வந்து 'ராத்திரி முழுவதும் சாப்பிடாமல் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாயா?' என்று பரிவோடு விசாரித்தார். உடனே அவர் பாதங்களில் விழுந்து புலம்பினேன். நான் கூறியதையெல்லாம் கேட்ட பிறகு அவரது முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி பிரகாசித்தது. தம் கடமையை நிறைவேற்றிவிட்டோம் என்கிற திருப்தி அவருக்குப் பூரணமாக ஏற்பட்டுவிட்டது. 'முன்னறி தெய்வமான உங்களைக் கொல்ல முயன்றதற்காக எனக்குத் தண்டனை கொடுக்கத்தான் வேண்டும்' என்று கெஞ்சினேன்.

'படித்த நீ, தான் செய்த குற்றத்திற்காக வருந்தி, பச்சாத்தாபப் படுகிருயே, அதுவே உனக்குப் போதிய தண்டனை. அந்த வேதனைத் தீ உன் உள்ளத்தைப் புடபாகம் செய்திருக்கும். நீ பரிசுத்தன். கர்வம் முதலிய நோய்கள் இனிமேல் உன்னிடம் அடிவைக்க முடியாது. உன் நிலை மேலும் மேலும் உயர்ந்து, உன் புகழ் உலகத்தில் பரவி நிலைத்திருக்கப் போகிறது. சர்வ மங்களமும் பெற்று, சிரஞ்சீவியாய் வாழ்வாய்!'' என்று ஆசீர்வதித்தார்.

"அதிலிருந்து இந்த நீதி மொழிகளையே தந்தையாகவும், குல தெய்வமாகவும் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

"இப்பொழுது புரிந்ததா. ரஸிகா?" என்று கூறி முடித்தார் பாரவி.

ரஸிகா பதில் சொல்லவில்லை. அவளது கண்கள் சுவரை விட்டு அசையவில்லை. உள்ளமும் அந்த மொழிகளிலேயே லயித்து விட்டது.

* * *

"என்ன ரஸிகா பேசாமலே இருக்கிறாய்?"

"......ஒன்றுமில்லை......இந்தக் குல தெய்வங்களை உபாஸித்து, பெரும்புகழுடன் வளர பிறக்கப் போகிறது ஆண் குழந்தையாக இருக்கவேண்டுமென்று......"

"ரஸிகா......! இவ்வளவு நாட்களாக என்னிடம் சொல்லாமலிருக்க எப்படி உன்னால் முடிந்தது! கல் நெஞ்சுக்காரி நீ!"

"ஆமாம். கண்ணுக்கு எட்டாதது, கருத்துக்குப் படாதது, உலகத்தைவிட்டு மறைந்தது, உலகத்திலேயே இல்லாதது இவைகளையெல்லாம் கண்டுபிடிக்கவும், கற்பனை பண்ணவும்தான் உங்களுக்குத் தெரியும். தம் வீட்டைப்பற்றியும், வீட்டிலிருக்கிறவளைப் பற்றியும் உங்களுக்கு நினைவேது, கவலையேது................"

"என்ன துணிச்சல்.............! ரஸிகா! நீ ரொம்ப ரொம்பப் பொல்லாதவள். இங்கே வாயேன்................"

"போதும் போதும், இதுவரையில் சொல்லாமலிருந்ததற்காக நீங்கள் எனக்குத் தண்டனையும் கொடுக்கவேண்டாம், இப்போது சொன்னதற்காக அன்பளிப்பும் வேண்டாம்"

ரஸிகா உள்ளே போய்விட்டாள்.

கண்களைவிட்டு மறையும்வரை அவளையே பார்த்துக்கொண்டிருந்தார் பாரவி திரும்பியதும் சுவரிலிருக்கும் மொழிகள் பளிச்சென்று பிரகாசித்தன. தெய்வ சந்நிதியில் அர்ச்சா மூர்த்தியை மெய்மறந்து தர்சிக்கும் பரம பக்தனைப்போல அவைகளோடு இணைந்துவிட்டார். அவரையறியாமலே கைகள் குவிந்தன. கண்களிலும் நீர் துளித்தது. அது.................ஆனந்தக் கண்ணீராக இருக்கலாம்.

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	,,	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி



தி இந்தியன் பாங்க் லிட்.

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

கதை, இது வரை:

தேஹஸ்தல மண்டலாதிபதி தேவப்ரஸாத் தன் மகன் திரிபுவனுடன் பட்டண் வருகிறான். பிறகு தனித்துச் சென்று ராஜ வைத்யர் லீலாதரருடைய மருமகன் வாசஸ்பதி உதவி கொண்டு சாக இருக்கும் அரசன் தன் சிற்றப்பன் கர்ணதேவனைப் பார்க்கிறான். அவன் மூலம் 'வெகுநாளாய் இறந்துவிட்டாள்' என்று கருதப்படும் தன் மனைவி ஹம்ஸா உயிருடன் இருப்பதை அறிந்து எங்கே என்று அறியாமல் சூழ்ச்சிக்காரியான சிற்றன்னை அரசி மீனல் தேவியைக் கேட்கிறான். அவள் மழுப்பிவிட, அவன் இருப்பிடம் திரும்புகிறான்.

சந்திராவதி நகரிலிருந்து பட்டண் அரசியலில் மதப்பற்றை எழுப்பிக் குட்டை குழப்பவந்த ஜைனயதி ஆனந்த சூரி தேவப்ரஸாதைச் சந்தித்து அவ வாக்குச் சொல்கிறார். பிறகு சர்வ வல்லமை பொருந்திய மந்திரி முஞ்ஜாலைச் சந்தித்து அவரிடம் 'பாச்சா' பலிக்காது என்று கண்டு அரசியைச் சந்தித்து அதிகாரப் பித்துக் கொண்ட அவளைத் தன் வலையில் சிக்க வைக்கிறார்.

திரிபுவன் தன் காதலியான (மீனல் தேவியின் மருமகள்) பிரஸன்ன குமாரியைப் பார்க்கச் சென்று அங்கே கிழப் பாடகன்மூலம் அவள் மாளவ அ சியாவாள் என்று அறிந்து ஆத்திரம் கொண்டு வீடு திரும்புகிறான். அங்கே தந்தையின் துயரை அறிந்து மாமாவைச் சந்தித்தால் தாயைப் பற்றிய தகவல் அறியலாம் என்று முஞ்ஜாலைச் சந்திக்கச் செல்கிறான். காரியம் கைகூடாமல் போகிறது.

கர்ணதேவன் இறந்து விடுகிறான். வழக்கப்படி சாதாரண முறையில் ஜயதேவன் பட்டம் பெறுகிறான். அந்தச் சமயம் முஞ்ஜால் மதுபுரிக்கு மாற்றப்படும் தகவல் அறிவிக்கப் படுகிறது. சாந்தி சந்திரன் கோட்டை யதிகாரியாகவும் முக்கிய தளபதியாகவும் ஆகிறான்.

திரைக்குப்பின் இயங்கி, கயிறிழுக்கும் சக்தியை அறிந்த முஞ்ஜால் வெற்றியூடே தோல்வியுணர்ச்சி கொண்டு பொங்கும் அரசியையும் திரிபுவனையும் எச்சரித்து விட்டு மதுபுரி செல்லக் கிளம்பிவிடுகிறான். திரிபுவன் மூலம் பட்டண் கோட்டை பகல் பதினைந்து நாழிகைக்கு மூடப்படும் என்று அறிந்த தேவப்ரஸாதும் வர இருவரும் குறுகிய வாயிற் சந்தில் சந்திக்கின்றனர். யார் முதலில் வெளியேறுவது? என்ற கேள்வி எழ, இருவரும் வாள் உருவுகின்றனர். திரிபுவன் அவர்கள் உறவை ஞாபகப் படுத்த இருவரும் மனம் கரைந்து தனித்துச் சந்திக்கின்றனர். முஞ்ஜாலிடம் ஹம்ஸாவின் இருப்பிடத்தை அறிந்த தேவப்ரஸாத், "நாளை உன்னைச் சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அரண்மனை செல்லுகிறான். தேடிச் சென்ற அறையில் ஹம்ஸாவைக் காணாமல் பதறிக் கூவ, அங்கே அரசி வந்து, "மண்டலத்தையும் சேனை

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த க. ஸ்ரீ நாதுராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

யையும் தந்து நீயும் இங்கேயே காவலில் இருந்தால் ஹம்ஸா கிடைப்பாள்' என்கிறாள். இதைக் கேட்டுச் சீறி எழுந்த தேவப்ரஸாத் பறந்து சென்று அகழைத் தாண்டி, கதவை சாத்துமுன் கோட்டையை விட்டு வெளியேறுகிறான்.

பின் தங்கிய திரிபுவன் ராணியிடம் வெளியேறித் தந்தையிடம் பேச அனுமதி பெற முயலுகிறான். ஆனந்தசூரி, ''காத்து இரு'' என்று சொல்லிவிட்டுப் போக, அங்கே வீரர் புடைசூழ வந்த குமாரன் ஜயதேவனை, ''சித்தப்பா'' என்று அழைத்துத் தன்வேண்டுகோளைச் சொல்லுகிறான். பக்குவம் அடையாத மனதை உடைய ஜயதேவன் படபடப்புக் காட்டி அவனைப் பிடிக்கும்படி உத்தரவு கொடுக்க, வீரனை திரிபுவன் வார்த்தை பொறாமல் வாளை எடுக்கிறான். ஜயதேவனும் வாளை எடுத்துப் பாய எங்கிருந்தோ சீறி வந்த ஒரு அம்பு அவன் கையைக் காயப் படுத்துகிறது. பயந்த வீரர்கள் சிறுவன்மேல் பாய, திரிபுவன் அபிமன்யுபோல் சண்டை துவக்குகிறான்.

அதே சமயம்,—

முஞ்ஜாலையும் தேவப்ரஸாதையும் சேராமல் தடுக்க என்ன செய்யலாம் என்று நடுங்கிய ராணி மீனல்தேவி ஹம்ஸாவை உபயோகிக்கத் தீர்மானித்து அவளிடம் நைச்சியம் செய்கிறாள். அவள் தீர்மானமாக மறுத்துவிடுகிறாள். கீழே கேட்ட ஆரவாரத்தை அறிய ராணி குனிந்து பார்க்கும் தறுவாயில் திரிபுவன் தாக்கப் பட்டுக் கொண்டிருக்கிறான். சூழ்ச்சிக்காரி திடீர் என்று ஒரு யோசனை செய்து ஹம்ஸாவை அழைத்துக் காட்டி, மகன் அடையாளம் சொல்லி, ''மகன் தப்பவேண்டும் என்றால் கொடு சத்தியம் செய்து. சென்று தேவப்ரஸாதை இங்கே படை எடுத்து வராமல் தடுப்பேன் என்று சொல். இல்லையானால் அதோ வீழ்ந்துவிடும் திரிபுவன் தலை!'' என்கிறாள்.

மார்பில் கை வைத்து ஹம்ஸா அலறுகிறாள்.

இனி மேலே

'அதோ— ஹம்ஸா, தொலைந்தான் உன் திரிபுவன்! கொஞ்ச நிமிஷங்கள் தான். பூமி தேவி அவனை அணைத்து கொள்வாள். அதோ, பார். மற்றும் வீரர்கள் வந்து சேர்ந்தனர். ஒப்புக்கொண்டுவிடு. சத்தியம் செய்து கொடுத்து விடு''

ஹம்ஸா வெறிகொண்டு விழித்தாள். கண்கள் குபு குபு என்று நீர் கக்கின. விம்மி எழும் மார்பைப் பலம் கொண்ட மட்டும் அமுக்குகிறாள். நீரில் நுழைந்து மல்கி வரும் திரிபுவன் உருவத்தை நன்றாய்ப் பார்த்தாள். அவன் தெய்வீக முக கமல வீரத்தின் பொன்னொளி பரவுவதைப் பார்த்தாள். சிங்கம்போல வீரர்கள் மேல் எகிறிப் பாயும் தன் மைந்தனைப் பார்த்தாள். வீரர்களும் வேறு வழியின்றி ஆயுதம் தாங்குவதையும் பார்த்தாள்.

''சொல் ஹம்ஸா! இதோ இன்னும் ஓரிரு க்ஷணங்கள் கூட அவன் பிழைத்திருப்பது அரிது.''

''அரக்கி! சண்டாளி! எடுத்துக் கொள். என் உயிரையே வாங்கிக் கொள். என் குழந்தையைக் காப்பாற்று. என் வம்சத்தையே நாசமாக்க எண்ணிய பேயே, உன் இஷ்டப்படியே செய்!''

''என்ன சத்தியம் செய்கிறாயா? உன் கணவன் மேல் ஆணையிடு.''

ஹம்ஸா கத்தினாள்: ''ஆம் அப்படியே தான்........... ஐயையோ. அதோ பார். காப்பாற்றடி என் குழந்தையை. மகாராணி! காப்பாற்றுங்களேன் என் குலக் கொழுந்தை!''

ராணிக்குச் சத்தியம் கிடைத்து விட்டது. முன்னறைக்கு ஓடினாள். திறந்த கதவுகள் வழியே கீழே குனிந்து கூப்பிட்டாள்: ''கலியாண்! கலியாண்! நிறுத்து. நில். தடு.'' மீனல் தேவியின் குரல் பரவி எதிரொலித்தது. கீழேயுள்ள களேபரத்திலும் அவள் குரல் கிழித்துச் சென்றது. ராணியைப் பார்த்த அவர்கள் அப்படியே நின்று விட்டார்கள். திரிபுவனுக்குக் காயம் பட்டு விட்டது. அவன் சக்தியும் குறைந்து விட்டது. கண்களுக்கெதிரே இருட்டுத் தோன்ற ஆரம்பித்து விட்டது. கேவலம், வீராவேசத்தினால் அவன் தன்னை மறந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் எல்லோரும் நின்று விட்டனர்; உயரப் பார்த்தனர். அவனும் வாள் வீச்சை நிறுத்திச் சற்று நின்றான்.

அவன் கண்ணெதிரே படுதா படர்வதை உணர்ந்தான். திடீரென்று ஒரு ஸ்திரீ தோன்றினாள். அவனுக்கு அடையாளம் புரிந்தது. 'மீனல் சின்னம்மா!' அவன் கூப்பிட வாய் எடுத்தான். தொண்டை உலர்ந்து விட்டது.

பின்னுல் மற்ருெரு ஸ்திரீ வந்தாள். திரிபுவன் அவளை எங்கும் பார்த்ததில்லை. இருந்தாலும் அவள் பழக்கமானவள் போல் காணப்பட்டாள். அவள் இவ்வளவு ஏன் ஒட்டி உலர்ந்திருக்கிருள்? அவள் என்ன உயிருடன் தான் இருக்கிருளா அல்லது உயிரிழந்து நிற்கிருளா? அவன் இதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தான். ஆனுல், அதற்கு முன்னமேயே பூமி அவனுக்கு முன் சுற்ற ஆரம்பித்துவிட்டது. அந்த ஸ்திரீ திரிபுவனை நெருங்கி வந்தாள். திரிபுவனை வாரி எடுத்து அணைத்துக்கொண்டாள்.

திரிபுவனின் உயிரோட்டம் குறைய ஆரம்பித்தது. உடல் கணுக்கணுவாக உடைய ஆரம்பித்தது. அந்த ஸ்திரீ யார்? அவள் அணைப்பில் கொஞ்சம் அமைதி கிட்டுகிறதே! இந்தப் புதுப் பெண்மணி அவனை முத்தமிட்டுக் கொண்டாள்; முகத்தில் படர்ந்த மயிரை விலக்கிவிட்டாள்.

திரிபுவன் உதடுகளில் சிரிப்பு ஏறி நின்றது. 'சண்டை பாக்கி யிருக்கிறதே! இது என்ன கொஞ்சல்!' இவ்வளவில் ஒரு பெண்ணும் வந்து சேர்ந்தாள். அது யார்? அவனுக்குத் தெரியும். எங்கோ பார்த்திருக்கிருன். மற்ருெரு ஸ்திரீயின் பக்கம் திரும்பினுன். அவள் அவன் கையைத் தன் தோளில் தாங்கி நடத்திச் சென்றுகொண்டிருந்தாள். ஸோலங்கி வீரன் திரிபுவன் பாலனுக்குப் பெண்கள் உதவி செய்ய நேர்ந்துவிட்டதா! திரிபுவன் சிரித்துக்கொண்டான். ஓ ஓ! இது ஏன் எல்லாரும் சுற்றுகிருர்கள்? ஏன் இருட்டி வருகிறது? இந்த ஸ்திரீ 'என் குழந்தை!' என்கிருளே!

திரிபுவன் மறுபடி சிரித்தான். என் தாய் தான் இறந்துவிட்டாளே! முஞ்ஜால் மாமா தான் கொன்றுவிட்டாரே! 'நீயார்?" அவன் கேட்க முயன்ருன்.

"நான்.........ஹம்ஸா......" இப்படி ஏதோ காதில் விழுந்தது. திரிபுவன் மனதில் இருட்டு அதிகமதிகம் படர்ந்து வந்தது. இவ்வளவு இருட்டு ஏன்? அவன் புது ஸ்திரீ தோள்களில் கையை ஊன்றினுன். பூமி நழுவுவது போலத் தோன்றிற்று. நழுவியே விட்டது உலகமே எங்கோ போய்விட்டது.

* * *

திரிபுவன் கண் திறந்து பார்த்தபோது அவன் ஓர் அறையில் ஓர் படுக்கையில் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் துயருறும் இதயத்தில் கையை வைத்து அந்தப் புதிய, ஆனுல் மிகவும் பழகியவள் போல் காணப்பட்ட ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள். திரிபுவன் இவளை எந்தக் கனவில் பார்த்திருக்கிருன்? மெதுவாகத் திரிபுவன் 'அம்மா' என்று கூப்பிட்டதைக் கேட்ட அந்த ஸ்திரீ ஓர் துடிப்புண்டாள். திரிபுவனைப் பார்த்த அவள் கண்களில் விடாமல் ஓடும் கண்ணீர் பொங்கிப் புரண்டு வந்தது. அவள் திரிபுவனை இறுக அணைத்துக்கொண்டாள். அவன் மறுபடி மயக்கமடைந்தான்.

பின்னுல் மீனல் தேவி வந்து நின்று கொண்டாள். மாற்றமடையாத குரலில் 'ஹம்ஸா. நீ இவ்விதம் செய்து கொண்டிருக்க முடியாது. நேரம் ஆகி விட்டது. இப்பொழுது நீ போய் விட வேண்டியதுதான்."

ஹம்ஸா ஆழ்ந்த வருத்தத்துடன் சொன்ஞள்: "எல்லையற்ற சொத்துக் கதிபதி நீ; ஏழையின் பிச்சைக் காசையும் பிடுங்கிக் கொள்ளப் பார்க்கிருயே! இது நல்லதா?"

வஜ்ரம் போன்ற அமைதியுடன் மீனல் தேவி பார்த்துக் கொண்டிருந்தாள். அது எப்படி முடியும்? மண்டலேசுவரர் மேரளம் போய்ச் சேர்ந்திருப்பாரே! எவ்வளவு ஏற்பாடுகள் ஆக வேண்டும்? யதி ஆனந்த சூரியும் உன்னேடு வருவார். கிளம்பு. ஏற்பாடு செய்து கொள். புறப்படு."

"ராணி, ஒரு நிமிஷ நேரம். ஒரே நிமிஷம்." ஹம்ஸாவின் கெஞ்சும் பார்வைக் கெதிர் கல்லும் உருகிற்று.

"சரி, நான் பல்லக்குக்கு ஏற்பாடு செய்கிறேன். அதற்குள் தயாராகி விடு" என்று சொல்லிக் கொண்டே கடவுள் ஆணையின் அசைவில்லாப் போக்குடன் ராணி வெளியே நின்ருள்.

ஹம்ஸாவின் உள்ள நிலை கற்பனைக்குக் கூட எட்டாது போய் விட்டது. பதினைந்து வருஷங்கள் ஆகி விட்டன வாழ்க்கையின் ஒவ்வொரு ஊற்றும் வறண்டு விட்டது. கணவன் புத்திரனை விட்டுத் தனியே தங்கி, தன் பெரிய பெரிய மதிப்புயர்ந்த ஆசைகளுக்கெல்லாம் கண்ணீர் கொண்டு எள்ளும் தண்ணீரும் கொடுத்துவிட்டிருந்தாள். வெளியே தன்னிஷ்டப்படி சுற்றுகிறவர்கள், உற்ருர் உறவினர்களுடனிருப்பவர்கள் சிறையில் தனியாயிருப்பது எவ்வளவு பயங்கரமானது என்று சாதாரணமாக அறிய முடியாது. நாள் நாளை உருட்டிச் செல்லும். ஆனுல் அந்த தனி வாசம்; இதயத்தைப் பிளக்கும் தனிமை; மனதை வாட்டும் எண்ணங்களின் துணை; வெளியுலகு வேற்ருெரு கிரஹம் போன்று தூரம்; உலகின் அனுபவம் மற்ருெரு ஜன்ம அனுபவம் போன்று நெருங்கித் தொட முடியாதது இந்த வியோகத்தில் இந்தத் துக்கத்தில் ஹம்ஸாவின் வருஷங்கள் கழிந்திருந்தன. உள்ளத்தின் உணர்ச்சிக

டால்டாவில் தயாரித்தால் முதல் தரமாயிருக்கும்

சுத்தம் செய்த முழுக்கோழியின் வெளிப்புறத்தைக் கொத்தி புளிசேர்த்த இலவங்க மசாலாவை பூராவும் தேய்க்கவும். அரை வேகவைத்த அரிசி (முன்னமேயே வறுத்தது), பொரித்த ஈரல், இருதயம், மசாலா துவையல் இவைகளை கோழியினுட் திணிக்கவும். சமைக்கும் பாத்திரத்தின் அடிப்பாகத்தில் தாராளமாக டால்டாவை தடவி, வெங்காயத்தைப்பரப்பி கோழியை அதற்குமேல் வைக்கவும். சுற்றிவர இன்னும் வெங்காயம், இரண்டாக்கிய உருளைக்கிழங்கு இவைகளை அடுக்கி உப்பைதூவவும். மூடியை பிசைந்த கோதுமை மாவினால் பாத்திரத்துடன் ஒட்டவைத்து சிறு சூட்டில் சமைக்கவும்.

உங்கள் குடும்பத்தினரின் உடல் நலத்திற்கு ப்ரூட் ஸாலட் தேவை!

இலவசமான அலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1

HVM. 99-23 TM

ளைக் கொன்று ஆசைகளைக் கருக வைத்து விட்டாள்.

இந்த ஒரு கணத்தில் கணவனைக் காணும் விருப்பம், நம்பிக்கை எதிரே ஓடிவந்து நின்றது. உணர்விழந்த மனம் அதை வரவேற்க மறுத்தது. மறு கணம் "இறந்த" புத்திரனைப் பார்த்தாள். அவனைக் காப்பாற்றப் பதியை ஏற்க மறுத்த மனதுக்குப் புத்தி புகட்டினாள். ஹம்ஸாவின் யோசனை செய்யும் சக்தி வேலை செய்ய இயலாமல் நின்றது. கேவலம் உணர்ச்சியே அவளை இயக்க ஆரம்பித்தது. புத்திரனின் அழகையும் உருவத்தையும் ஒளியையும் சூரத் தனத்தையும் கண்டு இதயம் குளிர்ந்தாள். அவனை விடுவதும் உள்ளம் பிளப்பதாக இருந்தது, மீனல் தேவி உள்ளமற்றவள்; விதியின் கோடுகள் போல் அசைவற்று நின்றாள். ஹம்ஸாவோ பிறப்பு முதல் மிருது உள்ளம் படைத்து உணர்ச்சிப் பெருக்குக்கு வசப்பட்டுப் பிறரை மகிழ்விக்கப் பழகினவள். கடுங்காற்றில் கொடிபோல வளைந்து கொடுத்து, சகித்துக் கொள்ளும் தன்மையுடன் பிறந்தவள். இந்தச்சமயத்தில் அவளுக்கு ஒத்துப்போவது கஷ்டமாக இருந்தது. திரிபுவன் இதோ மயங்கிக் கிடக்கிறான். அவன் கோமள முகம் வாடிக் கிடக்கிறது. அவனை விட்டா போவது? அடிக்கடி அந்த



முகத்தில் தன் உதடுகள்மூலம் அன்பு ஜீவனியைச் செலுத்தினுள்.

பின்னுல் தோன்றிய ஓர் நிழல் அவளைத் திடுக்கிட வைத்தது. திரும்பிப் பார்த்தாள். பதினைந்து—பதினுறு வயதுள்ள ஒரு தேவ கன்னிகை நின்றிருந்தாள்.

"அம்மா, நீங்கள் திரிபுவன் பாலனின் தாயாரா? அம்மா!"

"ஆம், குழந்தாய். நீ?"

"சொல்லட்டுமா?

"நான், மீனல் தேவியின் சகோதரன் மகள்"

'அப்படியா' ஹம்ஸா சற்று நடுங்கினுள். திரிபுவன் பாலனைப் பார்த்தாள்.

"அம்மா, நீங்கள் சற்றுக்கூடக் கலங்க வேண்டாம். மீனல் தேவியைவிட நான் உண்மையிலேயே திரிபுவன் பாலனுக்கு வேண்டியவள்"

ஹம்ஸா தலைநிமிர்ந்து பார்த்தாள். பெண்ணின் முகம் நிர்மலமாக இருந்தது.

"உன் பெயர் என்ன, குழந்தாய்?"

"பிரஸன்னு!

"குழந்தாய், பிரஸன்னு! எனக்குத் தேவ சாபம் ஏற்பட்டிருக்கிறது நான் போகிறேன். இவனை இங்கே யார் பார்த்துக்கொள்வார்கள்?"

"நீங்கள் கொஞ்சம்கூட அதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். நான் இருக்கும் வரை திரிபுவன்பாலன் பேரில் ஒரு ஆபத்தும் கண் எடுத்துக்கூடப் பார்க்கமுடியாது"

ஹம்ஸாவின் கண்கள் மழைக்கால நதியாயின. "அப்படியானுல் நான் கவலையை விட்டு விடுகிறேன். தாயற்ற குழந்தை. இஷ்டங்களைப் பூர்த்திசெய், அம்மா!"

பிரஸன்னு புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்தாள். "தங்கள் ஆசிர்வாதம் வேண்டும் அம்மா!"

"குழந்தாய், பிரஸன்னு! எனக்கு எவ்வளவு துன்பமும் துயரும் கிடைத்ததோ, அவ்வளவு இன்பமும் சுகமும் உனக்குக் கிடைக்கட்டும்." ஹம்ஸா நெற்றியைப் பிடித்துச் சொடுக்கினுள். பிறகு திரிபுவன்பாலனை முத்தமிட்டாள்.

வெளியிலிருந்து, 'ஹம்ஸா கிளம்புகிருயா, இல்லையா?' என்ற அதிகாரக்குரல் மீனல் தேவியின் உத்தரவை ஏந்தி வந்து இறங்கிற்று.

"இதோ வருகிறேன்" ஹம்ஸா ஏமாற்றத்தின் உருவாகி மார்பை அமுக்கிக்கொண்டு வெளியேறினுள். அவள் செத்த இதயம் மீண்டொரு முறை உயிர்கொண்டு எழுந்து நரக வேதனையை அனுபவிக்க ஆரம்பித்திருந்தது.

பிரஸன்னுவுக்கு வந்த கஷ்டம்

மீனல்தேவி சொன்னுள்: 'ஹம்ஸா, யதி ஆனந்தசூரி உன்னுடன் பாதி தூரம் தான் வருவார். நீ உன் வார்த்தைகளைக் காப்பாற்றவேண்டும் தெரிந்ததா?'

"ராணி! ஹம்ஸா இதுவரை கொடுத்த வாக்கை மீறவில்லை. எதற்காகப் பயப்படுகிருய்? என் வம்சத்தை என் கையாலேயே நாசமடைவிக்கத்தான் பிறந்திருக்கிறேனே!" என்று சொல்லி ஹம்ஸா மேலேறினுள். ராசபுத்திரன் வேஷத்தில் யதியும் பின்னுல்செல்ல ஆரம்பித்தார்.

"யதி அவர்களே. சந்தியா கால வேளைக்குள் வந்து விடுங்கள். சாம்பனேரி வாயிலில் வெளியே இருங்கள். நானே அங்கே வந்து சந்திக்கிறேன். கவலையற்றிருங்கள். நான் வந்து விடுகிறேன்."

தோல்வியடைந்த சூதாட்டக்காரன் இரண்டு பங்கு ஆத்திரத்துடன் விளையாடுவான். ராணியும் அதே நிலைமையில் இருந்தாள். எப்படியாவது முஞ்ஜாலும் மண்டலேசுவரனும் சேரக் கூடாது.

ஒரு மணி நேரத்துக்கு அவள் மற்ற எல்லாவற்றையும் மறந்தாள் பிறகு திடீரென்று திரிபுவன் ஞாபகம் வரவே அவன் தூங்கும் அறைக்குச் செல்ல ஆரம்பித்தாள். உள்ளே சென்று பார்த்த அவள் மனது சிறகடித்தது. கட்டிலருகே தரையில் பிரஸன்னு உட்கார்ந்திருந்தாள். அவள் தூங்கும் திரிபுவனின் ஒரு கையைத் தன் கையில் தாங்கி மார்பில் வைத்துக் கொண்டிருந்தாள்.

"பிரஸன்னு? இது என்ன செய்கிருய்?"

பிரஸன்னு சற்று வெட்கி எழுந்து நின்று, "ஒன்றுமில்லையே" என்றுள்.

"ஓகோ. நீயும் கட்டு மீறுகிருயா? செல். தயார் செய்து கொள். ஒருகால் இன்றிரவு நீயும் பிரயாணம் செய்யவேண்டி வரலாம்!"

கொஞ்சம் பதறிப் பிரஸன்னு கேட்டாள்: "நானு? நான் எங்கே போகிறேன்!"

"நீ யார் அதைக் கேட்க? நான் சொல்வதைக் கேட்பது தான் உன் தர்மம்."

திரிபுவனைக் காட்டிப் பிரஸன்னா சொன்னாள்: "ஆனால் அத்தை. இவருடன் இருப்பது என் கடன் அல்லவா? இவர் தாயார் இவரை என்னிடம் ஒப்புவித்தல்லவா போயிருக்கிறார்கள்?"

மீனல் தேவி சுடுங்குரலில் சொன்னாள்: "அது நடவாது; உனக்கு வேறு வேலை இருக்கிறது. கொஞ்சம் நாள் முந்தி நான் உன்னிடம் என்ன சொன்னேன், நினைவிருக்கிறதா!"

பிரஸன்னா கொஞ்சம் தைரியம் காட்டித் தலையை நிமிர்த்தி.........

"அது எனக்குப் பிடித்தால் தானே? அவந்தியைக் கொண்டு அடுப்பில் போடு"

மீனல் புருவம்சுளித்துச்சொன்னாள்: "ஏது? நிலைமை மீறிப் பேச ஆரம்பித்து விட்டாய்!"

பிரஸன்னா துணிவு தவிர வேறு வழியில்லை என்று கண்டாள்.

"இல்லை. இவர் நலமடையும்வரை நான் இங்கேயேதான் இருக்கவேண்டும்"

உண்மை தலைகாட்ட ஆரம்பித்ததும் மீனல் கொஞ்சம் சந்தேகப்பட்டு "ஏன்? இவனுடன் உனக்கென்ன உறவு?" என்று கேட்டாள்.

பிரஸன்னா பயம்நீங்கிய குரலில்: "இவரா? இவர்தான் எனக்கு எல்லாம். என் தலைக்கு அணி இவரே!"

"அப்படியா? மால்வா பிடிக்கவில்லையோ, இப்படி இவனிடம் பித்துக்கொண்டு நிற்கிறாய்?"

"அத்தை வீணாக என் வாயைப் பிடுங்குகிறாய்? எனக்கு மால்வா வேண்டாம்."

"அப்படியானால் என் ஏற்பாடுகளை எல்லாம் மண்ணில் சிதறச் சூழ்ச்சி என்றர்த்தமா இதற்கு? சிறுமீ! உன்னை வழிக்குக் கொண்டுவர எனக்கு நொடி நேரம்கூட ஆகாது. தெரியுமா? ஸந்தியா காலம் ஆவதற்குள் தயாராகிவிடு. இல்லை என்றால் பலாத்காரத்தினால் காரியம் நிறைவேறி விடும். நீ இந்தக் காதால் கேட்டாலும் சரி, அந்தக் காதால் கேட்டும் சரி." என்று சொல்லிய மீனல் தேவியைக் கோபம் வெளியே இழுத்துச் சென்றுவிட்டது.

பிரஸன்னா மீனல் தேவியிடம் பயந்தவள். என்ன செய்வது என்று புரியவில்லை. இவரை இந்த நிலையில் விட்டு எப்படிப் போவது? ஆனால் மீனல் தேவியின் கட்டளை என்றால் அது சுக்ரீவன் ஆணைதான். எழுந்து பரபரப்புடன் சாமல் பாரஹட்டைப் போய்ப் பார்த்தாள். அவனிடம் அவள் எல்லாவற்றையும் சொன்னாள். அவனை, வந்து திரிபுவனிடம் உட்காரும்படி பிடிவாதம் செய்தாள். கிழவன் சரி என்று ஒப்புக்கொண்டான்.

"ஆனால்.........குழந்தாய்! கண்ணில்லாத நான் என்னசெய்வேன்? இன்னும் யாரையாவது துணைவை!"

"யாரைக் கூப்பிடப்போக? மாத்ராவின் கணவனைக் கூப்பிடட்டுமா?"

"யார், வாசஸ்பதியா? ஆம். அது சரியான யோசனைதான்; போ; என்னை அங்கேவிட்டு, பண்டித்ஜீ யிடமும் சொல்லிவா."

"பாரஹட்ஜீ! எனக்கு என்னவானாலும் சரி, பரவாயில்லை. அவருக்குத் தொண்டு புரிவதில் குறைவைக்கக்கூடாது" பிரஸன்னாவின் குரலில் நடுக்கம் துடித்தது.

"ஏன் அம்மா கலங்குகிறாய்? நாளையே திரிபுவன் நலம்பெற்று விடமாட்டானா? எனக்கும் வைத்தியம் தெரியும். லீலாதர வைத்யனுக்குப் புண் ஆற்ற வராது. அதோ பார். அந்தச் சாமானறையில் ஒரு டப்பா இருக்கிறது. எடுத்துவா பார்க்கலாம்."

பிரஸன்னா அதை எடுத்துக் கொடுத்தாள். வாங்கிக்கொண்டு கிழவன் கீழே இறங்கினான்.

பிரஸன்னா வாசஸ்பதியை அழைக்கச் சென்றாள். அங்கே வாசஸ்பதி உட்கார்ந்து ஏதோ ஸம்ஸ்கிருதப் புத்தகம் படித்துக்கொண்டிருந்தான். பிரஸன்னா அவனைக் கிளப்பி, திரிபுவனினருகிலிருந்து பார்த்துக் கொள்ளும் வேலையைச் சுமத்தினாள், வாசஸ்பதியும் மிகவும் சந்தோஷத்துடன் அந்த வேலையை ஏற்றுக் கொண்டான்.

மாலை ஆனதும் வேலைக்காரன் பிரஸன்னாவைப் போஜனத்துக் கழைக்க வந்தான். மீனல்தேவியின் அறையில் அவசர அவசரமாக மூன்றுபேருக்கு ஆகாரம் தயாராகியிருந்தது. ஜயதேவன் ஒரு தட்டிற்கெதிரே உட்கார்ந்திருந்தான்; வலது கையில் காயம் காரணமாக முகத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு இடது கையால் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ராணி இரண்டாவது தட்டில் சாப்பிடத் தயார்செய்துகொண்டே, கோபம் கொந்தளிக்கும் குரலில், மூன்றாவது தட்டைப் பிரஸன்னாவிடம் காட்டி, 'உட்கார்ந்து சாப்பிட்டு முடி!' என்றாள்.

பிரஸன்னா சிறிய விவகாரத்தில் மனதை முறிக்க விரும்பவில்லை. உட்கார்ந்து சாப்பிட ஏற்றுக்கொண்டாள். இவ்வளவு சீக்கிரம் சாப்பாடு எதற்காக? ஒன்றும் புரியாமல் அவள் கொஞ்சமே சாப்பிட்டாள். சாப்

பிட்டு எழுந்தவள் மீண்டுமொருமுறை திரிபுவனிடம் சென்று வந்தாள். அவள் ஒரு மாதிரி மயக்கம் ஏற்படுவதை உணர்ந்தாள். ஒரு படபடப்பும் ஏற்பட்டது. களைப்பினால் தூக்கம் வருகிறதோ என்று எண்ணினாள். ஊஞ்சலில் அமர்ந்தவள் அப்படியே அயர்ந்து விட்டாள். அரைத் தூக்க நிலையில் எனக்கு என்ன போதை ஏற்படுகிறதா? என்று எண்ணினாள். அதற்குப் பதில் யோசிக்கு முன்னமேயே அவள் கண்கள் மூடின. மயக்கம் அவளை ஏந்திக் கொண்டது.

அரசன் இல்லத்தில் அந்த இரவு

இரவு வந்தது. அரசன் இல்லத்தில் அமைதி குடி கொண்டது. வெளியே நகரத்தில் இன்னும் முற்றிலும் ஓயவில்லை. நிலவிரவானபடியால் அங்கங்கே ஜனங்கள் மேடைகளில் கூடிக் கொண்டு பேசிக் கொண்டிருந்தனர்.

சூழ்நிலைக் காற்றிலேயே உரு அறியாத ஓர் பயம் குடி கொண்டிருப்பதாக எல்லோரும் உணர்ந்தனர். ஒருவருக்கொருவர் எதைப் பற்றிப் பயம் என்று சொல்லிக் கொள்ளாது போனாலும்கூடத் தங்கள் நகை நட்டுக்களை ஒளித்து வைத்து விட்டு வீட்டிலுள்ள ஆயுதங்களை அவரவர்கள் எடுத்து வைத்துக் கொண்டு திட்டிப் பதம் ஏற்ற ஆரம்பித்தனர்.

இரவு பாதி பிரயாணம் சென்று விட்டது. அந்த நேரத்தில் அரசன் மனையின் பின் வாசலில் வெளியே மூன்று உயரமான மனிதர்கள் நின்று கொண்டிருந்தனர். கொஞ்ச தூரத்தில் மரங்களில் நான்கு நல்ல குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. மூவரும் யாரையோ எதிர்பார்த்து நின்றனர். சற்று நேரத்தில் நாலாம் மனிதன் ஓர் குதிரை மேல் அமர்ந்து வந்து சேர்ந்தான். அவன் ஆயுதங்கள் தாங்கியிருந்தான். முகத்தில் கண்கள் தவிர மற்றப்பாகம் மூடப்பட்டிருந்தது. குதிரையிலிருந்து இறங்கிய அவன் மற்ற மூவரிடம் நெருங்கி, கலவரமடைந்த அவர்களைப் பார்த்துச் சற்றே சிரித்தான்.

"எல்லாம் சரியாக இருக்கிறது. நாம் போகப் போக அவன் கதவைத் திறந்து விடுவான்."

"அப்படியானால் வாருங்கள், மகாராஜா! நேரம் போக்குவானேன்."

"எதற்காக. ராய்மல்லரே! நீங்கள் குதிரைகளிடம் இருங்கள். நாங்கள் சென்று வருகிறோம்." வந்தவன் சொன்னான்.

"ரொம்ப சரி. என்னையும் அழைத்துப் போகலாம்........" ராய்மல்லன் குரலில் ஏக்கத்தின் சாயல் நிழல் காட்டிற்று.

"கவலை வேண்டாம். இன்னம் வேண்டிய நேரம் இருக்கிறது." சொல்லிக் கொண்டே வந்தவன் சுவரின் அருகே சென்று அங்கே இருந்த ஓர் சாளரத்தின் கதவைத் திறக்க முயன்றான். ஆனால் கதவு திறக்கவில்லை.

"ரத்னமல்லரே! ஏதோ தகராறல்லவா ஏற்பட்டு விட்டது." கிழவன் சொன்னான்.

"ஏன்?"

"இந்தக் கதவைத் திறந்துவைக்கச் சொல்லி இருந்தேனே! பிறகு ஏன் மூடியிருக்கிறது?" கிழவன் ஏமாற்றத்தில் பல்நெறித்துக் கேட்டுக்கொண்டான்.

"வாரும், திரும்பிப் போய்விடலாம்!"

கிழவன் பல்லைக் கடித்துச் சொன்னான்:

"எதற்காகத் திரும்புவது? உனக்கு உயிர் வெல்லமானால் திரும்பிப்போ. நாங்கள் வேண்டிவந்த பொருளை எடுத்துச்செல்வோம்; அல்லது இங்கேயே உயிரைவிடுவோம். இவ்வளவு பேடியா நீ! வீரச்செயல்கள் புரியும் வழியா இது?" கிழவன் குரலில் சீற்றம் அட்டகாசம் புரிந்தது. பாவம், ரத்னசிங் வெட்கி நின்றான்.

மூன்றுமவன் கேட்டான்: "சரி, என்ன செய்யலாம் இப்பொழுது!"

"இவ்வளவு பெரிய கட்டடத்தில் எங்காவது திறப்பு இருக்காதா?" என்று சொல்லிக் கொண்டே கிழவன் அங்குமிங்கும் சென்று பார்வையைச் செலுத்தினான். வெகு நேரம் பார்த்தும் ஒன்றும் வழி ஏற்படவில்லை. அநேக இடங்களில் சுவரிற்கு வெளியே நீண்டிருக்கும் பல கணிகள் தென்பட்டன; ஆனால் ஏறுவதற்குக் கஷ்டமாயிருந்தன. அவைகள் வாயிலும் மூடப்பட்டிருந்தன. கிழவன் கலங்காமல், தயங்காமல் மேலே சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் ரத்னசிங் கிழவனின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினான். இருவரும் பார்த்தனர். ஒரு பலகணியிலிருந்து கயிறு தொங்கிக்கொண்டிருந்ததைக் கண்டு இருவரும் இன்பத் திகைப்புடன் நின்றனர். மூன்று நாட்கள் முன் திரிபுவன் அந்தக் கயிற்றின் வழியாகத்தான் மேலே ஏறியிருந்தான். அரசன் செத்த அந்தக் குழப்பத்தில் பிரஸன்னா அதை அவிழ்க்க மறந்திருந்தாள். கிழவன் கண்களில் இன்பம் படர்ந்து எழும்பிற்று. தலைப் பாகையை அமுக்கி வைத்துக்கொண்டு ஒரு

நாகரிகமான

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

வீட்டுக்குத் தேவையான சகல பாத்திரங்களும்,
விதம் விதமான ரகங்களில் கிடைக்கும்.

●

சாப்பாட்டுத் தட்டுகள், பிளேட்டுகள், டிபன் செட்டுகள்.
அடுக்குச் சட்டிகள், ஸாஸ்-பான்கள், கரண்டிகள், டவரா,
டப்பா டம்ளர்கள், கிண்ணங்கள் மற்றும் ஏராளமானவை.

●

"ஸன்" பிராண்டு பர்த் ஸ்டேபிரைட் ஸ்டீல் பாத்திரங்கள்,
கிரௌன் பிராண்டு அலுமினியப் பாத்திரங்கள், மற்றும்
பித்தளை, தாம்பரம் பாத்திரங்கள் மொத்தத்திலும்,
சில்லரையிலும் மலிவாகக் கிடைக்கும்.

●

எம். ஏ. எதிராஜுலு நாயுடு,
7/4, ஈவினிங் பஜார், பார்க் டவுன், மதராஸ்-3.

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினுல் நின்றுபோனது நீங்கும். வருங் காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்ருர்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ. 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ. 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ. 8

(V. P. Charges Extra)

தயாரிப்பவர்கள்:-

Mrs. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. ஹாரி & சன், 93, சைனுபஜார் ரோடு, மதராஸ்.
2. ஜே. திராத் & கோ., மங்கல்தாஸ் மார்கெட், ஹனுமான் மந்திர் மேல்புரம், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்-2.
3. நாதம் & கம்பெனி, மட்டஞ்சேரி, கொச்சி.
4. எல். எம். முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தர்மதலா தெரு, கல்கத்தா.
5. ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்.
6. கே. ஸி. மாத்யூ & கோ., கோஸாஞ்சேரி, திருவாங்கூர்.
7. பயனீர் பார்மஸி, 183, மெயின் ரோடு, கொழும்பு (ஸிலோன்).

பாய்ச்சல் பாய்ந்து, கயிற்றைத் தாவிப் பிடித்தான். கிழவன் சரசர என்று மேலே ஏறி, பலகணி வாயிலை அடைந்தான். பின்னே அவன் இரு தோழர்களும் ஏறி வந்துவிட்டனர். அவர்களிடம் துவாரம் போடவேண்டிய ஆயுதங்கள் இருந்தன. மள மள என்று தாழ்ப்பாளுக்குப் பக்கத்தில் கதவைக் குடைந்து, தாழ்ப்பாளை நீக்கிக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தனர். மீனல்தேவி அறைப் பக்கம் சென்ற அவர்கள் அரண்மனை முழுவதும் அமைதியில் ஆழ்ந்து கிடப்பதைக் கண்டனர்.

கிழவன் எல்லாம் தெரிந்தவன்போலத் தயங்காமல் சென்று கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவர்கள் ராணியின் சயன அறையை அடைந்தார்கள். வெளியே ஓர் தாதி தூங்கிக் கொண்டிருந்தாள். கதவு பாதி திறந்து இருந்தது. கிழவன் அதைத் தள்ளினான். ஆனந்தம் கொண்ட அவன் ஜயதேவனின் முதல் படுக்கையருகே சென்றான். வலையை நீக்கி உள்ளே பார்த்த அவன் நெருப்புப் பொறியை மிதித்தவன்போலத் துடித்து எழுந்தான். படுக்கை காலியாயிருந்தது. ஜயதேவனை அங்கே காணோம். இருட்டில் அவன் கண்கள் பொறி பறக்கும் நெருப்புத் துண்டாயின. அவன் அங்குமிங்கும் பார்த்தான். எங்கும் ஒரே அமைதி. பதுங்கிய அடிபோட்டு அவன், அறையின் மற்றொரு பக்கம் சென்றான். அந்தக் கட்டிலையும் கவனித்தான். வலையை நீக்கினான். அதுவும் ஆளின்றிக் கிடந்தது. கிழவன் திரும்பினான். பின்னால் நின்றிருந்தனர் மற்ற இருவரும்.

"ரத்னா! இருவரும் ஓடி விட்டார்கள்."

"என்ன?"

அவன் தணிந்த குரலில் சொன்னான்: "ஆம், நம்முடைய விஷயம் வெளியாகிவிட்டது. இங்கிருந்து ஓடுவதை விட வேறு வழியில்லை. 'வா' என்று இருதோழர்களையும் அவன் திருப்பிவிட்டான். கதவருகில் சென்ற அவர்களை ஓர் அதிசயம் வரவேற்றது. சாத்தப்பட்டிருந்த கதவைத் தள்ளிப் பார்த்தபோது வெளியில் தாழ்ப்பாளிடப்பட்டதாகத் தெரிய வந்தது. கிழவன் 'ஒழிந்தோம்!' என்று கத்தினான். பின்னால் நின்ற இருவர் இதயப் படபடப்பையும் அவன் கேட்க முடிந்தது. வேகமாகத் திரும்பிச் சென்ற அவன் அந்தப் பக்கத்துக் கதவையும் தள்ளிப் பார்த்தான். அதுவும் தன் தோழனின் நிலைமையிலேயே தாழிடப்பட்டு நின்றது.

"குழந்தாய் ரத்னா, அகப்பட்டுக் கொண்டோமே!" கிழவன் அங்கலாய்த்தான்.

"ஜன்னல் வழியாகவும் வெளியேற முடியாதா?"

"அடே, கதவைத் தாழிட்டவன் சாளரத்தை விட்டுவைத்திருப்பானா?

கிழவன் சாளரத்தருகே சென்றான். கோட்டைச் சுவருக்கு வெளியே பார்க்கும் ஜன்னல்களின் வழியே வெளியேறுவதென்பது ஒருவராலும் முடியாத காரியம். மற்றப் புறத்தில் இருந்த ஜன்னல்களின் கீழே உள் முற்றம் இருந்தது. அங்கே ஐந்தாறு சிப்பாய்கள் வாளேந்திக் காவல் புரிந்தனர். ஒருவன் வில்லம்பு கூட வைத்திருந்தான்.

"எல்லா விதத்தாலும் மாட்டிக்கொண்டோமே மகாராஜ்! இனி என்ன நடக்கும்?"

'இரவு முழுவதுமாவது யோசிக்க நேரம் கிடைத்தால் ஏதாவது ஒரு வழி தேடலாம்; ரத்னா! போ. எல்லாக் கதவுகளையும் உட்புறமாயும் தாழிட்டுவிடு"

"இதோபார் ஒரு வழி இருக்கிறது. ஊஞ்சலின் சங்கிலிகள் கூரைவரை போயிருக்கின்றன. அங்கே ஏறி, மேல்பக்கம் ஒரு துவாரம் செய்துவிட்டால் வழி ஏற்படலாம்." கயிற்றில் ஏறிச் சென்ற கிழவன் 'சரிதான் அங்கேயும் ஆட்கள்' என்று சொல்லிக் கொண்டே இறங்கிவிட்டான்.

ரத்னசிங் முன்னே வந்து "மதனபால சிங்ஜி! இனி என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

கோபக் குரலில் மதனபாலன் சொன்னான்:

"அதைப்பற்றித் தானே நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அகப்பட்டால் மீனல்தேவி காலால் நசுக்கி விடுவாள். தப்ப இரண்டு வழிகள் தான் உண்டு."

"என்ன வழிகள்?"

"ஒன்று இந்த ஜன்னல் வழியே கீழே குதித்து அங்கே நிற்கும் சிப்பாய்களை ஏமாற்றி ஓட முயலலாம். அல்லது, காலையில் கைதுசெய்ய வரும் ஜனங்களுடன் சண்டையிட்டுத் தப்ப முயலலாம்"

"போங்கள் பெரியப்பா, இதெல்லாம் சாவுக்கு வழிகள். இதைவிட நாளை மீனல்தேவி காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுவிடலாம். ஜாகீர் போய்விட்டாலும் உயிர்ப் பிச்சையாவது கிடைத்துவிடும்"

"பயலே! என்ன சொன்னாய்? மதனபால் "சாவ்டா" தலை குனிவானா? உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?"

"அப்படியானால் இந்த வயதில் எங்களை உயிர்விடச் சொல்கிறீர்களா? உங்களுக்கு என்ன, மூன்றுவது பருவம் நடக்கிறது!"

அலுத்துப் பல்லைக் கடித்து மதனபாலன் சொன்னான்: "சரி சரி, நிறுத்து. உன் வழி எனக்கு வேண்டாம். இப்பொழுது சாவை வரவேற்க வேண்டியதுதான். கொஞ்சமாவது நழுவினுயோ முதலில் உன்னை நானே முடித்துவிடுவேன். நினைவில் இருக்கட்டும்"

இரு இளைஞர்களும் திடுக்கிட்டனர். கிழவன் கண்கள் ஆட்ட மற்றுப் பயங்கரத் தோற்றமளித்தன. சொன்னபடி செய்வான் கிழவன் என்று அவர்கள் நம்பி, சும்மா இருந்துவிட்டார்கள்.

கனமற்ற குரலில் மதனபாலன் முணுமுணுத்தான்: மீனல் தேவியிடம் மன்னிப்புக் கேட்பதா? பீமதேவனின் மைத்துனன் (ராஜபுத்திர ஸ்திரீ உதயாமதி சகோதரன்) நானு? சரி இதுதான் வழி இனி. அட பயல்களே! பாருங்கள் நாளைக்கு என் கைவரிசையை மீனல் தேவிக்கும் காண்பிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே மதனபாலன் திரும்பிப் பார்த்தான். இருவரும் தூங்கிக் கொண்டிருந்தனர்! அவர்கள் மதனபாலன் என்ன சொல்வானே என்று பயந்து பாசாங்கு செய்தனர். இரவு முழுவதும் அவர்கள் அதே நிலைமையில் கிடந்தனர். மதனபாலனும் அங்கும் இங்கும் அலைந்து ஏதோ உளறிக் கொண்டிந்தான். அருணோதயம் ஆயிற்று. வெளியே கதவுச்சப்தம் கேட்க ஆரம்பித்தது. மதனபாலன் இரு இளைஞர்களுக்கும் ஒன்றொன்று வைத்தான்.

"எழுந்திருங்களடா பயல்களா! தூங்க வெட்கமாயில்லை? சரியான சமயம் வந்திருக்கிறதடா, வீரத்தனத்தைக் காட்ட!"

இரு இளைஞர்களும் எழுந்து நின்றனர்.

"பெரியப்பா, இப்பொழுதும் சொல்கிறதைக் கேளப்பா. மீனல் மன்னித்து விடுவாள். அசட்டுத்தனம் செய்யாதே. சொல்லி விட்டேன்."

"சண்டாளா நாயே! உன் தாய் உன்னைப் பெற்றதற்கு ஒரு கல்லைப் பெற்றிருக்கலாம். எழுந்திருக்கிருயா? அல்லது யமலோகத்துக்கனுப்பட்டுமா!" சொல்லிக் கொண்டே கிழவன் வாளை உருவி இழுத்தான். நடுங்கும் கையுடன் இளைஞர்களும் வாளை உருவி நடுக்கத்துடன் கதவருகில் சென்று நின்றுர்கள். மதனபாலன் பயங்கரமான திடச் சித்தம் கொண்டு புலியைப் போல் கதவு திறந்ததும் ஆள் மேல் பாயத் தயாராய் நின்று கொண்டிருந்தான்.

வெளியிலிருந்து தாழ்ப்பாள் விலகிற்று. கதவு அசைந்தது. உள்ளே சாத்தப்பட்டதைக் கண்டு கதவை நகர்த்திவிடவே யோசனை நடந்தது. மதனபாலன் அவசரப்பட்டான். அவன் கைகள் ஊறின. அவனே உள்தாழ்ப்பாளைத் திறந்து விட்டான். மதனபால் வெளியே யார் எவ்வளவு பேர் என்று பார்க்கக் கூட நிற்கவில்லை. கொஞ்சம் தீவர்த்திகள் தென்பட்டன. சில வாட்கள் மின்னின. அவ்வளவு தான், 'ஜய சோம்நாத்' என்ற கோஷத்துடன் அவன் புலி போல் பாய ஆரம்பித்து விட்டான்.

இருபது இருபத்தைந்து உருவிய வாட்களுக்கிடையே மதனபாலன் சுற்றித் திரிந்தான். இரு இளைஞர்களும் பயந்த பூனைகள் போல் ஒளிந்து நின்றனர். மதனபாலன் அரக்க ஆவேசம் கொண்டிருந்தான். அதைத் தடுப்பதோ அவனைக் காயப்படுத்துவதோ முடியாததாகி விட்டது. அவன் வாள் பலத்தால் வழி ஏற்படுத்திச் சென்று கொண்டிருந்தான். உடலில் குருதி ஆறுகள் பாய்ந்து ஓடின. கண்கள் இருண்டு வந்தன. மாடிப் படியருகில் வந்து சேர்ந்தான்; கீழே இறங்க ஆரம்பித்தான். கீழே இன்னும் பல வீரர்கள் வரவேற்கத் தயாராய் நின்றுர்கள். விஷ்ணு சக்கரத்தைவிட வேகமாக அவன் வாள் அவனைச் சுற்றிச் சுழன்றது. ஆரவாரத்தைக் கேட்டு அதிக ஜனங்கள் சேர்ந்து விட்டார்கள். நான்கு பக்கமும் எரியும் தீவட்டிகள் வந்து கூடின. மதனபால் கதவுப் பக்கம் சென்றுன். விதியின் உதைப்பு: கால் நழுவிற்று. கீழே விழுந்தான் கிழவன். பதினைந்து வாட்களின் நுனிகள் அவன் உடலினுள்ளே புகுந்து உயிரைத் தேடி வெளியேற்றி விட்டன!

எல்லோரும் பயந்து விட்டனர். ராணி என்ன சொல்வாளோ? மேடையின் மேல் சாந்தி சந்திரன் வாளுருவி நின்று கொண்டிருந்தான். கடைத் தெருவில் வதந்தி பறந்து கொண்டிருந்தது: மீனல் தேவியும் ஜயதேவகுமாரனும் இரவே அரண்மனையை விட்டுப் போய்விட்டார்களாம். வீரர்களிடையே குழப்பம் ஏற்பட்டது. உள்ளுக்குள்ளேயே எல்லோரும் நடுங்க ஆரம்பித்தனர். இனி என்ன?

சாந்தி சந்திரன் அரண்மனை வாயிலில் கடுமையான பாராவைப் போட்டான்.

முரார் பால்

பிரஸன்னு மிகவும் கஷ்டப்பட்டுக் கண்ணைத் திறந்தாள். தலைவலித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஆடும் ஓர் படுக்கையில் தூங்குவதாக அவள் அறிந்தாள்.

திறந்த கண்களை இருட்டு வரவேற்றது. எண்ணங்களைச் சரி செய்து பார்த்ததில் தனித்த ஓர் பல்லக்கில் தூங்கிக் கொண்டிருந்ததாக அறிந்தாள். மீனல் தேவி மயக்க மருந்து கொடுத்து எங்கோ அனுப்பிவிட்டாள் என்று அவள் அறிய அதிக நேரம் ஆகவில்லை. எங்கே? மாளவ அரசனிடமா? அவள் காது கொடுத்துக் கேட்டாள்: அவளைச் சுற்றிச் சில குதிரைகளும் நடந்து கொண்டிருந்தன. மாறிப் படுத்துப் பல்லக்கின் திரையைத் தூக்க முயன்று, பயந்து, சும்மா இருந்து விட்டாள்.

இவ்வளவில் எல்லாம் நின்று விட்டன. பிரஸன்னாவின் பல்லக்குப் பூமியில் இறங்கிற்று, மேலே என்ன நடக்கும்? என்று எதிர் பார்த்துப் பிரஸன்னா படுத்தவாறிருந்தாள். தீவட்டி தாங்கி யாரோ அவள் பல்லக்கருகே வந்து கொண்டிருந்தனர். தூங்குபவள் போல் கண்ணை மூடிக் கவனித்தவாறே படுத்துக் கொண்டிருந்தாள். யாரோ வந்து படுதாவைத் திறந்து பிரஸன்னாவைக் குனிந்து பார்த்தார்கள். அரைக் கண்ணைத் திறந்து பிரஸன்னா பார்த்தாள். அது யார்? அத்தையா? இந்த நேரத்திலா? துக்கம் காப்பதை விட்டு, மரியாதையை உதறி எறிந்து குஜராத் அரசி இங்கே வந்திருக்கிறாளே! பிரஸன்னா அசையவில்லை. மறுபடி திரையைத் தொங்க விட்டு ராணி சென்று விட்டாள்.

பிறகு ஒரே இருட்டு. மறுபடி கண்களைத் திறந்து பிரஸன்னா யோசிக்க ஆரம்பித்தாள்: பட்டணிலிருந்து எங்கோ ஓடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கே? ஏன்? திடீரென்று அவளுக்குத் திரிபுவன் ஞாபகம் வந்தது. திரிபுவன் என்ன நிலையிலிருக்கிறானோ? துடிக்கிறானோ என்னவோ? ஆனால் அவள் தான் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறாளே, என்ன செய்வாள்? அவளை ஒரே எண்ணம் வாட்டத் தொடங்கிற்று. எந்தவிதம் திரும்பிச் செல்வது பட்டணுக்கு! பட்டணிலிருந்து எவ்வளவு தூரம் வந்திருக்கிறாள் என்றும் அவளுக்குத் தெரியாது. துணிவு கொண்டு திரையைத் தூக்கி வெளியே பார்த்தாள். பல்லக்குத் தூக்கிகள் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்து வெற்றிலை பாக்கை மென்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் மெதுவாக எழுந்து இருட்டிலேயே சென்று அருகிலுள்ள ஓர் மரத்திடையில் மறைந்து நின்றாள். மேலே என்ன செய்வது என்றுகூட அவள் யோசிக்கவில்லை.

அதே சமயம் மீனல் தேவியும் அங்கே வருவதைப் பார்த்தாள். அவள் கூட யதி ஆனந்த சூரியும் சிற்றரசர் முரார் பாலும் இருந்தனர். அவர்கள் பிரஸன்னாவின் அருகிலேயே வந்துவிட்டார்கள். அவளுக்குப் பயம் ஏற்பட்டது. மார்பு அடித்துக் கொண்டது. அவர்கள் கண்டு கொண்டால்? ஆனால் அவர்கள் ஆழ்ந்திருந்த பெரும் பேச்சு அவர்களை வேறு பக்கம் திரும்பச் செய்யவில்லை.

முரார் பால் சொல்லிக் கொண்டிருந்தான்: "ஆனால், மகாராணி! பட்டணில் ஏதாவது நடக்காமல் இருக்காது. தாங்கள் வெளியே சென்றதை அறிந்ததும் ஜனங்கள் எதையாவது செய்து தான் தீர்வார்கள்."

மீனல் கோபம் கொண்டு சீறினாள்: "லீலாதர வைத்யர் சொன்னார். முஞ்ஜாலும் சொன்னார். நீயும் இப்பொழுது சொல்கிறாய்! ஆனால் பதினைந்து வருஷமாய் நான் ஒன்றும் அறியவில்லை. என்ன ராணி கொஞ்ச நேரத்துக்குக்கூட கோட்டை எல்லையை விட்டு நகரக் கூடாதா?"

"மகாராணி! நான் பேசுவது அதிகம் என்று பட்டால் சேவகனை மன்னித்து விடுங்கள். மகாராஜ் கர்ண தேவர் பேரில் பட்டண் நகர் பூராவும் என்ன சொன்னாலும் கேட்கும். தங்கள் பேருக்கும் அந்தக் கௌரவம் உண்டு. ஆனால் தாங்கள் எந்த விதத்திலாவது பட்டண் கௌரவத்துக்கு இழுக்குக் கொண்டு வருவீர்கள் என்று எண்ணி விட்டார்களோ............பிறகு............"

ராணி கொதித்தாள்: "நீங்கள் எல்லோருமே என்ன சேர்ந்து பேசிக் கொண்டீர்களா?"

"மன்னியுங்கள். இதோ வாய்புதைத்து விட்டேன்!"

மீனல் தேவி கொஞ்சம் நயமான குரலில் சொன்னாள்: "இல்லை முரார் பால்! அதற்குச் சொல்ல வரவில்லை. பட்டணுக்கு இழுக்கு வரும் எதையும் நாம் செய்யமாட்டோம். மதுபுரியின் சேனையை வசப்படுத்திக் கொண்டு நான் கோட்டைக்குத் திரும்பி விடுவேன்."

யதிஜீ சொன்னார்: "முரார்பால்ஜீ! தாங்கள் சமாசாரம் சொல்லப்பட்டணுக்குப்போகிறீர் அல்லவா, அங்கேயே இரண்டு நாள் தங்கிவிடும். அதற்குள் தேவி முஞ்ஜாலை வசப்படுத்தி, சந்திராவதி சேனையைத் தேவப்ரஸாதைப் பொருத அனுப்பிவிட்டு, சில வீரர்களுடன் பட்டண் திரும்பிவிடுவார்கள்."

"ஆனால் அங்கே எனக்கு என்ன வேலை?"

"என்ன வேலையா? நீர் சாம்பானேரி வாசலின் திட்டிக்கதவுச் சாவியை எடுத்துச் செல்லும். கடவுள் கிருபையால் ஒன்றும் நிகழாது.

அப்படி நேர்ந்தாலும் அது மிகவும் உபயோகமாக இருக்கும். நாளை மறு நாள் மாலைக்கு எங்களை எதிர்பாரும். வரும்போது நானும் கொஞ்ச வீரர்களைக் கொண்டுவருகிறேன். ஏதாவது தொந்தரவு ஏற்பட்டாலும் ...!''

''ராணி! எல்லாம்கட்டளைப்படியே. சங்கரரின் கிருபையால் எல்லாம் நன்ருய் நடந்தேற வேண்டும். பிறகு கவலையில்லை.!''

''சரி நாங்கள் போகிறேம். முடிந்தால் மதுபுரியின் சேனையிலிருந்தும் ஒரு பகுதியை அனுப்பிவைக்கிறேம்.'' என்று சொல்லி ராணி திரும்பினுள். பின்னலேயே மற்ற இருவரும் சென்றனர்.

பிரஸன்னவுக்கு மறுபடியும் பயம் ஏற்பட்டது. மீனல்தேவி எங்கேயாவது அவள் பல்லக்கருகில் சென்று பார்த்துவிட்டால்? தேட ஆரம்பித்துவிடுவாளே! தப்பமுடியாதே. ஆனுல் நல்ல காலம் அப்படி ஒன்றும் நடக்கவில்லை மீனல்தேவிக்கு இருந்த கவலையில் அதைப்பற்றி எண்ண நேரம் ஏது? ராணி தன் பல்லக்கிலமர்ந்தாள். தூக்குகிறவர்கள் தூக்கினுர்கள். குதிரை வீரர்களும் தங்கள் குதிரைகளில் ஏறிச் செலுத்த ஆரம்பித்தனர். மெதுவாகத் திவட்டிகள் இருளின் வயிற்றில் சென்றடைந்தன.

சந்திரன் ஒளியில் முரார்பால் குதிரையைத் தடவிவிட்டுக்கொண்டு தனித்து நின்ருன். அவனுக்கு யுத்தம் என்ருல் மிக ஆனந்தம். அவனுக்கும் தன்வீரத்தையும் புத்திசாலித்தனத்தையும் காட்டச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. அவனுக்கு யுத்தம் நடக்க இருக்கும் இடத்தைவிட்டுப் பட்டணுக்குப்போவது பிடிக்கவில்லை. என்ருலும் மீனல்தேவியின் ஆணை. வேறு வழியின்றிப் போகநேர்ந்தது.

திடீரென்று அவன் எண்ணக்கோவையைச் சிதறவைத்துவந்து நின்ருள் தேவாங்கனை போன்ற ஓர் அழகிய யுவதி. முரார்பாலின் கண்கள் சுருங்கி மலர்ந்தன. இது என்ன, கனவில்லையே?

''ராஜபுத்திரரே! இந்த வயதில் அதிகம் யோசனை செய்யக்கூடாது.'' முரார்பால் அங்கும் இங்கும் பார்த்து விழித்தான். அவனுக்கு மோகினியோ, பிசாசோ, என்ற பயம் ஏற்பட்டது. அவன் வாளில் கையையும் வைத்து விட்டான். அவன் அப்பொழுது தான் தாண்ட் பிரதேசத்திலிருந்து வந்திருந்தான். அதனுல் ராணியின் அழகொளி நிறைந்த அந்த மருமகளை அறியமாட்டான். ''யார்?''

''இது என்ன கேட்கும் விதமே மரியாதைக் குறைவாயிருக்கிறதே. தாண்ட்பிரதேசத்தின் காட்டு மிராண்டிகளுடன் பழகிப் பழகி க்ஷத்திரியத் தன்மைகூடப் போய் விட்டாற் போலிருக்கின்றது!'' பிரஸன்ன கல கலவென்று சிரித்தாள்.

முரார் பாலுக்குப் பயம் போய் விட்டது. ''நீ யார் சகோதரி! இந்த நேரத்தில் தனியாக எப்படி வந்தாய்?''

பிரஸன்ன முறுவல் மயக்கச் சொன்னுள்: ''தங்களுடன் பட்டண்செல்லத்தான். வாருங்கள். குதிரையைத் தயார் செய்யுங்கள். பேசிக்கொண்டே இரவைக் கழித்து விடுவோம்!''

''அது இருக்கட்டும் — யார் நீ?''

''ஒரு துணையற்ற பெண்!''

''அது தான் சொல்லாமலேயே விளங்குகிறதே!''

''பிறகு என்ன? அழைத்துச் செல்வது தானே!''

முரார் பாலன் சிரித்துக்கொண்டே சொன்னுன்: ''என்னை நம்பி முழு விஷயத்தையும் ஒளிக்காமல் சொல்லும் வரை நான் ஒன்றும் செய்ய முடியாது. உன்னைக் குதிரைமேல் உட்கார வைக்கிறேன், அதை எடுத்துக் கொண்டு மறைந்து விடு, பிறகு நான் விழித்துக் கொண்டு நிற்கிறேன்,''

அவன் உள்ளம் இந்த உருவப் பெருமை கொண்ட பெண் கனியைக் கண்டு நிலை குலைந்து நின்றது. தனியிடம், அழகிய நிலவொளி, இன்பமூட்டும் வெறி, பிரஸன்னவின் ஒளி பொருந்திய முகத்தின் காந்த சக்தி—, இவைகளுக் கெதிரே முரார்பாலன் சாதுவாகி நிற்கக் கூடிய விரக்தனல்ல!

''ராணபுத்ரரே! தற்சமயம் உங்களை நம்பி, தனியே போகத் தயாராயிருக்கிறேனே, அது போதாதா?''

முரார் பால் தமாஷ் செய்தான்: ''இல்லாவிட்டால் என்ன செய்வாயாம்? இது வீண் வார்த்தை. சரி, சொல்லாமற் போனுல் போ. பட்டணில் உனக்கு எங்கே போகவேண்டும்?''

''ஒன்றும் கேட்காதீர்கள், எல்லாம் சமயம் வந்தபோது சொல்லுகிறேன். இந்தச் சமயம் பட்டணுக்கு அழைத்துப் போங்கள்— உங்கள் தயவு.''

''சரி வா; உட்கார வைக்கிறேன்'' முரார் பாலுக்கு அவளைத் தன் கைகொண்டு தூக்குவதில் பரம ஆனந்தம்!

"வேண்டாம், எனக்கே உட்காரத் தெரியும்!" பிரஸன்னா குதிரையின் மேல் தாவி ஏறி உட்கார்ந்தாள். முரார்பாலனும் முன் பக்கத்தில் உட்கார்ந்தான். குதிரை பட்டண் பக்கம் ஓட ஆரம்பித்தது.

முரார்பால் கேட்டான். "நீ க்ஷத்திரியப் பெண்ணா?"

" ஆம் - ஏன்?"

"கலியாணம் ஆய் விட்டதா?"

" இல்லையே!" பிரஸன்னா கடகட என்று சிரித்தாள்.

ஆவது ஆகட்டும்.

தேவப்ரஸாத் கண்விழித்து எழுந்தவுடன் அவன் உள்ளத்தில் குழந்தையைப் போன்ற ஓர் உத்ஸாகம் தோன்றிற்று. அரசியல் சூழ்ச்சிகளுக் கெதிரே, முஞ்ஜாலின் அறிய முடியாத ராஜதந்திரக் கயிறுகள் அவனைச் சூழ்ந்து கட்டியிருக்கும் போது அவனுக்கு வழி ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் இப்பொழுது ரண பேரிகை கொட்டி விட்டது. சண்டை எதிரேயே வரவேற்க வந்து விட்டது. இது தேப்ரஸாதுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவன் கைகளில் ஆயிரம் மடங்கு பலம் வந்து விட்டது, தன் துயர்கள், நேர்ந்த அநியாயங்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டான்,

அவ்ன் கொஞ்சம் இருட்டுடனேயே எழுந்துவிட்டான். மண்டுகேசுவரரின் ருத்ரமஹாலயத்தில் தங்கியிருந்தரன். எழுந்தவுடன் மகாதேவனுக்கு வில்வபத்ரம் ஒடித்து, பூஜை முடித்து, ஆயுதம் தாங்கி, தயாரானான். சூரியோதய நேரத்தில் அவன் முஞ்ஜாலுடன் பேசப் போக வேண்டும், அதற்கு அவன்

தயாராயிருந்தான். கீழே குதிரைகள் கனைப்பு, கூடச்செல்லும் சிற்றரசர்களின் ஆவலை எதிரொலித்தது.

முஞ்ஜாலைக் கேட்டு இரு சேனைகளையும் சேர்த்துப் பட்டண் பக்கத்திலேயே தண்டு இறங்கலாம் என்று தேவப்ரஸாத் யோசித்துக் கொண்டிருந்தான். சந்திராவதியின் சேனை டேரா அடித்திருக்கும்வரை அமைதியுடன் வேலை நடக்கலாம். முஞ்ஜாலின் உதவியால் சந்திராவதி சேனை திரும்பி விடும், அல்லது தன்னுடன் சேர்ந்து விடும் என்று தேவப்ரஸாத் எண்ணினான். பிறகு பட்டண் அருகே தண்டு இறங்குவது சுலபமாய்ப் போய் விடும். மீனல் தேவி வேறு வழியின்றி, சமாதானத்துக்கு வந்து விடுவாள். ஒருகால் இந்தவிதம் ரத்தம் சிந்தாமலேயே அவன் எண்ணம் பூர்த்தி அடைந்து விடலாம். முஞ்ஜால் வேறு அவன் கக்ஷியிலிருக்கும் போது அவனுக்கு ஒரு கவலையும் ஏற்பட நியாயமில்லை!

மண்டலேசுவரன் தயாராகி, கீழே வந்தான். கீழே பத்துப் பன்னிரண்டு சிற்றரசர்கள் தங்கள் வீரர்களுடன் தயாராய் நின்றார்கள்.

மீசையில் கைவைத்து மண்டலேசுவரன் கேட்டான்: "என்ன கம்பீர மல்லரே – பட்டண் பக்கம் எப்பொழுது அணிவகுத்துச் செல்லலாம்?" கம்பீர மல்லர் தேவப்ரஸாதின் சிநேகிதச்சிற்றரசன். "மகாராஜ், வல்லபசேன் மேரளத்திலிருந்து கிளம்ப ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். தாங்கள் சென்று முஞ்ஜாலைச் சந்தித்து வாருங்கள், நாளையே புறப்பட்டு விடலாம்."

"ஆனால் வல்லபன் எங்கேயாவது சந்திராவதி சேனையுடன் சண்டையிட்டு மடிந்து விடப் போகிறான்!"

"இல்லை, அதோ உங்கள் குதிரை வந்துவிட்டது. கிளம்புங்கள், நேரமாகிவிடப்போகிறது."

தேவப்ரஸாதின் குதிரை எதிரே வந்து எஜமானனைப் பார்த்ததும் கனைத்தது. அது வெண்ணிறமுள்ள மிக அழகிய கதியவார் பெண் குதிரை.

"என்ன ரூபா?" ஆனந்தத்துடன் தேவப்ரஸாத் அதனருகில் சென்று தட்டிக்கொடுத்தான். எஜமான விசுவாசமுள்ள குதிரை அன்புக்கெதிரே ஆடிக்கொடுத்தது. தேவப்ரஸாத் அதன் பிடரிமயிரைப் பிடித்து ஒதுக்க ஆரம்பித்தான். ஏறுவதற்காகக் கழுத்தில் கையை வைத்து ஏறும் சமயம்; எதிரே ஐந்தாறு தீவட்டிகள் வந்துகொண்டிருந்தன. இடையே ஒரு பல்லக்கும் வந்துகொண்டிருந்தது. சிற்றரசர்களின் குதிரைகள் கனைத்தன. தேவப்ரஸாதும் ஆச்சரியத்துடன்நகர்ந்தான். அவர்களில் ஒருவன் முன்னேக்கி வந்தான்.

"யாரப்பா அது? வஸ்துசந்திரனு? ஏன்? என்ன சமாசாரம்?" மண்டலேசுவரன் குரலில் குறுக்கிடு பொறுக்காத கோபம் தென்பட்டது.

"பிரபு, மகாராணி ஆசீர்வாதம் அனுப்பினர்கள்"

"ரொம்ப சரி பிறகு...?"

"கூட இந்தப் பொருளையும் அனுப்பியிருக்கிறர்கள்."

"என்ன அது? தேவப்ரஸாத் பல்லக்கையே பார்த்துக்கொண்டிருந்தான். மீனல்தேவி என்ன புதிர் போடுகிறர்கள் என்று அறிய அவன் மனது பறந்துகொண்டிருந்தது. பல்லக்கு எதிரேவந்தது. எதிர் பார்த்திருந்த சிற்றரசர்கள் கூட்டம் அதைச் சுற்றிச் சூழ்ந்தனர். தீவட்டிகள் நெருங்கி வந்தன. வஸ்துசந்திரன் பல்லக்கின் திரையைத் தள்ளிவிட்டான். அதிலிருந்து ஹம்ஸா வெளியேறி வந்து நின்றாள். தேவப்ரஸாத் அவளைப் பார்த்தான். இவ்வளவுவீரர்களுக்கெதிரே வாடியிருக்கும் அந்த மறக்க இயலாத அழகிய முகத்தைப்பார்த்தான். அவன் உடல் முழுவதும் பதறி ஆட ஆரம்பித்தது. தலை சுழல ஆரம்பித்தது. கைகளை மார்பில் புதைத்துக்கொண்டான்.

அவன் மறுபடி உயரப் பார்த்தான். இதோ சில அடிகளுக்கு அப்பால் அவன் ஆசை மங்கை நின்றுகொண்டிருந்தாள். பதினைந்து வருஷங்களுக்குப்பிறகு இன்று அவன் அவளைப் பார்க்கிறன். அவனல் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை.

ஹம்ஸாவும் பதினைந்து வருஷமே நிறைந்த மங்கைபோல் கால் நகங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உடலும் பதறிக் கொண்டிருந்தது. அவள் கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. அருகே உள்ளவர்கள் அப்படியே அசைவற்று நின்று விட்டனர். கடைசியில் மண்டலேசுவரனுக்கு ஸரஸ்வதி அருள் புரிந்தாள்.

"யார் ஹம்ஸாவா?"

ஹம்ஸா மேல் நோக்கினாள். அவள் பெரிய கண்களிலிருந்து அழிவறியாத ஆவல், கற்பனை மீறிய காதல் ஒளி விட்டெழுந்தது. அவள் பேச விரும்பினாள்; ஆனால் மேலெழு

ந்த கைகளுடன் அவள் மயங்கி விழுந்து விட்டாள். மண்டலேசுவரன் ஓடித் தாங்கித் தன் பசிகொண்ட கைகளினால் தூக்கினான். பிறகு அங்கே நிற்கும் குருக்கள் பக்கம் திரும்பி, "குருக்கள்! தயவுசெய்து உங்கள் பத்தினியைக் கூப்பிடுங்கள் உடனே!"

மண்டலேசுவரன் சொல்லிக் கொண்டே ஹம்ஸாவைத் தூக்கி எடுத்து உள்ளே சென்றான். கோவிலுக்குள் ஒரே ஆரவாரம். யாரது, என்ன என்று கூட ஒருவரும் கேட்கவில்லை. எல்லோரும் ஓடி ஓடி உதவி புரியத் தொடங்கினர்.

வெளியேறிய வேளையில் கதிரவன் கிரணங்கள் ஆகாயத்தில் பரவ ஆரம்பித்தன. கம்பீரமல்லன் மேலே வந்தான்,

"மகாராஜ், நேரம் ஆகிறது... !"

"என்ன நேரம் ஆகிறது..." ?

"முஞ்ஜால் எதிர் பார்த்திருப்பார், சூரியோதயம் ஆகிவிட்டது." எரிந்து விழுந்தான் மண்டலேசுவரன்; "ஆகட்டும், என்ன தான் செய்வது." அவன் உயிரே மயங்கிக் கிடக்கும் ஹம்ஸா கையில் இருந்தது.

"ஆனால் மகாராஜா! உங்கள் சந்திப்பில் தானே எல்லாம் ஒட்டி நிற்கிறது, ஹம்ஸா தேவி விழித்துக் கொண்டு விடுவார்கள். நீங்கள் கிளம்புங்கள்".

தேவப்ரஸாத் கோபத்துடன் காலை அடித்துச் சொன்னான்: "கம்பீர்! எல்லார் பாக்கியமும் தொலைந்தாலும் சரி, உன் இராஜ்ய விவகாரமே எனக்கு வேண்டாம். என் ஹம்ஸா ஒருத்தியே எனக்குப் போதும். யாருக்கு, எங்கு வேண்டுமோ போகலாம்!"

"மகாராஜ்! இவ்வளவு பதட்டப் பட்டால் என்ன லாபம்? முஞ்ஜால் மகாமந்திரியை இங்கே வரச்சொல்லி வரட்டுமா?"

"அவர் வர விரும்பினால், வரவேற்கத் தயாராயிருக்கிறேன்" என்று சொல்லி, தேவப்ரஸாத் அவனை விட்டு அப்பால் சென்று விட்டான்.

(தொடரும்.)



"காவோ சந்தன சோப் மிகவும் மேன்மையான முறையில் தயாரித்திருப்பதோடு எந்த உயரிய இங்கிலீஷ் டாய்லட் சோப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும் சளைக்காது தலைதூக்கி நிற்கும். காவோ சோப்பின் பரிமள சந்தன கந்தம் நாம் கண்ட வகைகளில் நிகரற்றது என்று சொல்லலாம்.

rapturously alluring & MYSTIC:
It will delight you

"சோப், பர்பியூமரி & காஸ்மடிக் ரெவியூ",
லண்டன்.

GANGA WORKS
ADYAR, INDIA.

முல்லைக் கொடி

M.S.V

ஜெகசிற்பியன்

சிவந்த பெண்ணின் உள்ளங் கைகளைப் போல, தளிர்க் கொழுந்துகளிரண்டை வெடிக்க வைத்தேன். பங்களாவின் முன் வரிசைச் செடிகளில் முதலில் நான் இடம் பெற்றிருப்பதால் என்மீது என் எஜமானர் மிகப் பிரியமாய் இருக்கிறார் என்பது நிதர்சன மாகியது. அவர் இவ்வளவு கண்ணுங் கருத்துமாய் என்னைக் காப்பதற்குக் காரணமில்லாமலில்லை. சென்ற வாரம் தம் மகளுக்கு வரன் தேடுவதற்காக அவர் பெங்களூர் சென்ற போது போன காரியம் பலிதமாகிவிட்டதால், அந்தச் சந்தோஷத்தில், ‘கிங்ஸ் பார்க்கி’லிருந்த என் தாய்ச் செடியின் கிளை யொன்றை (என்னை) விலை கொடுத்து வாங்கி வந்து முன் தோட்டத்தில் பதியம் போட்டார். ஒரு வாரத்திற்குள் நான் வேர்களைப் பாய்ச்சி, பூமாதேவியை மணந்துகொண்டேன். இனமேல் நான் பச்சை இலைகளைப் பள பளக்கச் செய்து எனக்குக் கொழுகொம்பாக நட்டிருக்கும் மூங்கிற் பந்தலின்மேல் பலநூறு கிளைக் கொடிகளைப் படரவைக்க வேண்டும். பின்னர் பருவ வயதை எட்டியதும் பூமாதேவியின் ஊட்டத்தால் சூல்கொண்டு, மணம் நிறைந்த மலர்களாகிய குழந்தைகளைப் பெற்று, என் எஜமானருக்குக் கொடுத்துவிடவேண்டும். அந்த என் குழந்தைகளை வாழைநாரில் சரமாகத் தொடுத்து, அவர் அருமை மகளின் பின்னலில் வைத்து அழகு பார்ப்பார். மீண்டும் நான் சூல் கொள்வேன்; மலர்க் குழந்தைகளை ஈன்றெடுப்பேன். பழையபடி அவருக்கே தாரை வார்த்து.........

இப்படி நான் என் வருங்கால நிகழ்ச்சிக் குறிப்பில் லயித்துவிட்டிருந்தேன்.

நான் இருப்பதற்குச் சற்றுத் தொலைவில் ஓர் இனிமையான ஒலி கணகணத்தது. காற்றில் அசைந்தாடும் என் இளங் கொடிகள் அந்தச் சப்தத்தைக் கவனமாகக் கேட்டன. சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ஒலி வந்த விதத்தை நான் அறிந்து கொண்டேன். அதாவது என் எஜமானருடைய மகள் வனஜாவின் கைகளிலிருக்கும் வளையல் ஒலிதான் அது. விடிந்ததும் கல்யாணமாகப் போகிறதென்ற கும்மாளத்தினாலோ என்னவோ மான் குட்டியைப்போலத் துள்ளிஓடி வந்தாள் என்னிடம்.

இந்திய மண்ணுக்குச் சொந்தமான எங்களுடன் பல வெளிநாட்டு விதேசிச் செடிகளும் கலந்து சொந்தங் கொண்டாடின எங்கள் மண்ணை. அப்பப்பா! பிழைக்கவந்த அந்தச் செடிகளுக்கு என்ன படாடோபம்! மனதிற்குப் பிடித்தமான மணம்வீச அவைகளுக்கு யோக்கியதை இல்லாவிட்டாலும் தாசிவீட்டுச் சேவிகைகள்போல, தளுக்கும் மினுக்குமாகப் பல நிற வண்ண மலர்க்குழந்தைகளை யல்லவா பெற்றுப் போட்டு விடுகின்றன! இந்தச் சிங்கார நிறங்களிலே சொக்கிப் போய் விடுகிறார்கள் இந்த காலத்து மனிதர்கள். கண்ணாடி வைரமாகி விடுகிறது; வைரம் பனித் துளியாக எடை போடப்படுகிறது! என்ன உலகமையா இது?

புதுப் புடவை மொட மொடக்க என்னிடம் ஓடிவந்த அந்தப் பெண்ணைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். பால்ஸன், ரோஜா, குரோட்டன்ஸ்—அதாவது மலர் பூத்த இலைச் செடிகள்—இவையெல்லாவற்றையும் லட்சியம் செய்யாமல் சுதேச இன உணர்ச்சியுடன் என்னிடம் ஓடிவந்த அந்தப் பெண்ணை எத்தனை

முறை பார்த்தாலும் எனக்குச் சலிப்புத் தட்டவே இல்லை. எனக்குப் பிறக்கப் போகும் குழந்தைகளின் நிறமான வெண்பட்டுச் சேலை உடுத்தியிருந்தாள் அவள். அவளது பால் வழியும் வதனத்தை ஒரு முறை ஸ்பரிசிக்கலாமா என்றுகூட ஆசையாகிவிட்டது எனக்கு! நாளைக்கு அவள் கழுத்தில் கயிறிடப் போகும் வாலிபனுக்கல்லவோ அந்தப் பாக்கியம் கொடுத்து வைத்திருக்கிறது!

அவளது மலர் போன்ற கரங்களால் அலை பாய்ந்துகொண்டிருந்த எனது சில கொடிகளைத் தூக்கி, கொம்பின் கணுக்களில் சுற்றிவிட்டாள். அவளது கரத்திலிருக்கும் மென்மை எனக்கும், பிறக்கப் போகும் மலர்க் குழந்தைகளுக்கும் இருக்குமா என்பது எனக்கே சந்தேகமாகி விட்டது!

எனக்கென இட்ட உரத்தைச்சில அனாமதேயங்களான புல், பூண்டுகள் உண்டு, கொழுத்து வளர்ந்து விட்டிருந்தன எனக்கடியில். அந்த அநியாயக்காரப் புல்லுருவிகளை யெல்லாம் 'வெடுக் வெடுக்' கெனப் பிடுங்கி எறிந்தாள் வனஜா! அடடா! என்மீது அவளுக்கு என்ன பாசமிருக்கிறது. அவளுடைய இந்த அன்புக்கு நான் என் ஈரேழு தலைமுறைக்கும் இன்பத்தையளிக்க, சங்கல்பம் செய்து கொண்டேன். ஒரு வேளை அவளுடைய இந்தப் பாசமெல்லாம் என் குழந்தைகளைத் தட்டிக் கொண்டு போகச் செய்யும் சூழ்ச்சியோ! என் குழந்தைகளின் உதவியால் அவளுடைய கணவனை மயக்குவதற்காக இப்போது என்னை இப்படி மயக்குகிறாளோ! சே, என்ன இருந்தாலும் பெண்தானே! அவளையும் அவள் இனத்தையும் அழகு படுத்தத்தானே ஆண்டவன் எங்களை இந்தப் பூலோகத்தில் படைத்திருக்கிறான். பெண்களின் மனதைத் திருப்திப் படுத்துவது தானே இவ்வுலகில் எங்களுக்கிட்ட வேலை! யோகி தன்னைக் கடவுளுக்கு அர்ப்பணித்து விடுகிறான். தியாகியோ தன்னை, தனது நாட்டுக்கும், அதன் மக்களுக்கும் தானம் செய்து விடுகிறான். இதில் மூன்றாவது ரகமாக நாங்கள் பெண்ணினத்துக்கு அர்ப்பணமாக ஆக்கப் பட்டிருக்கிறோம். உலகமே அர்ப்பணத்தில் தானே புதைந்து கிடக்கிறது!

மின்னலைப்போலப் பாய்ந்தோடிய வனஜா ஒரு குடம் தண்ணீரைக் கொண்டுவந்து எனக்கு வார்த்தாள். பகலெல்லாம் கதிரோனின் வெப்பத்தால் கருகிப் போன என் உடல் சஞ்சீவி உட்கொண்டதுபோலத் தளதளத்தது அவள் வார்த்த தண்ணீரால். அவளும் அவளுக்கு வரப் போகும் கணவனும் நான் பெற்றெடுக்கும் மலரும் மணமும் போல இருந்து இன்புற வேண்டுமென்று அவளை வாயார வாழ்த்தினேன்.

இதற்குள் வனஜாவை அவள் அப்பா அழைக்கவே என்னை விட்டு விட்டு ஓடியே விட்டாள். அவள் போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்தேன் நான்.

2

விடியற்காலை மூன்று மணியிருக்கும். பங்களா ஒரே கலகலப்பாக இருந்தது. வழக்கத்துக்கு மாறாக இப்படி அமர்க்களப் பட்டுக் கொண்டிருப்பது எனக்கு அதிசயமாகவே இருந்தது. என் காவலாளனான தோட்டக்காரன் என்னிடம் ஓடி வந்து, என்னுடலுக்கு ஒரு சிறிதும் ஊறு விளைக்காமல், மண்வெட்டியால் என்னை மண்ணோடு பெயர்த்து, ஒரு அழகிய தொட்டியில் வைத்து முன் வாசலின் முகப்பில் அலங்கரித்த ஓர் பீடத்தில் கொண்டு போய் நிறுத்தினான். எனக்கு ஏற்பட்ட இந்த எதிர்பாராத மரியாதையில் அப்படியே சொக்கிப் போய் விட்டேன்.

கலியாண அழைப்பிதழின் அடியில் "தங்கள் வரவை அன்புடன் எதிர் நோக்கும் ...." என்று பிரசுரிக்கிறார்களே அதைப்போல நான் இந்த வீட்டுக்கு வந்துகொண்டிருக்கும் கனதனவான்களை வரவேற்கும் முக்கியஸ்தனாய் விளங்கிக் கொண்டிருந்தேன், அப்போது! இடையிடையே எனக்கு வேதனை தருவது போல எங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் அரட்டைகளான சில விளையாட்டுக் குழந்தைகள் என்னையும் என் இலைகளையும் கிள்ளி நசுக்கி வேடிக்கை செய்து கொண்டிருந்தன. இதை யெல்லாம் சிவனே என்று பொறுத்துக்கொண்டிருந்தேன். நான் அனுபவிக்கும் இந்த வேதனையில் மற்றுமொரு குறை என்

மனதைக் குடைந்தது. வைர இழைப்பும், பட்டுப் புடவைகளும் பளபளக்க ஒய்யாரநடை பழகிக்கொண்டிருந்த சில நாரீமணிகள் என்னை ஏறெடுத்துக்கூடப் பார்க்காமல் அலட்சியமாக அவர்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு போவதைப் பார்த்த எனக்கு, என்னை ஏன் இங்கே கொண்டுவந்து வைத்தான் அந்தத் தோட்டக்காரன் என்றே ஆத்திரம் வந்தது!

என் மடியில் என் மலர்க்குழந்தைகள் தவழ்ந்துகொண்டிருந்தால் அப்போது இந்தச் சொகுசுக்காரிகளெல்லாம், 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு வந்து என்னை வணங்காத குறையில் என் குழந்தைகளைத் தூக்கிக் கொள்ள என்னிடம் வேண்டி நிற்பார்கள். ஆனால் நான் இப்போது வெறுங் கொடியாகவல்லவோ அவர்கள் கண்ணுக்குப் படுகிறேன்! சே, இந்தப் பெண்களே எப்போதும் நன்றியில்லாதவர்கள், கல்யாணமாகாத இந்தக் குட்டிகளிடம் ஒரு பாட்டி வந்து, 'உனக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கு?' என்று கேட்டால் இவர்கள் அதற்கு என்ன பதில் கொடுப்பார்கள்? அப்படித்தானே இன்று நானும் இருக்கிறேன். இதை ஏன் இவர்கள் அறிந்துகொள்ளவில்லை? என் வனஜாவாய் இருந்தால் என்னைப் பார்த்துவிட்டு இப்படி அலட்சியமாகப் போவாளா? ஊஹூம், குண்டுமல்லியும், கொடிமல்லியும் ஒன்றாகிவிடுமா?

ஊரிலே எல்லாம் ஒரு புது மோஸ்தர் கிளம்பி யிருப்பதுபோல எங்கள் பங்களாவிலேயும் இன்று அந்த மோஸ்தர் என் காதைக் கிழித்தது. என்னமோ 'ஒலி பெருக்கி' என்று சொல்லுகிறார்களே, அதைத்தான் குறிப்பிடுகிறேன். கண்ட சினிமாப் பாட்டுகளையெல்லாம் அது ஓலமிட்டுக்கொண்டிருந்தது.

திடீரெனப் பாண்டு வாத்தியங்களும், நாதஸ்வர கோஷமும் கிளம்பி என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. கண்களைத் துடைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தேன்.

கூடத்தில் அமைத்திருந்த மணவறையில் தேவலோகத்துத் திலோத்தமை போல அமர்ந்திருந்தாள் என் அருமை வனஜா. அவள் பக்கத்தில் அர்ச்சுனனைப் போன்ற அழகு படைத்த ஒரு வாலிபன் உட்கார்ந்து மஞ்சள் கயிற்றினால் அவள் கழுத்தைப் பிணைத்தான். இந்தக் கண் கொள்ளாக் காட்சியை உள்ளம் பூரிக்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னிடம் மட்டும் என் மலர்க் குழந்தைகள் இருந்தால் அவைகளை அப்படியே வாரிக் கொண்டுபோய் அவர்களின் தலை மீது பொழிந்துவிட்டு வந்திருப்பேன், என்ன செய்வது? கொடுத்து வைக்காத பாவியாக வல்லவோ நான் இப்போது இருக்கிறேன்!

மூன்று நாட்கள்வரை ஏக தடபுடலாகக் கல்யாண வைபவம் நடந்து முடிந்தது. தோட்டக்காரன் என்னைத் தூக்கிக் கொண்டுபோய், பழைய இடத்திலேயே பதியமிட்டு விட்டான். வனஜாவையும் அவள் கணவனையும் ஒருமுறை பார்க்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தது என் மனம். என்ன இருந்தாலும் அவர்

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள் நாடு, ஸிலோன் & பர்மா	மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

கள் காதல் நாடகத்தை என் எதிரிலுள்ள தோட்டத்தில் வந்து தானே அரங்கேற்றவேண்டும்! அப்போது நான் அவர்களைப் பார்க்காமலா போய்விடுவேன்?

3

அன்றொருநாள் மாலை ஆறுமணியிருக்கும். யாரோ இருவர் பேசும் குரல் கேட்டுச் சடக்கென விழித்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! வனஜாவும் அவள் கணவனும் ஒரு வாளி நிறையத் தண்ணீரைத் தூக்கிக்கொண்டு வந்து எனக்கு வார்த்துவிட்டு என் அருகில் நின்றார்கள். அவர்களது ஜோடிப் பொருத்தத்தைப்பார்த்துப் பார்த்து என் உள்ளம் பூரித்துப் போய்விட்டது. என் மீது இந்தத் தம்பதிகளுக்கு எவ்வளவு வாஞ்சை இருக்கிறது என்று வியந்துகொண்டேன்.

வனஜாவின் கணவன் மெதுவாகப் பேசினான்:

"வனஜா! எங்களூர் முல்லைக் கொடியான இது எவ்வளவு அழகாய் இருக்கிறது பார்த்தாயா?"

"நீங்கள் என்னை மணப்பதற்கு முன்பே இந்தச் செடிவந்து என் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டதே!"



"மொட்டு விடாத செடியாய் இருக்கும் போதே இதன்மீது இப்படி உயிரை விடுகிருய்; இன்னும் அது முல்லை மலரை மலர வைத்துவிட்டால் என்னை அடியோடு மறந்து விடுவா யாக்கும்!"

"அப்படி யெல்லாம் மறக்கமாட்டேன். எனக்கென இந்தச் செடி பெற்றுக் கொடுக்கும் மலர்களை......"

"பறித்து நான்தான் உனது பின்னலில் வைப்பேன் தெரியுமா?" என்று சொல்லிக்கொண்டே செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினுன் அந்தக் காளை.

இந்தக் காட்சியைக் கண்ட எனக்கு என்னவோ போலிருந்தது.

மேற்கு வானம் சிவந்து தென்றலார் வீச ஆரம்பித்துவிட்டதால், மாலைக் கீதே மிழைத்துக் கொண்டே மலருள்ள செடிகளைச் சுற்றிச் சுற்றி வட்டமிட வந்து விட்டன வண்டினங்கள்.

நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதை ஒரு சிறிதும் லட்சியம் செய்யாமல் வனஜாவும் அவள் கணவனும் அவர்களின் இதழ் மலர்களைப் பொருத்தி, தேன் குடிக்கப் புகுந்துவிட்டார்கள்!

இதைப் பார்த்த எனக்கு வெட்கம் தாளமாட்டாமல் மெதுவாகத் தலை குனிந்துகொண்டேன்.

4

மாதங்கள் மூன்று நகர்ந்தன. இப்போதெல்லாம் எனக்குக் காற்றில்கூட அசைய முடிவதில்லை. காரணம் இப்போது நான் பூரண கர்ப்பிணியாய் இருந்தேன். கொடிக்கு நூறு மொட்டுக்களுடன் குலுங்கிக் கொண்டிருந்தேன் நான். நேரம் நெருங்கி விட்டதால் காம்புகளின் பிணைப்பிலிருந்து முட்டிக் கொண்டிருந்தன என் மலர் மொட்டுக்கள். இரவெல்லாம் ஒரே அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தேன். மணத்தின் கனத்தைத் தாளமாட்டாமல் விம்மிக் கொண்டிருந்தன என் முல்லைக் குழந்தைகள்.

பொழுது புலர்ந்தது. சத்தமிடாமல் மலர வைத்து விட்டேன் என் முல்லைக் குழந்தைகளை. என் மலரின் மணத்தைக் கண்டு மற்றச் செடிகளெல்லாம் பொறுமையால் தீய்ந்து கொண்டிருந்தன.

கதிரவன்கூடக் கிழக்கில் முளைந்து விட்டான். ஏனே இன்னும் வனஜா என்னைப் பார்க்க வரவில்லை. அவளிடம் என் குழந்தைகளை எப்போது கொடுக்கப் போகிறேனே என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்.

தேம்பித் தேம்பி அழுங்குரல் கேட்டுத் திடுக்கெனத் திரும்பிப் பார்த்தேன். என் கண்களையே என்னுல் நம்ப முடியவில்லை. சாட்சாத் வனஜாவே அங்கு நின்று கொண்டிருந்தாள். அவள் அழுது கொண்டு இப்படி அலங்கோலமாய் நின்று கொண்டிருப்பதைக் கண்ட எனக்கும் அழுகை பொத்துக் கொண்டு வந்து விட்டது.

என்னைப் பார்த்துப் பார்த்து அவள் அழுது கொண்டேயிருந்தாள். திக்பிரமையினுல் செயலற்று அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

கசங்கிப்போன வெள்ளை நூல் புடவை யொன்றைக் கட்டிக்கொண்டிருந்தாள். அவளது செவ்வாழைத் தண்டைப்போன்ற கரங்களில் கலகலக்கும் வளையல்கள் ஏனே இப்போது இல்லை. கால் விரல்கள் மெட்டியில்லாமல் அவைகள் வெறிச்சென்றிருந்தன. தலைமயிரைப் பின்னலிடாமல் வாரி முடிந்திருந்தாள். அதிலே கடையில் வாங்கிய கதம்ப இதழ் ஒன்றுகூட இருக்கவில்லை. இப்படி அவளை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டுவந்த நான் அவள் கழுத்தைப் ஒரு விநாடி இமைக்காமல் நோக்கினேன். இலை யெல்லாம் உதிர்ந்துபோய் மொட்டையாய் நிற்கும் ஓதிய மரத்தைப் போலக் காட்சியளித்தது அவள் கழுத்து! இந்த அவலக்காட்சியைப் பார்த்த எனக்குத் திடுக்கெனத் தூக்கி வாரிப்போட்டு விட்டது.

வனஜா இன்னும் அழுதுகொண்டு தான் நின்றிருந்தாள். அவளுடைய கன்னங்கள் வீங்கிப் புடைத்துக்கொண்டிருந்தன.

இப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. விடியற்காலம் ஐந்து மணி யிருக்

கும். டாக்டர்களும், நர்ஸுகளும் என்னைத் தாண்டிக்கொண்டு ஓடினார்கள் பங்களாவுக்கு. இது நடந்த அரைமணி நேரத்திற்கெல்லாம் சங்கு - தப்பட்டைகளின் ஒலி மிகக் கோரமாக என் செவிகளில் பாய்ந்து மழுங்கியது!

வனஜா என்னிடம் நெருங்கி வந்தாள். நான் பெற்றெடுத்த மலர்களை அவள் மார்போடணைத்து முகத்தில் ஒற்றிக் கொண்டாள். ஆனால் அவள் என்னிடமுள்ள ஒரு மலரைக்கூடப் பறிக்கவே இல்லை. வெறுமையாய்த் தன் கரங்களால் தன் கொண்டையைத் தடவிப் பார்த்துக் கொண்டாள்! பின்னர், 'ஓ'வெனக்கதறிக் கொண்டே என்னைவிட்டுச் சென்றுவிட்டாள் வனஜா.

என்மீதுள்ள பனித் துளிகளெல்லாம் கீழே கொட்டுவது என் மன வேதனையின் கண்ணீர்ப் புனலாகக் காட்சியளித்தது.

மாலையும் வந்தது. பறிப்பாரற்றுக் கிடந்த என் முல்லைமலர்களெல்லாம் வாடி வதங்கி மண்ணில் உதிர்ந்துபோய்க் கிடந்தன.



GANESH & Co.

(MADRAS), LTD.

Retail Branches

285, China Bazar :: 71, Pondy Bazar T. Nagar,

MADRAS.

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

அத்யாயம் 2

சாயங்காலம் ஆறுமணி. பௌர்ணமி சந்திரன் அவ்வனமெங்கும் தண்ணொளியைப் பரப்பினான். கலகல வென்ற பேச்சுச் சப்தமிருந்தும் காமாக்ஷியின் கானாம்ருதமில்லாததினால் சோபையற்று விளங்கியது அவ்வனக் கோவில். "முருகா, முருகா எனக்கொரு கெதியருள்" என்று கட்டைத் தொண்டையிலும், கீச்சுக் குரலிலுமாக சுருதியில் சேராமல் ஒரு பக்தன் பாடும் சப்தம் பிரதக்ஷிணம் வரும் கிட்டாவின் காதில் விழவே, இரு காதுகளையும் பொத்திக்கொண்டு, "ஹே கிருஷ்ணா, ஹே முருகா, காமாக்ஷியின் கானத்தைக் கேட்டுவிட்டு இந்தக் கானத்தையும் எவ்விதம் பொறுக்கிறீர்களோ? நீங்கள் மிக்க பொறுமைசாலிகளே" என்று முணுமுணுத்த வண்ணம் மறு பக்கம் திரும்பும் சமயம் காமாக்ஷி, லக்ஷ்மணன் என்ற பேச்சுக் காதில் விழவே சற்றே தயங்கியவாறு நின்று விட்டான்.

"ஐயோ, கர்ண கடூரமே! இவனைப் பாடவில்லை யென்று யார் சொன்னார்கள்?" என்றாள் மீனா.

"காமாக்ஷி போய்விட்டாளே யென்று பதிலுக்குப் பாடுகிறான்; உனக்கேன் அலுப்பு" என்றாள் சாலா.

"சனியன் துப்புக்கெட்டு ஓடித்தே. அதனுடைய ராகமும், தொண்டையில் ரவை உருளும் குரலும், சொழட்டி எத்தி இறக்கி அம்பாள்மீது பாடித்தானால் பட்ட மரமும் பால் வடியுமே" என்றாள் காமுப் பாட்டி.

"அந்த அம்பாள் இப்படி ஒருத்தனோடு ஓடிப்போ" என்று சொன்னாள் போலிருக்கு. அவனுக்கு முன்னாடியே ஏதோ சம்சயம் தோணியிருக்கு. அதுதான் கூட்டிக்க மாட்டேன்னு சொல்லிப்பிட்டான். இல்லாட்டா அழகில்லேன்னு தாலி கட்டினப்புறம் சொல்லுவனா, அந்த லக்ஷ்மணனுக்கு ஏன்தான் இப்படி புத்திகெட்டுப் போச்சோ" என்றாள் சேஷியம்மா.

"ஒத்தனோடு ஒத்தி மட்டும் போகவில்லை. மூன்று லம்பாடிகளும்னா சேந்து புறப்பட்டிருக்கிறா. எல்லாத்தையும்விட குழந்தையைக் கூட விட்டுட்டு அந்த லக்ஷ்மியும்னா போயிருக்கு. இது என்ன அதிசயமடி." என்றாள் ஜானகியம்மா.

"தங்கமான உத்யோகத்தை விட்டுட்டுப் போயிருக்கானே: நாலு பேருக்கு ஒத்தன் இரை கொடுக்க முடியுமா? எதுக்காக இப்படிக் கூட்டிண்டு போனான். அவ அழகைப் பாத்து மயங்கினானா? குரங்காட்டமா மூஞ்சியும் முகரக்கட்டையும், ஒண்ணுமே புரியாத மர்மமாகத்தானிருக்கு." என்றாள் காமுப் பாட்டி.

"கொண்ட பெண்டாட்டியும் சம்மதிச்சுக் கூடப் போயிருக்காளே, இதென்ன காலமடி. எப்படி சகிச்சுண்டிருப்பள். ஒண்ணா எல்லாமா சந்தி சிரிச்சுப்புட்டு அந்த மூணும் எவனோடாவது ஓடிவிடும். இவா ரெண்டு பேரும் வந்து சேர்வா. இல்லாட்டா லக்ஷ்மியை மட்டும் அடிச்சு துரத்திடுவா? இதுதான் நடக்கப்போற காரியம்." என்றாள் காவேரியம்மா.

"ஏன் இப்படி எல்லோரும் ஒரேயடியாகத் தூஷணையில் இறங்குகிறீர்கள்? எப்பொழுது மனைவியும் கூடப் போனாளோ, அது விஷயம் சந்தேகத்திற்கிடமின்றி நல்ல காரியமாகத்தானே இருக்கவேண்டும். புருஷன் பிற ஸ்திரீயுடன் அன்பாகப் பேசுவதைக் கூடப் பெண்கள் பொறுப்பது என்பது அவ்வளவு லகுவான விஷயமல்ல என்பது இங்குள்ள எல்லோரும் அறிந்த விஷயம்தானே. பாவம்! 'அப்பெண் புருஷனால் கைவிடப்பட்டவள். இன்னுமிருவர் புருஷனை இழந்தே போனவர்கள். பொருளோ பூஜ்யம். இவ்விடமிருந்தால் அவர்களின் நிலைமை, ஓயாத வேலை செய்து உதாசீன வார்த்தைகள் கேட்டுக்கொண்டு துயர மிகுதியில் வாழ்க்கையை ஓட்ட வேண்டும். ஹோட்டலில் அரைக்கும் நிலைமைகூட ஏற்பட்டு விடும். வடக்கே சென்றதில் கல்வியறிவுபெற வசதியுண்டு. கௌரவமான முறையில் பிழைக்க வழி

தேடிக் கொள்ளலாம். ஏன், இவ்விடமே அதுபோல் செய்து கொள்ளுவதற்கென்ன என்று நீங்கள் கேட்கலாம். இவ்விடத்தில் படிக்க வசதி ஏது? மேலும் லக்ஷ்மணன் இரங்கி, கல்வி கற்க ஏற்பாடு செய்தாலும் அவர்களை வீடு உலகம் யாவும் முகத்தின் முன்பே தூற்றுவார்கள் என்பதற்கு இவ்விடம் சற்றுமுன் நடந்த சம்பாஷணையே உதாரணம். அதனால் நம்மவர் என்றவர்கள் இல்லாத இடமானால் மனம் விட்டு எதையும் செய்ய வசதியுண்டு. ஏன் நான்கூட அவ்விடம் சென்ற பின்புதானே நன்றாகப் படிக்கவும் எழுதவும் கற்க முடிந்தது. அதனால் எனக்கு எவ்வளவு நன்மை கிடைத்திருக்கிறது. லக்ஷ்மணனும் லக்ஷ்மியும் சிறந்த தியாகி. லக்ஷ்யத்தை நிறைவேற்ற உறுதி கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களைப் போற்றுவதைவிட்டுத் தூற்றுகிறீர்களே'' என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தாள், கல்கத்தாவிலிருந்து லீவிற்காக வந்த தம்பதிகளில் ஒருத்தியான ஸ்ரீமதி விசாலாக்ஷி.

''அம்மா நீ படித்த பெண்ணா. சீமையிலிருந்து குதிச்சவள். நாட்டு வழக்கமே கண்டறியாதவள். இதுவும் பேசுவே இன்னமும் பேசுவே. பூர்வ ஜன்மத்தில் செய்த கர்மாவை அனுபவிச்சுத்தானே தீர்க்கணும். அவள் வாழா வெட்டின்னு பிரமன் எழுதிவிட்டான். அதை மாத்த முடியுமா? வர ஜன்மாவானும் நல்லதாக இருக்கணும்னு கிருஷ்ணா, ராமான்னு வீட்டு வேலையே செய்துண்டு அடக்க வொடுக்கமா காலத்தை ஓட்டினவா பொம்பளே. படிச்சான்னா, கிழிச்சான்னா?, கடக்கற தாயாரைப் போட்டுட்டு அடுத்தவீட்டுக்காரனோடு திருச்செந்தூருக்குப் போறேன்னு சொல்லிட்டு, கம்பியை நீட்டினா அவளை எப்படியம்மா பத்தினின்னு சொல்ல முடியும்? அவபோயி பத்துநாளாயிடுத்து. பாவம்! லக்ஷ்மணன் அண்ணா ஜானகிராமன் மூலை மூலையா தந்தியடிச்சு, பக்கம் பக்கமா ஆளையனுப்பித் தேடறான். ஒரு பிரயோஜனத்தையும் காணலை. ஒரு மாஸம் கழித்துப் போற உசிரு இப்பவே போயிடும் போலே தவிக்கிறா காமாக்ஷியின் அம்மா. நீ என்னமோ நியாயம்பேச வந்துவிட்டாய்'' என்றாள் சேஷியம்மா.

''அம்மாவிற்குப் பிள்ளையிருக்கிறான் பார்த்துக்கொள்ளுகிறான். அலை ஓய்ந்து சமுத்ர ஸ்னானம் செய்வது என்பது முடியுமா? அவள் செய்தது சரிதான். பெண் அடிமையில்லையென்பதைக் காட்டிவிட்டாள். அவள் ஏதாவதொரு தொழிலில் முன்னேறி, பத்து வருஷம் கழித்தாவது வருவாள். அவளது பணத்திற்கு மதிப்புக் கொடுத்து, அவளைத் தூஷிக்கும் இதே இடத்தில் அவளுக்குப் பூஷணை நடக்கும்! யாவரும் பார்ப்பீர்கள்'' என்றாள் விசாலாக்ஷி.

''பூஷிப்பா? வாருகல் இருந்தா எடுத்துச் சாத்துவா'' என்று சொல்லும் பொழுதே அவ்விடம் வந்த கிட்டாவின் தாயார் கங்கம்மா ''யாருக்கு வெண்சாமரப் பிரயோகம்?'' என்றாள் சேஷியம்மாளை நோக்கி.

''பெண்டுகளுக்குண்டான தர்மத்தைவிட்டு, கண்டவனோடு யார் ஓடினாளோ அவாளுக்கு''

''கையிலே அகப்பட்டான்னா செய்வேள்'' என்றாள் கங்கம்மா.

''ஏண்டி, உன் பிள்ளையும், லக்ஷ்மணனும் ஒரு கட்டையிலே போவாளே, அவனுக்குக் கூட போற இடத்தைச் சொல்லலையா?'' என்று கேட்டாள் சேஷியம்மா.

(முதல்நாள், லக்ஷ்மணனிடமிருந்து வந்த கடிதத்தை மறைக்கும்பொழுது பார்த்த அவன் மனைவி மாமியாரிடம் சொல்ல, தாயார் பிள்ளையைக் கேட்க, இல்லையென்று மறுக்க, தாயும் பிள்ளையும் சற்றுநேரம் வாதாட, கோபம் வந்தபிள்ளை, 'ஆமாம்எனக்குத் தெரியும். நான் சொல்லமாட்டேன். என்னவேண்டுமானாலும் செய்துக்கோ'' என்று சொல்லிவிட்டான். பிற்பாடு தான் கோபத்தில் உளறிவிட்டதை எண்ணி உதட்டைக்கடித்தவண்ணம், ''அப்படியில்லை, வேறு சிநேகிதன் எழுதியிருக்கிறான்'' என்று சமாதானம் செய்தான், இதனால் இந்தக் கேள்வி எழுந்ததும், தன் தாயார் எதை உளறிவிடுவாளோ என்று பயந்தவாறு அதை எவ்விதத்தில் மறைக்கலாம் என்று யோசிக்கும் சமயம்.)

''இது நல்ல கேள்வி. இரண்டு பேரும் சிநேகமாயிருந்தா அவன் ஓடிப்போற இடத்தை சொல்லிட்டுப்போகணும்னா சாஸ்த்ரமா? அது அஸத்து. என் பிள்ளை அந்த தப்பு வழிக்கெல்லாம் போக மாட்டான். எந்தச் சனியன் எங்கே கெட்டலைகிறது என்ற கவலைதானா அவனுக்கு. அவன் ஒரு பாவமுமறியான். அன்னிக்கு அவன் ஊரிலே கூட இல்லை. அவனுக்கென்ன தெரியும் குழந்தை'' என்றாள் கங்கம்மா.

''ஆஹா, தாயன்பு எத்தகையது!'' என்று மகிழ்ந்தது கிட்டாவின் உள்ளம். ''தான் எவ்விதம் குறைவாகப் பேசினாலும் பிறர் முன் தாழ்மையாகப் பேச இடமளிக்காது போலும் தாயுள்ளம்'' என்ற சிந்தனையைத் திருப்பியது மறுபடியும் அவர்களின் பேச்சு.

''இதென்னத்திற்கு நமக்கு. அவா போயி பத்து நாளும் ஓடிப் போச்சு. இன்னமே

வருஷமும் ஓடிப் போகும். புண்ணியமா புருஷார்த்தமா? கோவில்லே வெச்சு இந்த அஸத்துக்களைப்பத்தி ஏன் பேசணும்? அவா பாபத்திலே நமக்கும் பங்குண்டு அதைப்பத்திப்பேசினா'' என்று ஜபம் செய்து கொண்டிருந்த ருத்ராக்ஷ மாலையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள் காமுப் பாட்டி.

"அது தான் சரியான பேச்சு பாட்டி! சும்மா அவர்களைப்பற்றிப் பேசினால் நமக்கு என்னகிடைக்கப் போகிறது? காமாக்ஷியைக் கூட்டிக்க மாட்டேன் என்று சொன்னானே, இப்படி எல்லோருமாகக்கூடி அவன் முன் பேசிப் பேசி அவளைக் கூட்டிக் கொள்ளும்படி செய்திருந்தாலும் உபயோகமுண்டு, புண்ணியமுண்டு. அந்த அநியாயக்காரனைக் கேட்பாரில்லாமல் தானே அவ்வளவு துணிகரமாகச் சொன்னான். அவனைத் திட்டுவார் ஒருவருமில்லையே. அவள் இப்படிப் போனதற்கு அவன் தானே மூலகாரணம். அவனையேன் திட்டக் கூடாது? அவன் வேறு கல்யாணம் செய்து கொண்டதற்கு இங்குள்ளவர்களில் பலபேர் சென்று வந்தவர்கள் தானே? அது நியாயம் என்று தானே நினைத்தீர்கள்? இதுவும் நியாயம்தான்'' என்றாள் விசாலாக்ஷி.

'இதன் சங்கதி அவனுக்குத் தெரிந்திருக்கிறது. நாலு குடிக்கு நடுவிலிருந்தால் சங்கதி வெளிவராமலிருக்க முடியுமா? அது தான் கூட்டிக்க மாட்டேன்னா சொல்லியிருக்கிறான். பொம்பளைக்கு இந்தத் துணிச்சலானால் ஆம்பிளை கல்யாணம் செய்து கொண்டதில் என்ன குத்தம்?'' என்றாள் சேஷியம்மா.

"அவன் கல்யாணம் செய்து கொண்ட பின்பு தானே அவள் போனாள். கல்யாணம்



செய்வதற்கு முன் அவள் நடத்தையைத் தக்க ருஜுவுடன் நிரூபித்துவிட்டுச் செய்ய வேண்டும். அது செய்யாததினால் அவன் தான் குற்றவாளி. அவன் தான் தூர்த்தன், அவன் தான் மஹா பாபி" என்றாள் விசாலாக்ஷி.

அவள் படபடத்த சொற்களைத் தொடர்ந்து மணியோசை கேட்கவே, "போரும்டியம்மா பேச்சை வளத்தாதேயுங்கள். தீபாராதனை ஆகப் போகிறது. போகலாம் வாருங்கள்" என்று நடந்தாள் கங்கம்மா. விசாலாக்ஷியின் பேச்சிற்கும் இவர்களின் பேச்சிற்கும் உள்ள வித்யாசம்? பெண்களுக்குக் கல்வி எவ்வளவு முக்யம் என்றது கிட்டாவின் மனம்................

நாள்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருஷங்களாகி, அவ்வருஷங்களும் மூன்று ஓடி மறைந்து விட்டன. காமாக்ஷியைப்பற்றின வம்புப் பேச்சுக்களும் அடியுடன் மறைந்து விட்டதென்றே சொல்லலாம். முரளீதரன்கூடப் பெற்றோரை நினைக்காமல் கவலையில்லாமல் படிக்கிறானென்றால் மற்றவரைப் பற்றிச் சொல்லுவது அனாவசியம்.

மூன்று வருஷத்திற்குப் பிறகு அன்று வனக் கோவிலில் மறுபடியும் காமாக்ஷியின் பெயர் அடிபடலாயிற்று.

"ஏண்டி, கங்கா, இன்னிக்கி உங்காத்திற்கு லக்ஷ்மி வந்திருந்தாளாமே, எதற்கு வந்தாள்? என்ன சொன்னா? நான் சொன்னபடி இவளை விரட்டி விட்டார்களா?" என்றாள் சேஷியம்மா. அடுத்த க்ஷணம் தக்ஷிணாமூர்த்தியின் சன்னிதியில் ஒரு கமிட்டி கூட்டப்பட்டது.

"அதேன் கேக்கறே, பழைய லக்ஷ்மியாகவா இருக்கா. எட்டு மணியிருக்கும், வாசல்லே வண்டி வந்து நின்றது. கூடத்திலே ஜபம் பண்ணிண்டிருந்ததினால் எட்டிப் பார்த்தேன். லக்ஷ்மி இறங்கி வந்தா. உடம்பு நன்னாத்தானிருந்தது. ஆனால் பொன் தோய்த்த மணி கூட மேலே கிடையாது. காதிலே கடுக்கனாட்டமா ஒரு தோடு, மூக்கிலே ஒத்த மூக்கத்தி, லாடச்சியாட்டமா கை நிறைய கண்ணாடி வளை, இது தான் நகை. 'வாடியம்மா'ன்னு கூப்பிட்டேன் சேவிச்சா. எல்லோரும் ஸௌக்யமா?" என்றேன்.

"எல்லோரும் ஸௌக்யமாகவே இருக்கிறோம்" என்றாள்.

பாத்ருடுவின்
பால சஞ்சீவினி (Regd.)
(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)
குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்
58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்
டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.
கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.
திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

"நீ மட்டும் எங்கேவந்தாய்?" என்றேன்.

பிராவிடன்ட் பண்டு ரூபாயை வாங்குவதற்காக வந்தேன்" என்ருள்.

"அவன் வராமல் எப்படி கொடுப்பார்கள்?" என்றேன்.

"எனக்குப் பவர் கொடுத்திருக்கிருர் வாங்க முடியும்" என்ருள்.

"ஏன் அவனும் வந்து வாங்கிண்டு, குழந்தை அம்மா எல்லோரையும் பார்த்துவிட்டுப் பேகேப் படாதோ? அப்படி லீவு இல்லாத உத்யோகம் பார்க்கிருனு என்ன?" என்றேன்.

"ஏதோ உத்யோகம் பார்க்கிருர். அவர் வருவதற்குச் சரிப்படவில்லை. அவ்வளவு தான்" என்ருள்.

"ஏண்டியம்மா, நான் சொல்றென்னு வருத்தப்படாதே. காமாக்ஷியும் அவனும் அடிக்கும் கூத்தை நீ எவ்விதம் சஹித்துக்கொண்டிருக்கிருய்? அவளைக் கூட்டிண்டு போனது அழகா, தர்மமா?" என்றேன். அந்தச்சமயம் என் நாட்டுப்பெண் காப்பியைக் கொண்டு வந்து அவள் முன்னலே வச்சா. எடுத்துப் பாதி சாப்பிட்டவள் என் சொல்லைக் கேட்டதும்,

"இதைப் பாருங்கள் மாமி! அவரைப்பற்றி அனாவசியமாகப் பேசாதேயுங்கள்". என்ருள்

"ஏண்டியம்மா நடப்பதைச் சொன்னு கோபம் பொத்துண்டு வந்து என்ன செய்வது?" என்றேன்.

"என் புருஷன் பரநாரி சகோதரர். அதை நானும் பகவானும் அறிவோம். அவரைப் பற்றித் தூஷித்தீர்களானுல் நாக்கு அழுகியே போய்விடும்" என்ருள்.

"அடேயப்பா! அவ்வளவு கர்வம் வாண்டாண்டியம்மா, இப்பொ உன்னை அனுப்பினதே அவர்கள் உல்லாசமாக இருப்பதற்குத் தானே. பாத்துண்டேயிரு. உன் நகை யெல்லாம் போனபிறகு உன்னையும் அடித்து விரட்டிவிடுவா, அதுதான் நடக்கப்போற விஷயம். அவனை எப்படியாவது கூட்டிண்டு வந்தால்தான் நல்லது. அவன் வரமாட்டேன்னு எக்கேடு கெட்டாலும் கடைசியில் உன்காலுக்குத்தான் வருவான் என்பது நிச்சயம். தேமேன்னு நீபாட்டிற்கும் உன் குழந்தையுடன் உன் மச்சினன் வீட்டில் காலம் கழி. பிள்ளை பெரியவனுனு உனக்கு வெடியும். நான் சொல்லறதைப் புத்தியாகக்கேளு. அடித்து வெரட்டும் வரைக்கும் வச்சுக்காதேன்னே"

"அவளுக்கு வந்த கோபத்தை பார்க்கணுமே. மாமி அடித்து விரட்டினுல் உங்கள் வீட்டிற்கு வரவில்லை, சாப்பிடுவதற்கு. அவரைப்பற்றி என் காது கேட்கத் தூஷிக்க வேண்டாம். அவர் உங்கள் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு ஆபிஸிற்குப் போகும்படி சொன்னுர். அதனுல் இவ்விடம் வந்தேன். வந்ததற்குச் சரியான தண்டனை. தன்கையே தனக்கு உதவி. எப்படியாகிலும் வாங்கிக் கொள்கிறேன்" என்று டக்குன்னு பாதி காப்பியுடன் தமிழரைக் கீழே வைத்துவிட்டு "நான் வருகிறேன்" என்று எழுந்துவிட்டாள்.

"அந்தச் சமயம் வந்த கிட்டா என்னம்மா வந்தவளைத் தாறுமாறுமாகக் கேள்விகளைக் கேட்கிருய்? மன்னி வருத்தப்படாதே. நானும் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். நீயும் சாப்பிட்டுவிட்டுப் பிறகு போகலாம்" என்ருன்.

"எனக்குச் சாப்பாடு வேண்டாம். நான் ஆஸ்பத்ரி வராந்தாவில் உட்கார்ந்திருக்கிறேன். நீங்கள் சாப்பிட்டுவிட்டு வாருங்கள்" என்று சொல்லிவிட்டு விடுவிடுன்னு போயிட்டா. கிட்டா எதிரில்கூட நிக்காத லக்ஷ்மி என்ன தைரியமா பேசினு தெரியுமா? வடக்கே போனதற்கு நல்ல துணிச்சல் வந்திருக்கிறது." என்று முடித்தாள் கங்கம்மா.

"அப்புறம் வரலையா?" என்ருள் காவேரியம்மா,

"நாட்டுப்பெண்ணைப் போய் கூட்டிண்டு வான்னுன் பிள்ளை. நான் அந்த அஸத்துப் போனுல் போகட்டும், கூப்பிட வேண்டாம்னு சொல்லிப்பிட்டேன்."

"போனவா எங்கிருக்கா என்னபண்ணருன்னு ஒண்ணும் கேக்காம விட்டுட்டேளா?" என்ருள் ஜானகியம்மா.

"சுக்கலாம் பரதரம் குட்டச்சே கண்ணிலே குட்டியாயிடுத்தே. அவளை வெட்டினுலும் சொல்லமாட்டா. அப்படன்னு பேசினு."

"அப்புறம் கிட்டா போனுனு?" என்ருள் சேஷியம்மா.

"சாப்பிட்டுப் போனுன். அவளைக் கூட்டிண்டு போய் பணத்தை வாங்கிக் கொடுத்துட்டு, அவள் குழந்தையைப் பார்க்கவும் கூட்டிண்டு போயிட்டு, நாளைக்குத்தான் வருவேன்னு சொல்லிவிட்டுப் போனுன்." என்ருள் கங்கம்மா.

"அப்பொ அவன் வந்தால் அவா எங்கிருக்கான்னு தெரியும்" என்ருள் காவேரியம்மா.

"அவனு சொல்லப் போருன். அப்படி சொப்பனங்கூடக் காண முடியாது" என்ருள் கங்கம்மா.

"எது எக்கேடு கெட்டால் நமக்கென்ன? கிருஷ்ணு ராமன்னுலும் புண்யமுண்டு. தீபாராதனைக்கு மணியடிக்கு முன் போவோம் வாருங்கள்" என்று ருத்ராக்ஷத்தை கண்களில் ஒற்றிக்கொண்டு எழுந்தாள் காமுப் பாட்டி

* * *

"கில கலவென ஜன சந்தடியினுலும், டீ, காபி, பழம், வெற்றிலை பாக்கு, பீடி" என்ற கூச்சலினுலும் நிறைந்த ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஒரு தனியிடத்தில் நின்றுகொண்டு பேச்சின் சுவாரஸ்யத்தில் ஆழ்ந்திருந்த கிட்டாவையும் லக்ஷ்மியையும், கூ! கூ! வென்ற ரயிலின் சப்தம் ஸ்டேஷனின் நினைவிற்கு வரச் செய்தது.

இரண்டாம் வகுப்பு வண்டி ஒன்றில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். அதில் ஒரு ஐரோப்பிய தம்பதிகள்தான் உட்கார்ந்திருந்தார்கள்.

"எதற்காக இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கினீர்கள்? இது அனுவசியச் செலவு" என்ருள் லக்ஷ்மி.

"நம்ம மனிதர்கள் கண்களுக்குத் தப்பவும், லக்ஷ்மணன் விஷயங்களைக் கேட்கவுமே வாங்கினேன். அது போகட்டும், பணத்தை ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டாயா?" என்ருன் கிட்டா.

"எல்லாவற்றையும் பர்ஸில் வைத்து மடியில் வைத்துக்கொண்டிருக்கிறேன். கவலைப் படாதேயுங்கள். ஜாக்கிரதையாக இருக்கும். இது எனக்குப் பழக்கம்தான்"

"சந்தோஷம். சரி, உன் மைத்துனன் வீட்டிற்குப் போகமாட்டேனென்கிருய். குழந்தையை எப்படிப் பார்ப்பது?"

"அவர்களுக்குப் பயந்துகொண்டு வரமாட்டேனென்று சொல்லவில்லை. குழந்தை என்னைப் பார்த்துவிட்டால், பிறகு விடமாட்டான். அப்பொழுது என் மனமும் கலங்கிவிடும். நிலைமை சங்கடமாகிவிடும். அதனுல் தூர இருந்து பார்த்துவிட்டுப் போனுல் போதும்"

"அப்படியானுல் ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமிலேயே நீ உட்கார்ந்து கொண்டிரு. நான் எப்பொழுதும் பார்க்கப் போவதுபோல் போய், அவர்களிடம் இப்படிக் கடைக்குக் கூட்டிண்டு போயிட்டு வறேன்னு சொல்லிவிட்டு, இவ்விடம் அழைத்துக்கொண்டு வந்து வராந்தாவில் அவனுடன் பேச்சுக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். கண்ணுல் பார், காதால் கேள்.

"என்ன செய்வது வேறு வழி தோன்றவில்லை. என்ன கஷ்டம்? ஆனுல் இது சுயங்கிருதானர்த்தம். பெருமையான உத்யோகத்தையும் அருமையான குழந்தையையும் தியாகம் பண்ணிவிட்டு, வீண் பழிகளை ஏற்றுக்கொண்டு. "லக்ஷ்யம்" என்ற பெயரால் இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவிக்கிறீர்கள். சென்றதைப் பற்றிப் பேசிப் பயன்? போகட்டும். புறப்பட்டதிலிருந்து விஷயத்தைச் சொல்லு."

"அன்று உங்களிடம் சொன்னபடிதான் அவர்கள் மூவரும் சென்னையில் தங்கியிருந்தார்கள். நாங்கள் போன பிறகு யாவருமாகக் கோபாலம் சென்ருேம்"

"குழந்தையைவிட மனம் எப்படித் துணிந்ததோ?"

"அவரின் லக்ஷ்யம். அதைச் சிந்தனை செய்துகொண்டே, பாசவலையினின்றும் விடுபட முடிந்தது. அவரின் சிநேகிதர் ஒருவர் சென்னையில் ஆபத்தான நிலைமையிலிருப்பதாகவும், அவர் மனைவிக்கு ஆதரவாக ஒருவருமில்லாத நிலைமையில் எங்களிருவருடைய உதவி அவசியமாதலால், அந்த வியாதிக்காரரருகில் குழந்தையைக் கொண்டுபோவது சரியல்லவாதலால் நான்கு நாளைக்கு அவ்விடமிருக்கட்டு மென்று அம்மாவினிடம் சொல்லிவிட்டுச் சாவதானமாகப் புறப்பட்டோம். தூங்கும் குழந்தையை விட்டுப் பிரியும்பொழுது இருவருக்கும் மிகவும் கஷ்டமாகத்தானிருந்தது. அவனது பிற்கால நன்மையை உத்தேசித்து. அப்படிப்போக வேண்டி வந்தது. இவர் கடிதம் போட்டிருந்தார் போலிருக்கிறது. அந்த நண்பர் சுதர்மா ஸ்டேஷனுக்கே வந்திருந்தார். கோவிலுக்குப் பக்கத்தில் எங்களுக்காக ஒரு சிறிய வீடு பார்த்து வைத்திருந்தார். போய் ஒருவாரம் வரையில் சமைப்பது சாப்பிடுவது ஊரைச் சுற்றுவது இப்படியாகக் கழித்தோம். அப்படிச் சுற்றும் காலத்திலேயே காமாக்ஷியின் குணம் சுதர்மாவிற்குப் பிடித்துவிட்டது. பிறகு ஒரு நல்ல தினத்தில் காமாக்ஷிக்கு வீணை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். இவர், எங்கள் நாலுபேர்களுக்கும், இங்கிலீஷும் சம்ஸ்க்ருதமும் சொல்லிக் கொடுத்துவந்தார். குசவன் பாத்திரங்களை வாங்கி வைத்துக்கொண்டு, நான், மீனுக்ஷி, பார்வதி மூன்று பேருமாக வீட்டு வேலைகளைக் கவனிப்போம். காமாக்ஷிக்குப் பாட்டுச் சொல்லிக்க, படிப்புச் சொல்லிக்க, சொல்லிண்டதைப் பாடம் பண்ண, இதற்கே பொழுது போதாது. மூன்று மாதம்வரை கையில் கொண்டுபோன பணத்தை வைத்துக்கொண்டு காலம் கழித்தோம். நாலாவது மாதம் வரும்பொழுது

ஏதாவது நகையை விற்றால்தான் ஐந்துபேர்களின் வயிறு காயாமலிருக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. காமாக்ஷியின் ஒரே சங்கிலியைக் கொடுக்க முன்வந்தாளவள். என்னிடம் மூன்றுவட மிருப்பதினால் அதில் ஒன்றைக் கொடுப்பதாக நான் சொன்னேன். நீண்டநேர விவாதத்திற்குப் பின் என்னுடைய ஒரு வடம் சங்கிலி காசுக்கடையில் சரண் புகுந்தது.

"அந்தச் சமயத்தில் அவ்வூரில் உதர நிமித்தம் குடிவந்து எண்ணி இருபத்து ஐந்து பிள்ளைகளை வைத்து, தமிழ்ப் பள்ளிக்கூடம் நடத்திவந்தார் காமேச சர்மா என்பவர். நாங்கள் சென்ற சமயம் ஐம்பது பிள்ளைகளிருந்தார்கள். சுதர்மா மூலமாக அவருடைய நட்புக் கிடைத்தது. நகைகளை விற்கத் தொடங்கும் சமயம் அவர் தமது திண்ணைப் பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கப் பிரியப்பட்டால் 50 ரூ சம்பளம் தருவதாகச் சொன்னார். தெய்வமே நேரில் வந்து அவ்வுதவி செய்வதுபோலிருந்தது அந்தச் சமயம்"

"200 ரூ. சம்பளத்தை உதறி யெறிந்துவிட்டு, 50 ரூ. தெய்வ உதவியாகிவிட்டது. கேட்டால் தியாகம் என்ற ஒரே பதில். போகட்டும் மேலே சொல்லுங்கள்."

"அத்துடன் ஒரு பணக்காரன் வீட்டுப் பையனுக்குச் சம்ஸ்க்ருதம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்ததில் அதில் 25 ரூ கிடைத்தது. சுதர்மா இலவசமாக வீணை சொல்லிக் கொடுத்ததினால் ஏதோ மானமாகக் காலக்ஷேபம் பண்ண முடிகிறது."

"இவையெல்லாம் சரி. காமாக்ஷியின் முன்னேற்றம் எந்த மட்டிலிருக்கிறது? மீனாக்ஷி, பார்வதி இருவரும் என்ன செய்கிறார்கள்?"

"மீனாக்ஷியும் பார்வதியும் சமஸ்க்ருதத்தை மிகச் சிரத்தையுடன் கற்றுக்கொண்டதினால் சாதாரண சுலோகங்களுக்கு அர்த்தம் சொல்லும் நிலைமைக்கு வந்து விட்டார்கள். ஐந்தாங் கிளாஸ் வரை குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கவும் முடியும். தற்சமயம் ஆறு மாதமாக, அவ்வூரில் அஞ்சலி தேவி யென்பவள் அனாதை ஆச்ரமம் ஒன்று நடத்தி வருகிறாள். நல்ல தைரியசாலி. ஊரிலுள்ளவர்கள், அவளின் பந்துக்கள் யாவரும் அச்சமின்றி நாலு இடங்களுக்குப் போய் வருவதை

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

பற்றித் தாறு மாறுகப் பேசுகிறார்கள் என்பதை லக்ஷ்யம் செய்யாமல் ‘மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்’...கருமமே கண்ணாயினர் என்றபடி அனாதரவான குழந்தைகளையும். ஒருஆதரவு மின்றி சமுகத்தில் இடமில்லாமல் தத்தளித்து, எந்த விதத்திலாவது ஜீவனம் நடந்தால் போதுமென்று அலையும் அனாதைப் பெண்களையும், ஜாதி மத பேதமின்றி, யார் எவர் என்று கேள்வி கேட்காமல், எவ்வித ஆக்ஷேபனையும் சொல்லாமல் சேர்த்து வைத்துக் கொண்டு ஆதரிக்கிறாள். சாப்பாடு போட்டு, துணி கொடுத்து, வயது மீறினவர்களைக் குழந்தைகளை பராமரிக்கவும், படிப்போ கைவேலையோ வருபவர்களுக்கு அந்தத் துறைகளில் முன்னேறும்படியும் உதவி செய்து வருகிறாள். நான் பார்த்த மட்டில் ஏழெட்டுப் பெண்கள், அவ்வாசிரமத்தில் சிலரும் வெளியிடங்களில் சிலரும் வேலை பார்த்து வருகின்றனர். நன்றாகப் படிக்கக் கூடியவர்களை, சில தனவான்களின் உதவி பெற்று B.A. M.A. வரை படிக்க ஏற்பாடுகள் செய்கிறார்கள். நாற்பது ஐம்பது வயதானவர்கள் கூட வந்தால், ஆசிரமத்திற்கு, வற்றல் வடாம் அப்பளாம் இடவும், சமையல் வேலைகளில் உதவி செய்யவும் ஏற்பாடு செய்திருக்கிறாள். ஏன்? அறுபது எழுபது வயதான கிழவிகளைக் கூட வேண்டாம் என்று சொல்லுவதில்லை. அவர்களுக்குச் சாப்பாடு, துணி போக, மாதம் ஐந்து ரூபாய் கைச்செலவிற்கென்று கொடுக்கிறார்கள். சிறு குழந்தைகளைத் தாலாட்டித் தூங்கவைக்கவும், அவர்களால் இயன்றவேலையைச்செய்யவும் வசதியளித்திருக்கிறாள். அந்த ஆச்ரமத்தில் ஆறுமாதமாகப் பார்வதி குழந்தைகளுக்குச் சம்ஸ்க்ருத பாடம் நடத்துவதுடன் சப்வார்டனாகவும் வேலை பார்த்துக்கொண்டு ஆச்ரமத்திலேயே இருந்து வருகிறாள். மீனாக்ஷி ஐந்து கிளாஸ் வரை சம்ஸ்க்ருதம் போதிக்கும் ஆசிரியையாக ரூ 20 சம்பளத்திற்கு வேலை பார்த்து வருகிறாள். ஆச்ரமத்துடனிருக்காமல் வீட்டிலிருந்தே போய் வருகிறாள். அது மட்டுமா, காமாக்ஷிக்கும் பரத நாட்டியம் கற்பித்தாள், அஞ்சலி தேவி. இந்த வருஷம் வருஷாந்தரக் கொண்டாட்டத்தின் பொழுது காமாக்ஷி அதியற்புதமாகப் பரத நாட்டியமாடினாள்........" என்று முடிக்குமுன்,

"என்ன? என்ன? காமாக்ஷி பரத நாட்டியமாடினாளா? எப்படித் தேகத்தைத் தூக்கிக் கொண்டு ஆடினாள். பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்குமே" என்றான் கிட்டா.

"என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? அவள் அப்படி விகாரமான பருமனா? இரட்டைநாடி சரீரம். கடைந்தெடுத்தாற்போல, கையும் காலும், பரத நாட்டிய உடையில் மேடையில் வந்து நின்ற பொழுது தேவியாட்டமா இருந்தது. நீங்கள் நேரில் பார்த்துவிட்டால் இப்படிச் சொல்ல மாட்டீர்கள். அவள் அசாதாரணப் பிறவி யென்று தான் சொல்ல வேண்டும்."

"அசாதாரணப் பிறவி யென்பதில் சந்தேகமா என்ன? ஒரு குடும்பமே அவள் முன்னேற்றத்திற்கு அர்ப்பணமாகி யிருக்கிறதிலேயே தெரியவில்லையா? அது போகட்டும்; ஏதோ பிரவர்த்தியில் இறங்கி முன்னேறுவாள் என்பதற்கான விஷயம் ஒன்றையும் காணோம். வீணை வாசித்துக் கொண்டு, நாட்டிய மாடிக் கொண்டிருந்தால் போதுமா?"

"பிரவர்த்திக்குரிய மார்க்கந்தானே இவைகள்."

"சரி. அப்படியே இருக்கட்டும். அந்த அஞ்சலி தேவி விதவையா? கன்யாப் பெண்ணா? குடும்பம் நடத்துபவளா?

"பெண்கள் எவ்வளவு கற்றாலும், குடும்பப் பாரத்தை ஏற்பது தான் ஸ்திரீ தர்மம்" என்பது அவளின் கொள்கை. புருஷனும் பெண்ஜாதியுமாகவே எல்லாவற்றையும் நடத்தி வருகிறார்கள். ஒரு குழந்தையுமிருக்கிறது. பார்ப்பதற்கு யாவும் நன்றாகவே அமைந்திருக்கின்றன, ஆனால், ஜாதி மத பேதமின்றி நடந்துவருவதினால் அவள் ஜாதியார் அவர்களை விலக்கி வைத்திருக்கிறார்கள். விசேஷங்களுக்குப் போனாலும் இவர்களைத் தனியாக உட்கார வைத்துத்தான் சாப்பாடு போடுவார்களாம். தகப்பனார் சொத்தில் பாகங் கிடையாது என்றுகூடச் சொல்லிவிட்டார்களாம். திடீரென்று ஆச்ரமத்தை எப்படி மூடுவது? என்ன செய்வது?" என்று கலங்கும் சமயம் எதிர் பாராத விதம் லாட்டரி சீட்டுக் கட்டியிருந்ததில் ஐம்பதினாயிரம் ரூபாய் அதிருஷ்டப் பிரைசாகக் கிடைத்ததாம். அதை வைத்துக்கொண்டு நடத்தலானார்களாம். பிறகு, ஒவ்வொருவராக நன்கொடை கொடுப்பதையெல்லாம் சேர்த்து வந்ததில் தற்சமயம் மூல தனத்திலிருந்து கிடைக்கும் வட்டி ரூபாயே மாதம் ஏழாயிரம் கிடைக்கிறதாம். பகவான் பணத்தைக் கொடுத்தாலும் அதை இம்மாதிரி ஓர் நல்ல வழியில் செலவழிக்கப் புத்தி தோன்றவேண்டாமா, ஆச்ரமத்துக் கட்டிடங்களும், நடவடிக்கைகளும் எவ்வளவு மேன்மையான முறையில் இருக்கின்றன தெரியுமா? இன்னும் போகப் போக எவ்வளவோ முன்னேற்றங்கள் ஏற்படுவது நிச்சயம்."

"ஏதோ ஹரிஜனங்கள் சேரிக்குச் சென்று அவர்களுக்குத் தலை பின்னிவிட்டு, துணியை

அன்றுடம் தோய்த்துக் கட்டச் செய்து, வீட்டையும் தேகத்தையும் சுத்தமாக வைத்கொள்ளும்படி செய்யப் பிரயத்தனம் செய்து வருகிறாள்'' என்று பேபரில் பெயர் அடிபடுகிறதே அந்த ஆசாமிதானா நீ சொல்வது?''

''அதே அம்மாள் தான். தற்சமயம் மீனாக்ஷியும் பார்வதியும்கூட அந்தத் தொண்டில் பயிற்சி பெற்று வருகிறார்கள்''

''அப்படியானால் ஆசாரங்கள் எப்படி?''

''ஆசாரத்திற்குத் தற்சமயம் யாதொரு பங்கமுமில்லை. அவ்விடம் சென்று வேலை செய்து விட்டு வந்த பின்பு ஸ்னானம் செய்து விட்டே ஆகாரம் சாப்பிடுவார்கள். அஞ்சலி தேவியின் கொள்கை என்னவென்றால் அவரவர்கள் சொந்த விஷயத்தில் இஷ்டம்போல் நடக்க வேண்டுமே தவிர, நிர்ப்பந்தத்தில் ஒரு காரியமும் செய்யக்கூடாது என்பதே. பொது விஷயங்களில், ஜாதி, மத, ஆசாரங்கள் ஒன்றும் கொண்டாடக் கூடாது. அந்த இடத்தில் யாவருக்கும் ஒன்றுபோலவே தான் யாவும் நடக்கும். ஓரே உதாரணம் சொல்கிறேன். அதிலிருந்து அவளின் கொள்கை எத்தகையது என்பது புலப்பட்டு விடும். ஆச்ரமத்தில் ஓர் விசேஷம் என்றால் சமபந்தி போஜனம் என்பது ஏற்பாடு. ஆனால் யாவரையும் கட்டாயப்படுத்துவதில்லை. இஷ்டமில்லாதவர்களை, வெவ்வேறு வேலைகளில் நியமனம் செய்து பார்ப்பவர்களுக்கு வித்யாசம் தோன்றாமல் செய்து விடுவாள். தினசரி நடவடிக்கைகளில் ஆச்ரமத்தில் சாப்பிட இஷ்டமில்லாத பேர்களுக்கு, ஓர்வித 'சம்பளம்' என்று நிர்ணயம் செய்து அதைக் கொடுத்து விட்டு வெளியில் இஷ்டமான இடத்தில் சாப்பிடும்படி சொல்லிவிடுவாள். அவள் சொல்லுவாள்: ''என் பெண்ணே, பிள்ளையோ தாழ்ந்த வகுப்பினர் என்று சொல்லப்படும், பெண்ணையோ, பிள்ளையையோ, காதலித்து விட்டேன்'' என்றால் 'தாராளமாகச் செய்து கொள்ளுங்கள், பிறகு உங்கள் வழிவேறு, என் வழி வேறு. அவரவர் பாதையில் சுகமாக நடந்து செல்லலாம். அப்படி நான் செய்ததற்காக மற்றவர்களையும் செய்யும்படி நிர்ப்பந்தப் படுத்துவது என்பது எப்படி சீர்திருத்தமாகும்? காமாக்ஷியைப் போன்றவர்களுக்குச் சமூகமோ சொந்த மனிதர்களோ ஓர்வித சீர்திருத்தத்தையும் செய்யமாட்டார்களென்பது உண்மையிலும்

உண்மை. அப்படிப்பட்டவர்களுக்கு அவர்களின் மனதின் தன்மைக்கேற்றவாறு ஓர் வழி ஏற்படுத்துவதே எனது லக்ஷ்யம். மீனாக்ஷி, பார்வதி விஷயத்திலும் அவர்கள் மனப்போக்கிற்கு ஒத்தபடியே நடக்க அனுமதியளிப்பேனே தவிர, என் லக்ஷியத்திற்காக அவர்களை நடக்கும்படி சொல்லமாட்டேன்" என்பாள்.

''சரிதான்; லக்ஷ்மணனுக்குப் பளுவிட்ட மாதிரிதான். காமாக்ஷி அஞ்சலி தேவியின் உதவியினால் ஆடிப்பாடி, காலங் கழிக்கப் போகிறாள். மீனாக்ஷியும் பார்வதியும் சமூக சேவையில் ஈடுபடப் போகிறார்கள். யாவருக்கும் அஞ்சலிதேவி, அபயம் கொடுக்கிறாள். அப்பொழுது நீங்களிருவரும் வந்து விடலாமே. முயற்சி செய்து பழைய உத்யோகத்தையே பெற்றுக்கொள்ளலாம்.'' என்றான் கிட்டா.

"அதெப்படி முடியும்? எடுத்த காரியத்தைப் பூர்த்தி செய்யாமல் விட்டு விடுவது என்பது அவ்வளவு சுலபத்தில் நடக்கக் கூடிய விஷயமா? தற்சமயம் எங்களுக்குக் கஷ்டம்



என்று சொல்லக்கூடிய அளவில் நிலைமை மோசமாகவில்லையே."

"மோசமான நிலைமை, ஒன்றுமில்லை. தான் பெற்ற குழந்தையைப் பார்க்கத் தைரியமில்லாத நிலைமையில் இருப்பதைத் தவிர."

"அதுகூட அவனது நன்மைக்காகத்தான். பெற்ற கடமைக்கும் அது ஒரு தியாகம்."

"நல்ல தியாகம், ஸ்டேஷன் வந்துவிட்டது. பிறகு பேசிக்கொள்வோம்" என்றான் கிட்டா.

* * *

குழந்தையை அழைத்துக்கொண்டு வந்து வெயிட்டிங் ரூமில் பார்க்கும்பொழுது லக்ஷ்மியைக் காணவில்லை. ஒரு குஜராத்தி மாது மாத்திரம் உட்கார்ந்திருந்தாள்.

"இவ்விடமிருந்த அம்மாள் எங்கேயென்று தெரியுமா"? என்றான் கிட்டா.

"அதோ அவ்விடம் போனாள்" என்று அரைகுறை தமிழில் பதில் சொல்லிய வண்ணம் ஒரு திசையைக் கையினால் சுட்டிக் காண்பித்தாள்.

"தாங்கள்" என்று சொல்லிவிட்டுத் திரும்பும் சமயம், "பாபூ! அந்தப் பச்சாவை என்னிடம் விட்டுச் செல்லுங்கள். நீங்கள் வரும் வரை அவனிடம் விளையாடிக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, ஒரு பதுமையையும், ஒரு பிஸ்கட் பாக்கெட்டையும் எடுத்துக் குழந்தையின் பக்கம் நீட்டினாள். ஆவலுடன் வாங்கிக்கொண்ட குழந்தையைத் தன்னருகில் இழுத்து அணைத்து முத்தமிட்டாள்.

"இது யாரிவள்? குழந்தை அவளுடன் இருப்பானா? விட்டுச் செல்லலாமா?" என்று கிட்டா யோசிக்கும் சமயம்,

"நீ என்னுடன் அவர் வரும் வரையில் இரு. இன்னும் பெப்பர்மெண்ட், சட்டையெல்லாம் தருகிறேன். இருக்கிறாயா?" என்றாள் குஜராத்தி மாது.

"இருக்கேன் மாமி" என்றான் குழந்தை.

"இதென்ன விந்தை? முன்பின் தெரியாதவளுடன் குழந்தை இருக்கிறேன் என்று சொல்லுகிறானே" என்று எண்ணமிட்டவாறே அவனையே வெறிக்கப் பார்த்த வண்ணம் நின்ற கிட்டாவை அவள் கவனிக்காமல் குழந்தையுடன் கொஞ்சியவண்ணம் இருந்தாள்.

சற்றுப் பொறுத்து "முரளீ நான் அப்படிப் போய்விட்டு வரட்டுமா?" என்றான் கிட்டா.

"உம்" என்றான் திரும்பாமலே முரளீ.

"பாபூ, கவலையில்லாமல் போய் வாருங்கள். என்னைப் பிறகு பார்க்கலாம்" என்றாள் திரும்பி அவனைப் பார்த்து.

"ஓ! அச்சா! நான் வருகிறேன்" என்று சிரித்தவண்ணம் கூறிக்கொண்டே வெளியே சென்றான் கிட்டா.

"ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பி வந்த கிட்டாவினிடம் அந்த அம்மாள் வரவில்லையா?" என்று கேட்டாள் குஜராத்தி மாது.

"அந்தம்மாளைப் பார்த்தாய் விட்டது. அந்த அம்மாள் வந்த வேலை முடிந்து விட்டது. நான் குழந்தையைக் கொண்டுபோய் விட்டுவிட்டு வருகிறேன். அவர்கள் வந்த பின்பு இவ்விடமே இருக்கச் சொல்லுங்கள்" என்றான் கிட்டா,

"ஓ, அப்படியே செய்கிறேன்" என்றாள் அவள்.

"சித்தப்பா, அந்த மாமி ரொம்ப நல்லவள். இந்தப் பையில் பாரு. சட்டைத்துணி, ட்ராயர் துணி, பிஸ்கட் டின், பெப்பர்மெண்ட் சாக்லெட், பந்து, ஊதல், பொம்மை எல்லாம் வைத்திருக்காள். இதைப் பார் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுபோகவும் தோளில் மாட்டிக்கொள்ளவும் மூடி பக்கிள்ஸ் போடவுமாக அழகான பை, அப்புறம் இந்த டப்பா நிறைய மைசூர் பாகு, ஏன் சித்தப்பா, இந்த மாமியை உனக்குத் தெரியுமா?" என்று போகும் வழியில் குழந்தை முரளீ ஒரு கேள்வியில் முடித்தான்.

"எனக்குத் தெரியும். அந்த மாமிக்கு உன்னைப்போல ஒரு பிள்ளை இருக்கிறான். அவன் படிப்பதற்காக இந்த மாமியை விட்டுவிட்டு. ரொம்ப தூரத்தில் தாதா, பாட்டியினிடமிருக்கிறான். உன்னைப் பார்த்ததும் அவள் பிள்ளையைப் பார்த்ததுபோலிருந்ததாம். அதனால்தான் உனக்கு இவைகளெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறாள்.

"அதானா அந்த மாமி என்னைக் கட்டிக்கிண்டு கண்ணுலே ஜலமா விட்டு அழுதா சித்தப்பா! பாவம்! அவள் பிள்ளைகிட்டே ஏன் போகக் கூடாது? போக முடியாதா?"

"முடியும். இப்பொழுது இந்தப் பக்கத்தில் ஒரு வேலையாக வந்திருக்கிறாள். அது முடிந்ததும் போய்ப் பார்ப்பாள்"

'அவள் பிள்ளையை சுருக்கப் பார்க்கணும்னு நம்ம ஐயனாரப்பனை வேண்டிக்கொள்ளறேன் சித்தப்பா!" என்றான் முரளி.

"தண்டவாளத்திற்கு அப்பாலுள்ள வயல் வெளிகளை, வெயிட்டிங் ரூம் ஜன்னல் வழியாகப் பார்த்தபடி, சுற்றுப்புறத்துச் சிந்தனையற்று உட்கார்ந்திருந்த லக்ஷ்மியின் கவனத்தை, "மன்னி, புத்ரவாத்ஸல்யம் மிகுந்ததா? தியாகம் மிகுந்ததா?" என்ற கிட்டாவின் குரல் திருப்பிற்று.

"தியாகந்தான் மிக முடியும்" என்றாள் அமைதியாக நீண்ட மூச்சுடன்.

"அது தான் தெரிகிறதே நீண்ட மூச்சில். அது போகட்டும். இந்த யோசனை எப்படி உதித்தது? ஆச்சர்யம்தான்!"

"நீங்கள் எப்படிக் கண்டு கொண்டீர்கள்? அதுவும் ஆச்சர்யம்தானே?"

"பெண்கள் நாலு இடத்தில் பழகுவதினால், சமயோசித புத்தியும், தைரியமும் நிச்சயமாக ஏற்படும் என்பது உண்மையிலும் உண்மைதான். இவ்வூரிலிருக்கும் வரை வெளியுலகப்பற்றேயில்லாமலிருந்தாய். நாலு வார்த்தை சேர்ந்தாற்போல் கோவையாகப் பேச வராது. 'உண்பதும் உறங்குவதும் வேலை செய்வதுமே நமது கடன்' என்று உழைத்தாய். அவ்விடம் சென்று நாலு பேருடன் பழகி, நாலாவிதப் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொண்டதினால்தானே இந்த வேஷம் போட முடிந்தது. முதலில் என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. திரும்பியபொழுது உன் கண்களைப் பார்த்ததால், கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டது. குழந்தையை அணைக்கக் கையை நீட்டியபொழுது பச்சை குத்தினது தெரிய வே சட்டென நீ தான் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டேன்."

"பெற்ற மனதின் சபலம்; குழந்தையைக் கண்ணால் பார்ப்பதுடன் திருப்தியடையாது போலிருந்தது. அதனாலேயே இம் முறையைக் கையாண்டேன். இப்பொழுது லஜ்ஜையாகக்கூடத் தோன்றுகிறது."

"இதில் லஜ்ஜைப்பட என்ன இருக்கிறது? அது போகட்டும். நாம் இனி பிரிய வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நல்ல காலமாக உனது ரயில் முன்னதாகப் புறப்படுகிறது. லக்ஷ்மணனை எப்பொழுது பார்க்கிறது? ஆவலை அடக்கிக் கொண்டிருக்கிறேன். நான் வந்தால் எப்படியாவது அவன் இருப்பிடம் தெரிந்து விடுமென்றுதான் நான் வரவில்லை. எப்படியும் அடுத்த வருஷம் பார்த்தேயாக வேண்டும். அதற்கும் ஏதாவது முறையைக் கையாள வேண்டும். அவனை ஏதாவது ஒரு ஊருக்குச் வரச்சொல்லிவிட்டு, நானும் அதே ஊருக்குச் சென்று பத்து நாட்களாவது சேர்ந்திருக்க வேண்டுமென்பது எனது அவா. பகவான் பூர்த்தி செய்யவேண்டும்" என்று சொல்லும் பொழுதே கண்களில் நீர் நிறைந்தது.

[தொடரும்]

ஆரோக்கியமான, சிறந்த, ருசியான, உணவிற்கும், ஊறுகாய்களுக்கும் அவசியமானது ?

எங்கள்
டெக்கான் குவீன்
மார்க்
மிஸ்கி
பெருங்காயமே
காரம், குணம், மணம், ருசி இவைகளில் உயர்ந்தது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

நாராயணதாஸ் கேஸர்தாஸ் & சன்ஸ்,
17, கோவிந்தப்பநாயக்கன்தெரு, மதராஸ்.
ஹெட் ஆபீஸ்:- வட்காடி, பம்பாய். பிராஞ்சு:- பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

டிகிரீப் பால்

C.V. ராமகிருஷ்ணன்

பத்து மணிக்குக் கையில் டிபன் பையை எடுத்துக்கொண்டு ஆபீஸிற்குக் கிளம்புவதற்கும் தபால்காரன் கையில் ஒரு கடிதத்தை நீட்டுவதற்கும் சரியாக இருந்தது. கடிதத்தைக் கண்டதும் ஏற்படும் அலாதியான குஷியில் டிபன் பையைத் தூக்கி எறிந்துவிட்டு, கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தேன். கும்பகோணத்துக்கு அருகில் உள்ள சுவாமிமலையில் என் மைத்துனிக்குக் கலியாணம் நிச்சயித்திருப்பதாகவும், நான் வந்து கலியாணத்தை நடத்திவைக்க வேண்டும் என்றும் என் மாமனார் கேட்டுக்கொண்டு கடிதம் எழுதியிருந்தார். லீவ் எடுப்பதற்கு ஏதாவது சாக்கை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நான் உடனே என் பாட்டியைச் சாக அடித்துவிட்டு, (வேறொன்றுமில்லை. பாட்டி இறந்துவிட்டதாகக் கூறி ஒருவாரத்திற்கு லீவ் எழுதி போட்டுவிட்டு) கும்பகோணத்திற்குக் குடும்ப சகிதமாக வண்டி ஏறினேன்.

வீட்டிற்கு மூத்த மாப்பிள்ளை என்ற ஹோதாவில் எல்லாக் காரியங்களையும் இழுத்துப் போட்டுக்கொண்டு மங்கு மங்கு என்று இராப்பகலாக உழைக்கலானேன். கலியாண தினத்தினன்று காலை மாப்பிள்ளை வீட்டினின்றும் ஒரு பிராம்மணர் ஓடிவந்து, ஒரே அடியாகக் கத்த ஆரம்பித்துவிட்டார். எல்லோரும் நடுங்கிக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாது விழித்தபடி நின்றுகொண்டிருந்தனர். வெத்திலை பாக்கு செக்ஷனில் நின்றுகொண்டிருந்த நான் சப்தத்தைக் கேட்டுக் கூடத்திற்கு ஓடிவந்து என்ன விஷயம் என்று விசாரிக்கலானேன். "என்னய்யா, பசும்பால் காபி அனுப்பச்சொன்னால் பச்சைத் தண்ணீர் காபி அனுப்பித்திருக்கிறீர். நல்ல காபிக்கு வக்கு இல்லையென்றால் கலியாணம் ஏன் செய்யணும்" என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுக்கே அலாதியான பாணியில் பேச ஆரம்பித்தார். "சரி, இன்னும் கொஞ்ச நாழியில் நல்ல டிகிரி காபி அனுப்புகிறேன். அதைச்சாப்பிட்டுவிட்டு எல்லோரும் கலியாணத்திற்கு வந்து சேருங்கள்" என்று சொல்லி அவரை அனுப்பிவைத்துவிட்டு, சமையலறையை நோக்கி நடையைக்கட்டினேன். "என்ன அண்ணாசாமி அய்யர், பசும்பால் காபி கேட்கிறார்களென்று, எருமைப் பாலில் கணக்குத் தெரியாமல் ஜலத்தை விட்டு விட்டீர்கள் போல் இருக்கின்றதே" என்று சமையல்காரரைக் கேட்டேன். "என்ன ஸ்வாமி, எருமைப் பாலிலாவது தண்ணீரை விடுவதாவது, நம் பால்காரனே எருமைப்பாலைத் தண்ணீர் கலந்த பசும் பால் மாதிரி தானே மாற்றிக்கொண்டு வருகிறான். அதில் நாம் இன்னும் தண்ணீர் கலந்தால், ஜலத்தை விட மோசமாக மாறிப்போய் விடுமே என்று பாலில் இன்னும் ஜலத்தை விட முடியவில்லையே" என்று குறைபட்டுக்கொண்டார். இதற்குள் என் மாமனாருக்குக் கலியாணம் நடக்கவேண்டுமே என்ற கவலை. "என்ன மாப்பிள்ளை, எப்படியாவது மாப்பிள்ளை வீட்டாருக்கு நல்ல காபி அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்" என்று காலில் விழாத குறையாகக் கேட்டுக்கொண்டார், திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. மாமனாரை மற்றக் காரியங்களைப் பார்க்கச் சொல்லிவிட்டு, சமையல்காரரைக் கூப்பிட்டுக்கொண்டு மாடிக்குச் சென்றேன். அவசரத்திற்காகக் கெண்டுவந்திருந்த பால் பொடியை அவரிடம் கொடுத்து, பக்குவப் படுத்திக்

காபியில் கலக்கச் சொன்னேன். அரை மணி நேரத்திற்குப் பிறகு மாப்பிள்ளை வீட்டார் அனைவரும் அமர்க்களமாக வந்து சேர்ந்தனர். காலையில் கத்தின பேர்வழி கன காரியமாக என்னிடம் ஓடி வந்து உறவு கொண்டாட ஆரம்பித்து விட்டார். "ஸார், நீங்கள் இல்லை என்ருல் இந்தப்பசங்கள் நாறிப் போய்விடுவார்கள் ஸார், அடாடா! நீங்கள் அனுப்பித்த காபி என்ன பஸ்ட்க்ளாஸாயிருந்தது தெரியுமா? இம்மாதிரி பால் காபி இது வரையில் குடித்ததே கிடையாது" என்று பிரமாதமாக நான் அனுப்பிவைத்த காபியை வர்ணிக்க ஆரம்பித்துவிட்டார். அதற்குள் கலியாணத்திற்கான கெட்டி மேளம் கொட்டவே, மெதுவாக அந்த இடத்தை விட்டு நழுவிவிட்டேன்.

கலியாணம் முடிந்து அனைவரும் களைப் படைந்திருந்தனர். என்ன தான் மாப்பிள்ளை வீட்டாரைப் பவுடர் பாலைக் கலந்து ஏமாற்றி விட்டாலும், எனக்கு நல்ல டிகிரி காபி சாப்பிட வேண்டும் என்று சபலம்தட்ட ஆரம்பித்தது. களைப்பையும் கவனிக்காது கும்பகோணத்தை நோக்கி நடையைக் கட்டினேன். ராமச்சந்திர அய்யர் ஹோட்டலில் எப்பொழுதும்போலக் கும்பல் நிறைந்து இருந்தது. முதலாளியின் டேபிளுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன், டிகிரி காபிக்கு ஆர்டர்கொடுத்து விட்டுச் சற்று திரும்பினேன். முதலாளி யாரோ ஒரு மைனருடன் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தார். அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது காபி வந்து விடவே அதைக் குடிக்க ஆரம்பித்தேன். காபியை வாயில் வைத்ததுமே ஆத்திரம் வர ஆரம்பித்து விட்டது. கும்பகோணம் டிகிரி காபியை நினைத்துக் கொண்டு வந்தவனுக்குத் தண்ணீர் காபி கிடைத்தால் எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும்? உடனே காபியை வைத்து விட்டு முதலாளியுடன் சண்டை பிடிக்க ஆரம்பித்தேன். நான் பேசுவதற்குள் முதலாளியே என்னை முந்திக் கொண்டுவிட்டார். "டேய் பார்த்தாயா, டிகிரிப் பாலை விடும் பொழுதே காபி இவ்வளவு அழகாயிருந்தால், சாதாரண பால் காபி எப்படி இருக்கும் பார். உன்னுல் என் வியாபாரமே கெட்டு விடும் போல் இருக்கிறதே" என்று அந்த மைனரைப் பார்த்து ஒரு கூச்சல் போட்டு விட்டு, நான் இருக்கும் இடத்திற்கு வந்து விட்டார். "ஸார், இவன் சின்ன பையனுயிருந்த பொழுதிலிருந்து பால் கொடுத்துக் கொண்டு வருகிருன். சொக்காய் போடாமல் இருந்தவன் இப்பொழுது ஜிப்பா, வைர மோதிரம் முதலியவைகள் இல்லாமல் வெளியில் கிளம்ப மாட்டேன் என்கிறுன். பாலில் தண்ணியை விட்டே பணம் சம்பாதித்து மாடி வீடு கட்டி விட்டான் ஸார்" என்று ஆரம்பித்தார்.

"ஏன் ஸ்வாமி, அநியாயமாய்ப் புளுகுகின்றீர். தினம் தான் பாலில் மெஷினைப் போட்டு டிகிரி பார்த்துத் தானே வாங்குகின்றீர். நீங்கள் உள்ளே தண்ணீரைக் கலந்தால் நான் என்ன செய்வது?" என்று மைனர் சட்டம் பேச ஆரம்பித்துவிட்டான்.

"ஸார், தினம் டிகிரி பார்த்துத்தான் பால் வாங்குகிறேன். ஆனுல் பால் என்னவோ நிறக்கவே மாட்டேன் என்கிறது. இதில் தண்ணீர் விடவும் முடிவதில்லை. இந்தப் பசங்கள் ஏதோ திருட்டுத்தனம் செய்யருன்கள். கண்டு பிடிக்க முடியவில்லை" என்று சசந்து கொண்டார். மற்ருெரு கப் காபி இனமாகக் கிடைக்கும் என்று தெரியவே பாலைப் பற்றி எனக்குத் தெரிந்ததை அவருக்குக் கூறலானேன்.

"தற்சமயம் பால் சுத்தமானதா என்று பார்ப்பதற்கு அதனுடைய குருத்வம் (Density), அதில் உள்ள வபையின் அளவு (Fat), அதன் உருகு நிலை (Free--zing point), வபையில்லாத இதர சத்துக்களின் அளவு (Solid not Fat) முதலியவைகளை நிர்ணயிக்கின்றனர். உதாரணமாக, எருமைப் பாலாக இருப்பின், வபையின் அளவு 6·5 சதவிகிதத்திற்குக் குறையாமலும், பசும் பாலாக இருப்பின் 5.0 சதவிகிதத்திற்குக் குறையாமலும் இருக்க வேண்டும். பாலின் குருத்வம் தண்ணீரை விட 1.030 பாகம் அதிகமாக இருத்தல் நலம். மேலே கூறிய நான்கும் ஒரு அளவிற்குக் குறைந்து இருந்தால் அதில் நீர் கலந்திருப்பது முதலியன நன்கு தெரிய வரும். தற்சமயம் ஹோட்டல்களில் பால் மானியை (Lactometer) உப

யோசித்துப் பாலில் தண்ணீர் இருப்பதைக் கண்டு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றனர். சிறிது காலத்திற்குப் பால்காரர்கள் இந்த மானியைப் பற்றி ஒன்றும் தெரியாததால் சுத்தப் பாலைக் கொடுத்து, கொஞ்ச காலத்திற்குத் தண்ணீர் சேர்க்க முடியாத காரணத்தினால் நஷ்டம் அடையவேண்டியிருந்தது. பின்னர் பால் மானியில் தண்ணீரைப் பாலுடன் கலந்த பிறகும் அதே அளவைக் காண்பிக்க என்ன வழியிருக்கின்றது என்று கண்டு பிடிக்க ஆரம்பித்தனர். தற்சமயம் மாவு (Starch), பவுடர் பால் முதலியவைகளைத் தண்ணீர்ப் பாலுடன் கலந்து பால் நல்ல பாலைப் போன்று தோற்றமளிக்கச் செய்கின்றனர். பால் மானியில் வேண்டிய அளவைக் காண்பிக்கும்படியும் செய்து விட்டதால் ஹோட்டல்காரர்கள் பால்காரர்களைக் குற்றம் சொல்ல முடிவதில்லை. அதே சமயம் பால் நிறக்காத காரணத்தினால் ஹோட்டல்காரர்கள் ஜனங்களிடம் கெட்ட பேர் வாங்குகின்றனர். பால்காரர்களோ பால் மானியை ஏமாற்றி வெற்றி கண்ட குஷியில் கும்மாளம் போடுகின்றனர். ஹோட்டல்காரர்கள் பாலை ஆராய்ச்சி செய்ய ஒவ்வொரு நாளும் கிண்டி ஆராய்ச்சிச் சாலைக்கு அனுப்ப முடியாது. ஆகவே பாலை ஆராயச் சுலபமான கருவி (Apparatus) ஏதாவது கண்டு பிடிக்கப்படும் வரையில் அவர்கள் பாடு திண்டாட்டம் தான். ஹோட்டல்காரர்களை ஏமாற்றுவதைப் போலவே மயிலாப்பூரைப் போன்ற இடங்களில் உள்ள பெரிய மனிதர்களையும் பால்காரன் ஏமாற்றி விடுகிறான். கண்ணுக் கெதிராக மக்களை ஏமாற்றும் வித்தையில் தற்சமயம் பால்காரர்கள் சிறந்து விளங்குகின்றனர். இதற்கு ஒரு வழி கண்டுபிடித்தால் ஒழியக் கதி மோக்ஷம் கிடையாது. இதற்காகப் பம்பாயில் அரசாங்கத்தாரே பால்காரர்களிடமிருந்து பாலை வாங்கி, ஆராய்ந்து பின்னர் மக்களுக்கு விநியோகிக்கின்றனர். இன்னும் ஐந்து வருட காலத்தில் அரே என்ற இடத்தில் 11000 மாடுகளைச் சொந்தமாக வைத்துக் கொண்டு அரசாங்கமே சிறந்த ஆட்களை ஏற்படுத்தி, அவர்கள் மேற்பார்வையில் பால் கறப்பது, விநியோகிப்பதுமுதலியன நடக்கும்படி ஏற்பாடு செய்யப்போகின்றனர். இதற்கு அநேக கோடி ரூபாய்கள் செலவாகப் போகின்றன. தவிர மக்களின் தொகை அதிகமாக இருப்பதாலும் பல்வேறு இடங்களில் அவர்கள் பரவியிருப்பதாலும் தனிப்பட்ட பால்காரர்கள் ஒருஅளவிற்குப் பால் வியாபாரத்தை நடத்திக்கொண்டுதான் இருப்பார்கள். ஆகவே அரசாங்கப் பால் விநியோகிக்கும் திட்டம் மிகவும் சிறந்த திட்டமாயிருப்பினும், ஒவ்வொரு நகரத்திலும் மக்கள் சுலபமாகப் பால் கலப்பைக் கண்டுபிடிக்க உபயோகப்படக்கூடிய ஒரு கருவியைக் கண்டு பிடிக்க வேண்டும். பின்னர் இந்தப் பால்காரர்களின் கொட்டம் அடங்கிவிடும்."

"ஸார், நீங்கள் ஏதாவது ஒரு கருவியைக் கண்டுபிடியுங்கள். அதற்கு எவ்வளவு செலவானாலும் நான் தருகின்றேன். இந்த பசங்கள் கொட்டம் எப்படியாவது அடங்கினால் தேவலை" என்று இடை மறித்துப் பேசினார் ராமச்சந்திர அய்யர்.

"கொஞ்சம் பொறுங்கள் ஸார். பெங்களூரில் உள்ள ஆராய்ச்சிச்சாலையில் ஒரு புது முறை மூலம் பால் கலப்பைக் கண்டு பிடிக்க முயன்று வருகின்றனர். சிறியதைப் பெரியதாகக் காட்டும் சூக்ஷ்ம தரிசினி (Microscope)யைப் போன்ற ஒரு கருவி இருக்கின்றது. அதற்கு



aa, bb } குறுக்குக் கம்பிகள்

X = வெள்ளைப் பாகம்

Y = கறுப்புப் பாகம்

cc — பிரிக்கும் கோடு

வக்ரமானி (Refractometer) என்று பெயர். அதன் அடியில் உள்ள சிறிய கண்ணாடியில் ஒரு துளி பாலை வைத்து மூடி மேல் வழியாகப் பார்த்தால் ஒரு வட்டத்தில் பாதி வெள்ளையாகவும், பாதி கறுப்பாகவும் தெரியும். அந்தக் கருவியில்

உள்ள உருளையை உபயோகப்படுத்தி வெள்ளைப் பாகத்தையும், கறுப்புப் பாகத்தையும் பிரிக்கும் கோடு அந்தக் கருவியில் தெரியும் குறுக்குக் கம்பிகள் சந்திக்கும் (Cross Wires) புள்ளியில் இருக்குமாறு செய்ய வேண்டும். அந்தக் கருவியிலே பதிக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கையை நேராக வாசிக்கலாம். இந்த எண்ணிக்கைக்கு வக்ரீய அளவு (Refrac-tive Index) என்று பெயர். இந்த முறையை உபயோகப் படுத்தி ஒரு நிமிஷத்திற்குள் பாலின் வக்ரீய அளவை (Refractive Index of the Milk) கண்டு பிடித்து விடலாம். [ஒளியானது ஆகாயத்தினின்றும் பாலில் பாயும் பொழுது தன் பாதையை விட்டு நகர்ந்து வக்ரீகரித்துச் செல்லுகின்றது. அதன் வக்ரீய அளவு பாலைப் பொறுத்து உள்ளது.] பாலின் வக்ரீய அளவினின்றும் பாலின் கலப்பைக் கண்டு பிடிக்கலாம். ஒரு வருட காலத்திற்குப் பலவித எருமை பசுமாடுகளை வளர்த்து, பலவிதத் தீனிகளைக்கொடுத்து, அந்தப் பாலின் வக்ரீய அளவு, காலம், தீனி, ஜாதி, வயது முதலியவைகளுக்கு ஏற்ப எவ்வாறு மாறுகின்றது என்று கண்டுபிடித்திருக்கின்றனர். தவிர தண்ணீர், பவுடர்பால், சர்க்கரை மாவு முதலியவைகளைச் சேர்த்தால் பாலின் வக்ரீய அளவு மாறுகின்றது. மேற்கூறிய ஆராய்ச்சி பெங்களூரில் நடந்தது. ஆனால் இந்தியாவில் பல்வேறு இடங்களில் ஆகாரம், ஜாதி, சீதோஷ்ணம் முதலியவைகள் வெவ்வேறாக இருப்பதால் பெங்களூரினின்றும் ஆராய்ச்சியாளர் ஒருவர் இந்தியாவின் பலபாகங்களுக்கும் சென்று இந்த முறை மூலம் கலப்பைக் கண்டு பிடிக்க முற்பட்டிருக்கின்றார். இன்னும் ஒரு வருட காலத்தில் இந்த ஆராய்ச்சியின் முடிவு தெரியும். பின்னர் இடம், காலம் முதலியவைகளுக்கு ஏற்ப, சுத்தமான பாலின் வக்ரீய அளவு (R. I. of Milk) மாறும் விதம் தெரிந்துவிட்டால், பாலில் எதைக் கலந்தாலும் ஒரு நிமிஷ நேரத்தில் வக்ரமானியைக் கொண்டு கண்டு பிடித்து விடலாம். அப்பொழுது பால்காரர்கள் அரசாட்சி ஒழிந்து, மறுபடியும் பால் சாப்பிடுபவர்கள் அரசாட்சி தழைத்து ஓங்க ஆரம்பிக்கும்'' என்று கூறி முடித்தேன். அதற்குள் மணி ஆகிவிடவே பில்லைக் கொடுப்பதற்காக எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கேட்டேன்.

''நன்றாயிருக்கு உங்களிடம் பணம் வாங்குவதா. இந்தாங்கோ, கையில் 500 ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கருவி ஒன்று வாங்கி அனுப்பி வைத்தால் உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு என்று கூறி, என் பையில் ஒரு கத்தை நோட்டைத் திணித்து என்னை வழி அனுப்பினார்.

கொஞ்ச தூரம் சென்றவுடன் யாரோ கூப்பிடும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். பால்காரன் ஓடி வந்து கொண்டிருந்தான். ''ஏதடா இது, நம்மை உதைத்து வைக்கப் போகின்றானே என்று பயந்து கொண்டு தயங்கி நின்றேன்'' ''சாமி, நீங்க தான் என்னைக் காப்பாத்தணும். நான் செய்யற அக்ரமம் உங்களுக்கு நன்றாத் தெரிஞ்சு போச்சுங்கோ. இந்த ஹோட்டல்காரன்க கொடுக்கற பணத்துக்குக் கள்ளிச் சொட்டாட்டமா பால் கொடுத்தா கட்டி வருமா? நீங்களே சொல்லுங்கோ ஸார். எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா ஸார்?'' என்று ஆரம்பித்தான்.

''என்னப்பா வேணும்?'' என்று கொஞ்சம் தைரியமாகக் கேட்டேன்.

''தயவு செய்து அவரிடம் 500 ரூபாயை திருப்பிக் கொடுத்து விடுங்கள். அல்லது எப்படி நீங்கள் பால் கலப்பைக் கண்டு பிடிக்கக் கருவியைக் கண்டு பிடித்திருக்கின்றீர்களோ. அதேமாதிரி நீங்களே அந்தக் கருவியைக் கொண்டு கண்டு பிடிக்க முடியாத வழியில் தண்ணீரைப் பாலில் கலக்கும் விதத்தைத் தயவுசெய்து ஆராய்ந்துசொல்லிவிடுங்கள் ஸார், ரூபாய் ஆயிரமானாலும் செலவழிக்கத்தயார்'' என்று அநாவசியமாக ஜிப்பாப் பையில் கையைப் போட்டு நோட்டுக் கத்தைகளை எடுக்க ஆரம்பித்தான். ''அப்பா, நீ கவலைப் படாதே; நான் என்னால் முடியுமானால் பார்த்து எழுதுகிறேன் என்று கூறி விட்டு ''தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்'' என்று நினைத்துக் கொண்டே அவனைத் திரும்பிப் பாராது நடையைக் கட்டினேன்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

198051

புதிய இரு சிறந்த

வாக்ஸால் கார்கள்



வெலாக்ஸ் 6 - (18-H. P.) குறைந்த பெட்ரோல் செலவில் சிறந்த உழைப்பு. மணிக்கு 75 மைல் வேகம். பெட்ரோல் காலன் ஒன்றுக்கு 25 முதல் 28 மைல்கள் வரை போகும்.



வைவர்ன் 4 (12 H. P.) மிகச் சிக்கனமுள்ள உயர்தர வண்டி. மணிக்கு 64 மைல் வேகம். பெட்ரோல் காலன் ஒன்றுக்கு 33 முதல் 35 மைல்கள் வரை போகும்.

தென்னிந்தியாவுக்கு விற்பனை உரிமையாளர்கள்:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் லிமிடெட்,

மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, புதுக்கோட்டை.

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்,

மவுண்ட் ரோடு, சென்னை.

Regd. No. M. 4405 CAUVERI

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1949
MADRAS

The Cauveri Colour Press, Kumbakonam.